# என்னே என் ஆனந்தம்!

**ஜே. சி. சோட்**
பிரதம ஆசிரியர்



ஒரே மெய்த்தேவன் உண்டு என்றும் அறியும் பொழுது அது எவ்வளவு பெரிய ஆனந்தம்! அவர் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தவர், இன்னமும் ஆளுகை செய்கிறார், எல்லாவற்றின் மேலும் அதிகாரம் உள்ளவராக இருக்கிறார் என்றும் அறியும் பொழுது, அது எவ்வளவு பெரிய ஆனந்தம்! கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்றும், நாம் இரட்சிக்கப்பட, சிலுவையில் மரித்து தம்மை ஒப்புக் கொடுத்தார் என்றும் அறியும் பொழுது எவ்வளவு பெரிய ஆனந்தம்! வேதாகமத்தைப் படித்து கற்றுக் கொண்டு, அது தேவாவியினால் அருளப்பட்டது என்றும், நமக்கு கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது என்றும் அறியும் பொழுது என்ன ஆனந்தம்! சுவிசேஷத்தை அறிந்தவர்களாகவும், பாவ மன்னிப்புக்கென்று அதின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்கும் பொழுது என்ன ஆனந்தம்!

கிறிஸ்தவனாக, தேவனுடைய பிள்ளையாக, கர்த்தருடைய நாமத்தை தரித்துக் கொண்டவனாக, அவருக்கு சாட்சியாக இருப்பது எவ்வளவு பெரிய ஆனந்தம்! கர்த்தருடைய குடும்பத்தில் அங்கமாகவும், உலகத்திலே மிக உயர்ந்த அமைப்பாகிய சபையிலே அங்கமாகவும் இருப்பது எவ்வளவு பெரிய ஆனந்தம்! வாரத்தின் முதல் நாளன்று அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வதும், அவர் வார்த்தையில் குறிப்பிட்ட கிரியைகளை அவர் மகிமைக்கென்று செயல்படுத்துவதிலும், அறிவிப்பதிலும், போதிப்பதிலும் என்ன ஆனந்தம்! கிறிஸ்துவின் ஜீவியத்தை ஜீவிப்பதிலும், அது ஒரு மேலான ஜீவிய வழி

என்று அறிவதிலும், அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆசீர்வாதத்தையும், நம்பிக்கையையும் அது தருகிறது என்று அறிவதிலும் எவ்வளவு பெரிய ஆனந்தம்!

தேவன், சிருஷ்டி கர்த்தர், அவர் தம்முடைய சிருஷ்டிகளுடன், தொடர்பு கொள்ளுகிறவர். தேவன் சர்வ ஞானி. ஆனால் மனிதனோ எப்பொழுதும் ஞானத்தோடு நடப்பவன் அல்ல, கர்த்தர் பூரணர், பாவமில்லாதவர். நாமோ பூரணமானவர்கள் அல்லர். நம்மிடம் பாவம் உண்டு; நம் குறைகள் மத்தியிலும், தேவன் நம்மில் அன்பு கூறுகிறார். நம்மீது அக்கறை உடையவராக இருக்கிறார். நம்மை இரட்சிக்கவும், ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார், ஆனால் இவைகளை நம்முடைய கால அட்டவணையின்படியல்ல. அவருடைய காலகட்டத்தின்படி செய்கிறார். அவர் என்ன செய்ய வேண்டும், செய்ய வேண்டாம் என்று அவருக்கு சொல்ல நாம் யார்? அவர் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தி, நாம் இரட்சிக்கப்பட சத்தியத்தை நாம் அறிந்து கீழ்ப்படியும்படியாக செய்திருக்கிறார். அதற்கு நாம் நன்றி மட்டும் செலுத்தக் கூடும்! ஏன் அது மட்டும் போதாதா? இவ்வுலகத்தில் அநேகர் சரியான வழியை விட்டு, எல்லா பொய் வழிகளையும் தெரிந்து கொள்கின்றனர். கர்த்தருடைய சித்தத்தை விட்டு, எல்லா உலக சித்தாந்தங்களையும் பின்பற்றுகின்றனர். நம்மை இரட்சிக்கவல்ல அவர் ஒருவரை மட்டும் தள்ளிவிடுகின்றனர்.

சபையிலும்கூட கர்த்தருடைய வழியைக் குறித்து சலிப்படைகின்றனர். அது கண்டிப்பான, நெருக்கமான வழி என்கின்றனர். அதை கேலி செய்கின்றனர், குறைவாக எண்ணுகின்றனர். கொள்கை பிடித்தம் இல்லாமலும், மாற்றவும் செய்கின்றனர். பழங்காலத்து இஸ்ரவேலர் தங்களைச் சுற்றியுள்ள தேசத்தாரைப் போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று சொன்னதைப் போல, கிறிஸ்தவர்களும் தங்களைச் சுற்றியுள்ள மற்ற மதத்தினரைப் போல இருக்க விரும்பி, அவர்களுக்கு தேவையானதை பிரசங்கித்தும், விரும்பியபடி ஆராதனை செய்தும், மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட ஆசையாயிருக்கின்றனர்.

இஸ்ரவேலர் தம்மை தள்ளிவிட்டால் ஒரு பெரிய விலையை கட்டவேண்டி இருக்கும் என்று அவர்களுக்கு இயேசு சொன்னார். நம்முடைய நாட்களிலும் அவரை தள்ளிவிடுபவர்கள், தங்கள்

ஆத்துமாக்களை இழக்கும் அளவுக்கு ஒரு விலையை கட்ட வேண்டி இருக்கும். அவர்கள் பிள்ளைகள் ஆத்துமாக்களும், ஏன்! பிற்கால சந்ததியின் ஆத்துமாக்களும்கூட இழக்க நேரிடும்.


கர்த்தர் ஒருவரே அந்த வழி என்று நாம் உணர வேண்டும். நமக்கு ஒரே ஒரு வழி உண்டு. அவருடைய மக்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள், உலகத்திலிருந்தும், மதவட்டாரங்களிலிருந்தும் வித்தியாசப்பட்டவர்கள் என்றும் உணர வேண்டும். அந்த ஒரே வழியில் மகிழ்ச்சியடையாதவர்கள், அதை விட்டு திரும்பி மனித யோசனைகளை பின்பற்றி, தங்களுக்கு அழிவை வருவித்துக் கொள்கிறார்கள்.

கர்த்தருடைய வழி பூரணமானது. அதற்கு சீர்திருத்தம் தேவை இல்லை. மனிதர்களாகிய நம்மிடம் தோல்வி, பலவீனம், தேவைகள் உண்டு. இந்த குறைகளுக்காக நாம் தேவனை குறை கூறக் கூடாது. அவர் கூறிய மாதிரி சரியாக ஜீவிக்க இயலவில்லை என்பதினால், அவருடைய சத்தியத்தின் நல்ல அமைப்பை மாற்ற முயலவும் கூடாது. நாம்தான் மாற வேண்டும். நம் வழியிலிருந்து, மனித வழியிலிருந்து கர்த்தருடைய வழிக்கும், பாவத்திலிருந்து நீதிக்கும், கீழ்ப்படியாமையிலிருந்து தேவபயத்துக்கும், அவிசுவாசத்திலிருந்து விசுவாசத்துக்கும் மாற வேண்டும். அதுமட்டும் அல்லாமல், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் செயலற்ற நிலையிலிருந்து கிரியை, சேவை செய்வதற்கும், பிரயோஜனமற்ற திட்டங்களை விட்டு, தேவனுடைய போதனையின் அடிப்படையில் கனிகொடுக்கின்ற காரியங்களை செய்வதற்கும், உட்கார்ந்தி ருத்தலிலிருந்து போவதற்கும், எதிர்மறையாய் இருப்பதிலிருந்து, நேர்மறையாய் இருக்கவும், அவிசுவாத்திலிருந்து விசுவாச ஜீவியத்திற்கும் மாற வேண்டும்.

அற்ப ஜனங்கள் கர்த்தரிடமும், அவர் வழியிலும் அதிருப்தி அடைந்து, தேவனையே திருத்த முயற்சிப்பது எவ்வளவு வேதனைக்குரிய காரியம் என்று பாருங்கள். அப்படி தேவனுடைய கொள்கையை எதிர்ப்பது, அவர் இம்மைக்கும், மறுமைக்கும் (பரலோகம்) ஆயத்தப்படுத்திய யாவற்றையும் இழக்க நேரிடும். நாம் மனந்திரும்பி, நம் கண்களை

கர்த்தருக்கு முன்பாக ஏறெடுத்து, நாம் அவர் விரும்புகிற காரியங்கள் எல்லாவற்றையும் செய்ய முன்வர வேண்டும். அவர் நோக்கத்தில் நாம் கண்ணும் கருத்துமாயிருந்தால், நமக்கு மகிழ்ச்சியும், திருப்தியும் உண்டாகும். எதிர்மறையான மனோபாவங்களுக்கு நம் நேரத்தை அனுமதிக்க மாட்டோம்.

கர்த்தரையும், அவர் வழியையும் நாம் ஏன் கேள்வி கேட்க வேண்டும்? நாம் குருடராக, எளிதில் ஏமாறக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. சத்தியம், சத்தியம் தான். தேவன் மாறாதவர். அது போல சத்தியமும் மாறாது. தேவனுக்கு சொந்தமானவர்களாக, அவருக்கு விசுவாசமுள்ளவர்களாக, அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடந்தால், இவ்வுலகத்தில் நாம் ரட்சிக்கப்பட்டவர்களாக, மறுமையிலும் நாம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்று பார்க்கும் பொழுது, அது எவ்வளவு பெரிய ஆனந்தத்தை கொடுக்கிறது! இதைத் தவிர சிறந்த வழி இல்லை. வேறு வழியும் இல்லை.



# ஆசிரியர் உரை



இறைமகன் இயேசுவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துக்கள். "சத்தியத்தின் குரல்" புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை அச்சிட்டு உங்களுக்கு வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். உதவிய அனைத்து அன்பர்களுக்கும் குறிப்பாக **J.C.** சோட் அவர்களுக்கும் எங்கள் நன்றி வாசக நண்பர்கள் எழுதிய பாராட்டு கடிதங்களு க்காகவும் விமர்சனங்களுக்காகவும் நன்றி.

தொடர்ந்து இப்புத்தகத்தை அச்சிட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். சத்தியத்தை சத்தியமாக, வேதாகமத்தில் உள்ளபடி, கருத்துமாறாமல் கட்டுரை எழுதி இருக்கிறார்கள் அனுபவமிக்க ஆசிரியர்கள்.

வேதாகமத்தை படித்து நீங்கள் தேவ சித்தத்தை கற்றுக் கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து, தேவ ஆசீர்வாதங்களைப் பெற, இப்புத்தகம் உங்களுக்கு ஒரு உபகரணமாக இருக்கும் என்று நம்புகிறேன். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக.

வெர்ணன் டக்லஸ்

நிர்வாக ஆசிரியர்

# என்னுரை



"சத்தியத்தின் குரல்" மூலம் உங்கள் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் அளவிலா ஆனந்தம் அடைகிறேன்.

சத்தியத்தை தேடுவோர், வேதாகத்தில் அக்கரையுடையோர், வேதாகம மாணவர்கள் மற்றும் தேவ ஊழியர்களுக்கு இந்த புத்தகம் ஒரு விருந்தாக பயன்பட்டதை உங்கள் கடிதங்கள் மூலம் அறிந்து என் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.

வேதாகமத்தின் அருமையை, தேவனுடைய சித்தத்தை, மக்கள் அறிந்து கொண்டு, கிறிஸ்துவின் வழியில் நடந்து தங்களுக்கும், பிறருக்கும் ஆசீர் வாதமாக விளங்க வேண்டும் என்பதே எங்கள் அவா, இம் முயற்சியில் தேவ கிருபை உங்களோடு இருந்து வழிநடத்துவதாக. தொடர்ந்து இப்பணி சிறக்க தேவனிடத்தில் வேண்டிக் கொள்ளங்கள்.

இறைப்பணியில்

*பி. ஆர். எஸ்.*

# பொருளடக்கம்

*தேவன்*

உங்கள் தேவனை சந்தித்தீர்களா?
தேவத்துவத்தின் சாராம்சம்
மனித அவதாரம்
அப்படிப்பட்ட இரட்சகரா
மனுஷ ஞானம் Vs தேவ ஞானம்

*கிறிஸ்துவ சாட்சியங்கள்*

செயல் இழந்த விசுவாசம்
நீங்கள் எந்த விசுவாசத்தை தேர்ந்தெடுப்பீர்

*தேவனுடைய வார்த்தை*

வேதாகம வகுப்பில் இருக்க வேண்டிய மனோபாவங்கள்
தேவன் சொன்னார், நான் அதை நம்புகிறேன், அதுமுடிவாகிவிட்டது

*ஜீவிப்பதற்கு ஏற்ற கொள்கைகள்*

எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்
மனிதனுடைய கொள்கை புஸ்தகங்கள் கைவிடப்பட வேண்டும்
ஞானஸ்நானமும் அதன் தொடர்பும்
ஞானஸ்நானத்தில், நோக்கத்தை என்னால் காணமுடியவில்லை.
பாத்திரவான்களாய் காணிக்கை கொடுத்தல்

*பாவம்*

ஓரினச் சேர்க்கை
கர்த்தர் பந்தி
விசுவாசத்தைப் பற்றிய கண்ணோட்டம்
தேவன் என்னவிரும்புகிறார்
தேவனை ஜாக்கிரதையாக தேடும் சிலர்

*சபை*

சபை மீது கர்த்தருக்கு இருந்த தீவிர ஆர்வம்
ஆதி சபை (கிறிஸ்துவின் சபை)
வெற்றியடைந்தது ஏன்?

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்துவ மார்க்கத்தை புதுப்பித்தல்
சபையில் அங்கத்தினர்களாயிருப்பதை குறித்த கருத்து விளக்கம்
கிறிஸ்துவின் சபை சபையும், இரட்சிப்பும்

தேவனுடைய பிள்ளைகள் என்று அடையாளம் காணுதல்.
நீங்கள் எந்த மிஷனைச் சேர்ந்தவர்கள்?
நீங்கள் ஏன் தீர விசாரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள்

*அன்றாட கிறிஸ்தவ ஜீவியம்*
தேவனுக்கு ஊழியம் செய்ய நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்
யார் கவனித்துக் கொண்டிருக்கிறார்?

*கிறிஸ்தவ மார்க்கம் செயலில்*
ஆத்தும் ஆதாய ஊழியம், சுவிசேஷமா, அல்லது தந்திரமா?
அவன் முதலாவது தன் சகோதரனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான்
பூரண சற்குணராய் இருத்தல்
தரிசனங்களைப் பார்ப்பதும் கனவுகளை காணுதலும்
ஸ்டெபி (நாய்) செத்து விட்டது
ஆறுதல் படுத்துவதே ஆறுதல்
சபையின் ஊழியம்
காலம் கடந்து போகுதல்
அதிகமான பேர் கீழ்ப்படியும் கட்டளை
சிலுவையின் சக்தி

*வேதாகமக் கேள்விகள்*
சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?
ஏன் ஒருவன் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும்?
ஒரு ஸ்திரீ போதிக்க உரிமையுண்டா? அல்லது மூப்பர்கள் அனுமதி கொடுத்தால் சபையை வழிநடத்தலாமா?
தேவனுடைய பிள்ளை கெட்டுப்போன நிலைனய (காணமற்போன நிலையை) அடையக்கூடுமா?
நான்கு வேதாகம கேள்விகள்

# உங்கள் தேவனைச் சந்தித்தீர்களா?

## ஜாக். W. கார்டர்

ஆமோஸ் புத்தகத்தில் ஒரு புதுமையான விவரம் கூறப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தில் ஒரு பகுதி இஸ்ரவேல் மக்களுக்கு தரப்பட்ட ஒரு கடிந்து கொள்ளுதல். இப்பூமியில் தேவனை அறிந்திருக்கிறோம் என்று கூறக் கூடிய ஜனங்கள் இருப்பார்களானால், அவர்கள் யூதர், இஸ்ரவேல் மக்களாகத்தான் இருக்க வேண்டும். இருப்பினும் அந்த இஸ்ரவேலருக்கு தேவன் சொன்னார்,"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு" (ஆமோஸ் 4:12).

இந்த புத்தகத்தில் அடங்கி உள்ள விசயங்களை, உற்று நோக்கும் போது இஸ்ரவேல் மக்கள் உண்மையிலே தேவனை அறிந்திருக்கவில்லை என்கிறார் ஆமோஸ். தேவன் தாமே அவர்களை ஒரு ஜனமாகச் சேர்த்து, அவர்களுடைய விரோதிகளிடமிருந்து அவர்களை திரும்ப திரும்ப விடுதலை செய்து இருந்தும், தங்கள் ஊதாரித்தனத்தில், ஆடம்பர வாழ்க்கையில் எண்ணிப் பார்க்க கூடாத நிலைக்குப் போய்விட்டனர்.

ஆமோஸ் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில், இஸ்ரவேல் மக்கள் நல்ல சுபீட்சத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர். இருந்தாலும் 33 வருடங்களுக்குள் அசீரியர் படை எடுத்து வந்து அவர்களை அழித்துப் போட்டனர்.

தேவனைப் பற்றி சரிவர அறியாதிருந்த காரணத்தால் மேலெழுந்தவாரியாக சடங்குகளை தங்கள் ஆராதனையில் கடைபிடித்து வந்தனர். தேவன் அதை காணவில்லை அல்லது அக்கரை காட்டவில்லை என்று எண்ணி அப்பாவி ஏழை ஜனங்களை கொடூரமான முறையில் துன்புறுத்தி வந்தனர். பகிரங்மாக விக்கிரகாராதனை செய்து வந்தனர். வேண்டுமென்றே தங்கள் ஆணவத்தினாலே தேவனை சட்டை பண்ணாமல் அவர் கட்டளைக்கு கீழ்படியாமற் போனார்கள்.

✦ தேவன் ✦

தேவனைப் பற்றி அவர்கள் என்ன நினைத்திருந்தாலும், அவருடைய பண்பைப் பற்றி என்ன கருத்தை உடையவர்களாக இருந்திருந்தாலும், அவருடைய செயலின் மீது எவ்வளவு அக்கரையுடையவர்களாக இருந்திருந்தாலும், தேவனுடைய மனதில் அவர்களை பற்றி ஒரு குறிப்பிட்ட எண்ணம் இருந்தது.

ஆகவே, தேவன் முக்கியமாக அவர்களுக்குச் சொன்னது,"நான் யார், எப்படிப்பட்டவர் என்று நீங்கள் அறிந்து கொண்டிருப்பதாக எண்ணுகிறீர்கள்", உண்மையில் நான் யார் என்று என்னை அறிமுகம் செய்ய விடுங்கள்.

தேவன் உண்மையிலே யார், எப்படிப்பட்டவர் என்பதைப் பற்றி நீங்கள் அறியாமல் இருக்கக் கூடுமா? அவரை இன்னமும் சந்திக்காமல் இருக்கக் கூடுமா?



# தேவத்துவத்தின் சாராம்சம்

**சன்னி டேவிட்**

வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாடு எழுதப்பட்ட மூல மொழியான எபிரேய மொழியில் "தேவன்" என்ற வார்த்தை பன்மையில் (ELOHIM) கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால், ஒன்றுக்கு மேற்பட்ட மெய்யான தேவர்கள் உண்டு என்று அர்த்தமாகாது. ஒன்றான மெய்த்தேவன் என்று வேதம் திட்டவட்டமாகக் கூறுகிறது. (உபாகமம்: 6:4, ஏசாயா: 44:6, I கொரி: 8:4) இருப்பினும், தேவத்துவத்தின் (ELOHIM) தன்மை, தனிப்பட்ட நபர்களாக ஒரே ஐக்கியத்தில் இருக்கின்றனர்.

இயேசு இப்பூமியிலிருந்த போது, தம் சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுக்கிற போது, "எங்கள் பிதாவே" என்று கூப்பிட்டு ஜெபிக்கச் சொன்னார் (மத்தேயு 6:9) கிறிஸ்துவும் அநேக முறையில் தேவனை பிதா என்று அழைத்திருக்கிறார் (மத்தேயு 11:25-27, யோவான்: 6:27). ஆதியிலே வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த பிதாவாகிய தேவன் (ஆதி 1:1), இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்ததினால், தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பி அவருடைய சிலுவையின் மரணத்தின் மூலமாக உலகத்தாருடைய பாவங்களுக்காக பலியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். (I யோவான் 4:10) குமாரன் தேவனென்று வேதம் போதிக்கிறது. அப்படியென்றால் அவர் இரண்டாவது தேவனல்ல ஆனால் தேவத்துவத்தில் மற்றுமொரு நபர்.

"ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனிடத்திலிந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" .. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையை கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. (யோவான் 1:1-3, 14). இங்கு கவனியுங்கள். அந்த வார்த்தை "மாம்சமாகி" ___ (மனிதன் - தேவன்) சகலமும் அவர்

மூலமாக உண்டாயிற்று. வேதாகமத்தில் முதல் வசனம் கூறுவது, "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்".

கிறிஸ்து இயேசுவில் இருந்து தாழ்மையை கிறிஸ்தவர்கள் தரித்துக் கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் போதிக்கும் பொழுது, "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கும் சமமாயிருப்பதைக் கொள்ளையாடிய பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" என்றார்.

மேலும் கிறிஸ்துவைப் பற்றி (ரோமர் 9:5-9) "மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன் - ஆமென்". மத்தேயு 16:18-ல் குமாரனாகிய கிறிஸ்து அவருடைய சபையை கட்டுவதற்காக வாக்குத்த த்தம் பண்ணியவாறு, அதைக் கட்டினார் என்று (அப் 2:37-47) ல்வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்திற்கு வந்த போது கர்த்தருடைய சபை மூப்பர்களை சந்தித்து இவ்வாறு கூறினார், "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கும், பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்". (அப் 20:28). இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், கிறிஸ்து தாமே சபையை கட்டுவதற்காக கூறினார், சபைக்காக தம்மையே ஒப்புக்கொடுத்தார், (எபேசியர் 5:25), நம் பாவமன்னிப்புக்கென்று சிலுவையில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். இருப்பினும் தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர், "தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது (தேவனுடைய) சபையை கண்காணிக்க வேண்டுமென்று மேய்ப்பர்களுக்கு புத்தி சொன்னார்".

இங்கு கவனியுங்கள், பரிசுத்த ஆவி சபையை மேய்ப்பதற்கு அவர்களை கண்காணிகளாக வைத்தார். இங்கு தேவத்துவத்தின் மூன்றாம் நபர் அறிமுகமாகிறார். "சபை, தேவனுடைய வீட்டார்" (குடும்பம்) (I தீமோ 3:15)

தேவன் அந்த வீட்டுக்கு தலையாயிருக்கிறார். அவர் தம் வீட்டில் யாரையும் ஏற்படுத்த அவருக்கு அதிகாரம் உண்டு. தேவனுடைய சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களை ஏற்படுத்தினார். ஏனெனில் பரிசுத்த ஆவியானவரும் தேவன் என்பதால், தேவன் வார்த்தையாகிய கிறிஸ்துவை மனிதனாக இவ்வுலகத்திற்கு அனுப்பினார். அவர் கன்னி மரியாள் மூலமாக பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்ப்பம் தரிக்கப்பட்டார். இந்த அழகிய ஆச்சரியமான தேவனுடைய குமாரனின் பிறப்பை பற்றி மத்தேயு 1,2 அதிகாரத்திலும், லூக்கா - 2-ம் அதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளது. இங்கு தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் மனுக்குலம் இரட்சிக்கப்பட இந்த திட்டத்தை அளிக்கிறார்கள். பிதா, வார்த்தையாகிய கிறிஸ்துவை அனுப்பினார். கன்னி மரியாள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் கர்ப்பம் தரித்து தேவனுடைய குமாரனை ஈன்றெடுத்தாள். இங்கு தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் ஒருங்கிணைந்து ஐக்கியமாக செயல்படுவதை பார்க்கிறோம்.

கிறிஸ்து 30 வயதுள்ளவராக இருக்கும் பொழுது, அவருடைய பொதுவான ஊழியம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு, ஞானஸ்நானம் பெற்ற சம்பவத்தின் போது, தேவத்துவத்தில் உள்ள 3 நபர்களும் இருப்பதைப் பார்க்கிறோம். குமாரனாகிய இயேசு, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, . . . . . . "வானம் அவருக்கு திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப் போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது". (மத்தேயு 3:16,17)

பிதாவாகிய தேவன், வார்த்தையாகிய குமாரன் (கிறிஸ்து), பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் (யோவான் 14:26, 16:7) தேவத்துவத்திலுள்ள 3 நபர்களும் தான் ஒரே மெய்த்தேவன் ஆவார்கள். எபிரேய மொழியில் "எலோஹிம்". அவர் தான் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவர், மனுக்குலம் ரட்சிக்கப்பட திட்டத்தையும் அளித்தவர். ரட்சிப்பின் திட்டத்தை செயல்படுத்த தேவத்துவத்திலுள்ள குமாரன் (இயேசு) பிதாவுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டியவரானார். பிதாவாகிய தேவன், வார்த்தை அல்லது தம் குமாரனை உலகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்கிற

கிருபாதார பலியாக்கினார். குமாரனும் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, உலகம் உண்டாகிறதற்கு முன்னே, அவரிடத்தில் இருந்த மகிமைக்காக திரும்பிச் சென்றார். மீட்பை மனிதர்களுக்கு வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். (யோவான் 14:25,26 13:15, அப் 1:1-8, அப் 2:1-4).

இருப்பினும் தேவத்துவத்தில் உள்ள மூவரும் ஒன்றே. இதைப் புரிந்து கொண்டால், ஏன் கிறிஸ்து தம் சீஷர்களுக்கு இவ்விதம் கட்டளையிட்டார் என்பதை அறிய முடியும். "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு . . . . . . . . . இருப்பேன். ஆமென்" (மத்தேயு 28:18-20). பேதுரு, பெந்தகொஸ்தே நாளில் திரளான கூட்டத்தினரைப் பார்த்து, நீங்கள், மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றார். அவர் கிறிஸ்துவுக்கு முரண்பாடாக பேசவில்லை ஏனெனில் கிறிஸ்துவின் நாமத்தில் எதை செய்கிறோமோ, அதை பிதாவின் நாமத்திலும் பரிசுத்த ஆவியானவர் நாமத்திலும் செய்கிறோம் அல்லது அவர்கள் எல்லாருடைய அதிகாரத்திலும் செய்கிறோம்.

அனனியா, தான் விற்ற காணியாட்சியில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பொய் சொன்ன போது, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பேதுரு கூறியதாவது, பேதுரு அவனை நோக்கி, "அனனியாவே நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும் படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பிறகும் அதன் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணம் கொண்டதென்ன? "நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான்". (அப் 5:3,4)

பேதுரு கூறியதை இங்கு கவனியுங்கள் முதலில், பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னாய் என்றார். பிறகு தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றார். அதாவது பரிசுத்த ஆவியினிடத்தில் அனனியா பொய் சொன்னபோது தேவனிடத்திலும் பொய் சொல்லியிருக்கிறான். ஏனெனில் பரிசுத்த ஆவியும் தேவன்தான்.

"யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில்,"நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்றும், இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்று உரைக்கிறார்". (வெளி 1:8)

கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னமே ஏசாயா தீர்க்கதரிசி தன் புத்தகத்தில் இப்படி எழுதியிருக்கிறார், "நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் இராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய மீட்பரும் சொல்லுகிறார்".

தேவன் ஒருவரே, அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். நாம் குமாரன் சொன்னதை செய்தோமானால் அதுவே பிதாவின் சித்தமும், பரிசுத்த ஆவியானவருடைய சித்தமும் ஆகும். ஒருவர் கூறியதை கேட்டு அதற்கு கீழ்படிந்தோமானால் மூவர் கூறியதற்கு கீழ்படிந்திருக்கிறோம் என்று பொருள். ஒருவருக்கு கீழ்ப்படிய மறுத்தால், மூவர் (தேவன்) கூறியதற்கும் கீழ்ப்படிய மறுத்தோம் என்று பொருள்.



# மனித அவதாரம்

**ஸ்டீவ் வில்லியம்ஸ்**



மனித அவதாரம் என்ற சொற்றொடர் கிறிஸ்து பரலோகத்தை விட்டு பூமிக்கு இறங்கி வந்ததை குறிக்கும். பரலோகத்திலே தேவனுடைய ரூபமாய் இருந்தவர் பூமியில் மனிதனாக அவதரிக்கிறார். இதற்கு சரியான சிறந்த விளக்கம் யோவான் 1:14ல் உள்ளது.

"அந்த வார்த்தை (லோகோஸ் - logos) மாமிசமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்". மனித அவதாரத்தை பற்றிய இந்த கருத்து கிறிஸ்தவ மார்க்கத்தின் அடிப்படை உபதேசம். கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு இது ஒரு பரிட்சை. மனித அவதாரத்தைப் பற்றிய இந்த உபதேசத்தை ஒருவன் ஏற்றுக்கொள்ள வில்லையென்றால் அப்படிப்பட்டவன் ஒரு கிறிஸ்தவன் என்று ஒப்புக் கொள்ள முடியாது.

மாமிசத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவன் அந்திக்கிறிஸ்தவனாய் இருக்கிறான் என்று யோவான் கூறிவிட்டு, அப்படிப்பட்டவனுடன் எந்த அன்னியோனியத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்கிறார் (II யோவான் 7-11)

சில வேளை மனித அவதாரமென்ற இந்த வார்த்தை வேத வசனங்களில் அதே அர்த்தத்தில் வேறு வார்த்தைகளால் கூறப்பட்டிருக்கலாம். உதாரணமாக பவுல் எழுதும் போது, "காலம் நிறைவேறின போது ஸ்தீரியினிடத்தில் பிறந்தவரும்

நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" என்றார். (கலாத்தியர் 4:4)

இயேசு மனிதனிடத்தில் அதாவது ஸ்திரீயினிடத்தில் பிறந்தபடியினாலே அவர் ஒரு மனிதர் என்று தீர்மானிக்கலாம்.

மனிதர்களால் பிறப்பிக்கப்பட்டதால் இயேசுவும் மனிதர் ஆனார். ஆனால் இந்த மனிதனாகிய இயேசு உண்மையிலே நித்தியமாக வாழும் தேவ குமாரன் ஆவார். ஆதலால் இயேசு கிறிஸ்து வெறும் மனிதர் மாத்திரம் அல்ல. அவர் தேவனுடைய குமாரன். அவர் மனித அவதாரமெடுத்து இப்புவிக்கு வந்தார். அதாவது இயேசுவுக்கு மனித சரீரமும் அல்லது மாமிசமும் இருந்ததினாலே அவர் அவதாரமெடுத்து வந்தார். (எபேசியர் 2:15, கொலொசியர் 1:22, ரோமர் 8:3, I பேதுரு 3:18, 4:1)

***மனித அவதாரத்தை விளக்கும் இன்னும் சில வேத வாக்கியங்கள் பின் வருமாறு:***

" ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார்". (எபிரேயர் 2:14)

"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்". (I மத்தேயு 3:16)

"மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது". ( I யோவான் 4:2)

மேலும் கிறிஸ்துவின் மனித அவதாரத்தை பற்றிய நீண்ட விளக்கம் பிலிப்பியர் 2:6-8 வசனங்களில் உள்ளது.

✦ தேவன் ✦


"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்".

**தேவனுடைய வார்த்தையை நீங்கள் எந்த அளவுக்கு அறிந்திருக்கிறீர்கள்?**

முழு வேதாகமத்தை வாசிக்க 70 மணி 40 நிமிடங்கள் ஆகும். அதில் பழைய ஏற்பாட்டை வாசிக்க 52 மணி 20 நிமிடங்கள் ஆகும். புதிய ஏற்பாட்டை வாசிக்க 18 மணி 20 நிமிடங்கள் ஆகும்.

பழைய ஏற்பாட்டிலுள்ள நீளமான பகுதியை அதாவது சங்கீத புத்தகத்தை வாசிக்க 4 மணி 28 நிமிடம் ஆகும். புதிய ஏற்பாட்டில் நீண்ட புத்தகமாகிய லூக்காவை வாசிக்க 2 மணி 43 நிமிடங்கள் ஆகும்.

முழு வேதாகமத்தை ஒரு நாளைக்கு 1 மணி நேரம் வீதம் வாசிக்க 2 மாதம் 10 நாட்கள் பிடிக்கும். வேதாகமத்தை 5 முறை வாசித்து பிறகு 6-ம் முறை 1/3 வாசிக்க, 1 வருடம் ஆகும். எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்வதைவிட உங்கள் நேரத்தை சிறந்த வழியில் செலவிட ஏதேனும் வழி உண்டா?



# சிலுவையின் மேல்

**கேரி மூர்**



சிலுவையில் பாவத்தின் கொடூர தன்மையையும், அதைப் பற்றிய தேவனுடைய மனோபாவத்தையும் நீங்கள் அறிந்து கொண்டால், நியாயத் தீர்ப்பில் துன்மார்க்கருடன் காணப் படாமல் நீதிமான்களுடன் காணப்ப டுவீர்கள்.

பாவத்தைக் குறித்து தேவனுடைய வெறுப்பு சேதோம் கொமோரா பட்டணங்களை காட்டிலும் கல்வாரியில் தெரிகிறது. இது உண்மையில் சிலுவையின் மகிமை என்று கூறலாம். ஆதாவது தேவன் எந்த மட்டும் பாவத்தை வெறுத்திருந்தால் "தம்முடைய ஒரே பேறான குமாரனை" இந்த உலகத்திற்கு அனுப்பி சிலுவையில் அறையப்படும்படி ஒப்புக்கொடுத்திருப்பார்.

இங்கு தேவனுடைய ஈடு இணையற்ற அன்பை காண முடிகிறது. அன்றாட தேவைகளை அவர் நமக்கு அளிப்பதைக் காட்டிலும் கல்வாரியில் குற்றம் செய்தவர்களுக்காக குற்றம் இல்லாத ஒருவர் மரித்தார் என்பதை காண முடிகிறது.

சிலுவையிலும் கெத்செமனே தோட்டத்திலும் இயேசு பிதாவினிடத்தில் ஏறெடுத்த ஜெபத்திற்கு "இல்லை" என்ற பதில் கிடைத்தது. அதாவது பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டியவரானார். ஆனால் அவருடைய ஜெபத்திற்கு ஆம் என்ற பதில் கிடைத்ததென்று கூறலாம். ஏனென்றால் அவர் பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டியது (மரிக்க வேண்டியது) தேவனுடைய சித்தமாகும். ஆகையால் அந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கூடிய தைரியத்தை மனோ வலிமையை தேவன் அவருக்குத் தந்தார்.

தோட்டத்தில் இயேசு பாத்திரத்துடன் சமாதானம் பண்ணினார். அவர் சுமக்க வேண்டிய பாரத்துடன் சமாதானம் பண்ணினார். தேவ தூதர் அவருக்கு பணிவிடை செய்ய, பாரத்தை சுமக்கத் தக்க வல்லமையைப் பெற்றார்.

சிலுவையில் ஒரு அரிய பெரிய காட்சி. உலக வரலாற்றிலே மகிமையுள்ள காலம். அது தான், இயேசு சொல்லொனா வேதனையுடனும், வல்லமையுடனும் அவிசுவாசமுள்ள தெய்வபயமற்ற அந்த கூட்டத்தினரைப் பார்த்து, "பிதாவே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார். (லூக்கா 23:34)



# அப்படிப்பட்ட ரட்சகரா!

## பெட்டி பர்டன் சோட்

உலக மதங்கள் எல்லாம், கிறிஸ்துவை நாம் பின்பற்றத்தக்க, ஒரு ஆவிக்குரிய வழிநடத்துனர் என்று சுவாரஸ்யமாக வியாக்கியானம் செய்வார்கள். அதே சமயத்தில் அன்பு, எதார்த்தம், நேர்மை என்ற பெயரால் செயல்படுவதெல்லாம் சரிதான் என்பார்கள். மற்ற வழி நடத்துனர்களும் தங்கள் சொந்த மதக்கோட்பாடுகளை போதித்துக் கொண்டு, ஆவிக்குரிய காரியங்களில் முழுவதுமாக கிறிஸ்துவின் அதிகாரத்தை மறுப்பதற்கு துணிவு இருப்பதில்லை. மற்ற எந்த அதிகாரங்களுக்கும், மத விசயங்களில் இடங்கொடாதபடி இவ்வுலகில் வாழ்ந்த ஒரே மனிதர் இயேசு கிறிஸ்துதான் இந்த அதிகாரப் பூர்வமான கூற்றைக் கூறுகின்றார். "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்" என்றார். ஒவ்வொரு மனிதனும் இந்தக் கூற்றை கவனிக்க வேண்டும். அறிந்து கொண்டும், அறியாமையில் ஒருவன் ஜீவிக்கக் கூடும். எள்ளி நகையாடலாம் அல்லது அதில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் காணலாம். எப்படியும் ஒவ்வொரு மனிதனும் இந்தக் கூற்றுக்கு பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிறான்.

என்னைப் பொறுத்தவரை நான் அந்த கூற்றை சந்தித்து இருக்கிறேன். அதை சத்தியம் என்று ஏற்றுக் கொண்டிமிருக்கிறேன். ஏனெனில் அதை நிரூபிக்க மலைபோல் சாட்சியங்கள் இருக்கும் போது, அவற்றை நாம் எப்படி மறுக்க முடியும்?

நீங்களும் அந்த கூற்றை அலட்சியம் செய்து, வேண்டுமென்றே அறியாமையில் நிலைத்து இருக்கலாம். வேறுவிதமாக நீங்கள் செயலாற்ற யாரும் எதுவும் செய்ய இயலாது. உங்கள் அன்புக்கு பாத்திரமானவர், நீங்கள் ஆவிக்குரிய தீர்மானங்களை எடுப்பதில் எவ்வளவு வாஞ்சையோடு இருந்தாலும், உங்களுக்கே அந்த விருப்பம் இல்லை எனில் ஒன்றுமே செய்ய இயலாது.

அந்த கூற்று இன்னமும் உண்டு, வேறு எந்தவிதமான மதக்கோட்பாடுகளால் போதிக்கப்பட்டிருந்தால், கிறிஸ்து அப்படிப்பட்ட மனிதனைப் பார்த்து, அவர் இன்னமும் "நானே வழியும் . . . . ." என்கிறார். தம் உயிர்த்தெழுதல் மூலம் அந்த கூற்றை மெய்ப்பிக்கிறார். முதல் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை, அவிசுவாசிகள் உயிர்த்தெழுதலை நம்ப மறுத்தாலும் சாட்சியங்கள் உண்டு. நேர்மையுடன் விசாரணை செய்யும் எவனும் அதை நம்புவான். இயேசுவின் உயிர்த்தெழுதல், கிறிஸ்துவுக்குள் மரித்தோர் உயிர்த்தெழுவதற்கான நம்பிக்கையை உறுதி செய்கிறது.

*தி வாய்ஸ் ஆப் ட்ருத்*
*இண்டர்நேஷனல், என்ற புத்தகத்தின்,*
*தமிழ் பிரதி, சத்தியத்தின் குரலை*
*நீங்கள் தொடர்ந்து பெற்று பயனடைய*
*விரும்பினால், எங்களுக்கு எழுதுங்கள்.*
*உங்கள் பெயர், முகவரியை,*
*பின்கோடுடன் தெளிவாக எழுதி*
*அனுப்பவும். உங்கள் நண்பர்களுக்கும்*
*இதை அறிமுகம் செய்யுங்கள். தேவன்*
*உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக*

# மனுஷ ஞானம் Vs தேவ ஞானம்

**ஹோலிஸ் மில்லர்**

"தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது", என்று கொரிந்தியருக்கு, அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஏசாயா தீர்க்கதரிசி மூலம் தேவன் கூறி இருக்கிறார். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல. பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது". (ஏசாயா 55:8,9)

தேவனுடைய நினைவுகளும், வழிகளும் குறையற்றவை. ஆனால் மனிதனுடைய நினைவுகளும், வழிகளும் பலவீனத்தாலும் தவறுகளாலும் நிறைந்திருக்கிறது. தேவனுடைய ஞானம் தவறான தர்க்கங்களை எதிர்க்கிறது. ஏனெனில், தேவன் பொய்யுரையாதவர் என்று பவுல் கூறி இருக்கிறார். மனுஷ ஞானம், தேவ ஞானத்தோடு மோதும் பொழுது, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக". (ரோமர் 3:4)

I கொரி 1:18-2:5 வரை இந்த வேத வசனப் பகுதியிலுள்ள கருத்துக்களும், மேலும் புதிய ஏற்பாடு முழுவதும் நமக்கு வெளிப்படுத்துவது என்னவெனில், பவுல் குறிப்பிட்ட பைத்தியம் என்னப்படுவது, இயேசு கிறிஸ்துவுக்குள் தேவன் வெளிப்படுத்திய காரியங்களை விட்டு, மனிதனுடைய சொந்த முயற்சியில் தன் ஆத்துமாவை ரட்சிக்க விரும்பும் காரியம். ஆகையினால், "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். தேவ ஞானத்தை தள்ளிப்போட்ட இவ்வுலக தத்துவ ஞானிகள் தங்கள் முயற்சிகளில் என்றுமே வெற்றி பெற்றதில்லை. மனித வரலாற்றில் எல்லாவித

தத்துவங்களும் மனுக்குலத்துக்கு கொஞ்சம் வெளிச்சத்தை கொடுப்பதாக இருந்தாலும், வேறொரு வெளிச்சம் வருகிற போது அவைகள் மங்கி அணைந்து போகும். மனிதர் சில வேலைகளில் கிறிஸ்தவர்கள் கூட, தங்கள் சொந்த ஞானத்தினாலே ஆட்கொள்ளப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை நோக்கி, "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்துக்குக் கீழ்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கியவன் யார்? இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே ...... ஆவியினாலே ஆரம்பம் பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா? (கலாத்தியர் 3:1,3).

இந்த கேள்வி முன்பு கேட்கப்பட்டது. திரும்பவும் கேட்கப்பட அருகதை உள்ளது. "இயேசு கிறிஸ்துவையும், அவர் இவ்வுலகில் நிறைவேற்ற வந்த வேலையையும் மனிதர் ஏன் எதிர்க்க வேண்டும். இயேசுவைத் தவிர வேறு யாரும் சரியான பதிலை இதற்கு கொடுக்க முடியவில்லை". ஒளியானது உலகத்தில் வந்திருக்கிற படியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்". (யோவான் 3:19,20) இயேசுவின் சிலுவை, மனுஷ ஞானத்துக்கும், தேவ ஞானத்துக்குமிடையே முன்னேறி சென்று கொண்டிருக்கும் போராட்டத்துக்கு அடையாளம்.

மனுஷ ஞானத்துக்காக வேண்டி தேவனுடைய ஞானத்தை கைவிட்டு விடுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா? காலம் மாறிக் கொண்டிருக்கும் இந்நாட்களிலே பழைய பாரம்பரியங்களை புதிய வழியில் பார்க்க வேண்டும் என்று விவாதிப்பார்கள். ஆனால் மேற்படி பாரம்பரியங்களை அந்த விவாதங்கள் நம்பி இருப்பதில்லை. காலம் மாறிவருகிறதனால் சத்தியம் பொய்யாகவும், பொய் சத்தியமாகவும் மாறி விடுமா? கிறிஸ்தவ விசுவாசத்தின் சத்தியங்கள் ஏன் மாறுகின்ற காலம் எழுதும்படி தூண்டக் கூடாது! கிறிஸ்து விசுவாசத்தின் சத்தியங்கள்

வரலாற்றில் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மற்ற சரித்திர நிகழ்வுகளைப் போல இதுவும் மாற்றப்பட வேண்டியவை அல்ல.

மனிதனுடைய யோசனைகளும், கருத்தும் மாறுவதைப் போன்று தேவனுடைய ஞானம் மாறுபடுவதில்லை. ஆகையால் தேவனுடைய ஞானம் தள்ளப்பட்டால், தள்ளுபடி செய்பவர்கள் மனுஷ ஞானத்துக்கு தள்ளப்படுவார்கள். மனுஷ ஞானம், தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு, பவுல் கூறுவதைப் போல, "அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலேயே, வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோமர் 1:21) இதற்காகத்தான் அப்போஸ்தலர்கள், கிறிஸ்தவர்களைப் பார்த்து, "மனுஷருடைய வீணான சிந்தனைகளால் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்றனர் (கொலோசெயர் 2:8, I தீமோ 6:20, யாக்கோபு 4:4) அப்போஸ்தலன் கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார்.



# செயலிழந்த விசுவாசம்

**வெயின் ஜாக்சன்**

கலா 4:9-ல் அப்போஸ்தலனாகிய பவுல், கலாத்திய கிறிஸ்தவர்களின் முந்தின ஜீவியத்தின் சீர்கெட்ட நிலைமையை விவரிக்கும் பொழுது, அவர்களைப் பார்த்து "பெலனற்றவர்கள், வெறுமையானவர்கள்" என்கிறார். அதன் பொருள். அவர்களுடைய அஞ்ஞான ஜீவியத்தில் பெலனில்லை, ஆவிக்குரிய தரித்திர நிலைக்குள்ளாக்கப்பட்டதை கூறுகிறார். அவிசுவாசம், பழைமையானதோ அல்லது நவீனமானதோ அதற்கு பெலனில்லை. மனித ஆன்மா ஏங்கும் வளமான செல்வம் அதில் இல்லை. கீழ்க்கண்ட காரியங்களில் அதை பிரதிபலிப்போம்.

**1. தோற்றம்:**

இயற்கையிலே மனிதன் எதையும் அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறான். எங்கிருந்து வந்தேன் என்பதை அறிய எல்லா ஜீவராசிகளிலும் அக்கரையுள்ள ஒரே ஒருவன் இவன். எப்பொழுதும் "மூலகாரணங்களை" தேடிக் கொண்டே இருப்பவன். அவிசுவாசம், எந்த பதிலையும் தர முடியாது. ஒரு பொருளின் மூலகாரணத்தைப் பற்றியோ அல்லது இப்பிரபஞ்சத்தின் அமைப்பைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. வாழ்க்கையின் புதிரை விளக்க முயற்சித்து தோல்வி அடைந்தவன். மனிதனுடைய தோற்றத்தைக் குறித்த கோட்பாடுகள் மிகவும் முரண்பாடானவை. தெரிந்த விஞ்ஞான குறிப்புகளுக்கு எதிரானவை. அவிசுவாசம், தோற்றத்தைக் குறித்து ஒன்றுமே அறிவதில்லை.

**2. நோக்கம்:**

இந்த பூமியில் மனிதனுடைய சரியான நோக்கம் என்ன? மனிதன் இங்கு இருப்பதற்கு ஒரு காரணமும் இல்லை என்று அவிசுவாசம் விவாதிக்கிறது. மனிதனுடைய வேலை, வெறும் இனப்பெருக்கம் செய்வது. பரிணாம வளர்ச்சியில், ஏதோ ஒரு அறியாத நோக்கத்திற்காக முன்னேறிச்

செல்வது. ஆனால் ஏன்? அந்த நோக்கம் தான் என்ன? ஒன்றும் இல்லை. மனித நல கோட்பாட்டையுடைவர்கள் கொடுக்கும் பதில் கவலையைத் தருகிறது. மனிதனுடைய முடிவான நோக்கம், சிருஷ்டி கர்த்தாவை சேவிப்பது என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. (ஏசாயா 43:7, பிரசங்கி 12:13)

### 3. மனிதனுடைய நடத்தை:

தேவனை அறியாதவர்களை, ஒழுக்க நீதி சம்பந்தப்பட்ட நடத்தையில் உந்தித்தள்ளும் அம்சம் எது? பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட நோக்கம் எதுவும் இல்லை. தேவன் இல்லை என்றால், தங்கள் சொந்த சுயநல காரியங்களுக்கு ஒப்புக்கொடுத்து ஏன் மனிதர் வாழக்கூடாது? அநீதியுள்ள உக்கிராணக்காரன் உவமையில் கிறிஸ்து, தேவனுக்கு பயப்படாதவன், மனிதனை மதியான் என்றார். (லூக்கா 18:2,4) பழைய உலகத்தின் அக்கிரமங்களைப் பற்றி விளக்கிக் கூறிய பிறகு, பவுல் உண்மையான பிரச்சனையை மையமாக வைத்து எழுதுகிறார், "அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயமில்லை". (ரோமர் 3:18) தேவன் இல்லை என்றால், மனிதன் தன் நடத்தை குறித்து கடைசி நாளில் கணக்கு ஒப்புவிக்க நியாயத்தீர்ப்பு நாள் என்று ஒன்று இல்லை என்றால், கெட்ட ஜீவியத்திற்கு பதிலாக நல்ல ஜீவியத்தை தேர்ந்தெடுப்பதில் என்ன பயன்?

### 4. மன அமைதி:

முடிவில்லாத கடந்து போகும் வரலாற்று காட்சியில், அர்த்தமற்ற குறுகிய காலப்பகுதி தான் தன் வாழ்வு என்று நினைப்பவனுக்கு என்ன மனதிருப்தி இருக்கும்? கடவுள் நம்பிக்கையற்ற ஞானி டேவிட் "யூம், சோர்வுற்ற நிலையில், அனேக அவிசுவாசிகளின் மனப்பாங்கை வெளிப்படுத்தும் தோரணையில் எழுதுகிறார், "நான் எங்கே இருக்கிறேன் அல்லது நான் யார்? என்ன காரணத்தினால் நான் இங்கு ஜீவிக்கிறேன்? எந்த நிலைக்கு நான் திரும்புவேன்? இந்த கேள்விகள் என்னை குழப்புகிறது. நினைத்துப் பார்க்க முடியாத, மிகவும் மோசமான நிலையில் எனக்குள் கற்பனை செய்து பார்க்கிறேன். என் அவயம் திறமையை இழந்த,

ஆழமான இருள் சூழ்ந்த நிலை". அவிசுவாசி ஜான் ஸ்டூவர்ட் மில் தன் கல்லறையின் மீது பொறிக்கப்பட்ட தேர்ந்தெடுத்த வார்த்தைகளை சரியாகச் சொன்னார், "மிகவும் சந்தோஷம் இல்லாத மனிதன்".

**5. வருங்கால நம்பிக்கை:**

சிருஷ்டி கர்த்தாவைப் பற்றிய அறிவு இல்லாதவனுக்கு என்ன நம்பிக்கை காத்திருக்கிறது? வெறும் கல்லறையில் நம்பிக்கை ஒன்றும் இல்லை. ராபர்ட் ஓவன் என்கிற ஐயுறவாதியினிடம் அலெக்சாந்தர் கேம் பெல் நடத்திய சம்பாஷனை, என் நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் கேம் பெல் தோட்டத்திலுள்ள குடும்ப கல்லறையை அவர்கள் இருவரும் கடந்து போகிற போது, ஓவன் சொன்னார், "கிறிஸ்தவனுக்கு மேலாக எனக்கு, ஒரு அனுகூலம் இருக்கிறது. நான் மரிக்க பயப்படவில்லை". அதற்கு கேம்பெல் பதில் சொன்னார், மரணத்தில் ஏதேனும் நம்பிக்கை உனக்கு உண்டா? சற்று அமைதியாயிருந்து விட்டு, ஓவன் சொன்னார், "இல்லை". அதற்கு கேம் பெல், அருகில் நின்ற எருதை சுட்டிக்காட்டி,"அந்த மிருகத்திற்கு சமமாக நீ இருக்கிறாய். அதற்கு மரணத்தில் நம்பிக்கையும் இல்லை, பயமும் இல்லை" என்றார். ஓவன் புன்னகை செய்தார். அதில் குழப்பத்தைத் தெரிவித்தார். கேம்பெல் அவர்களின் அனுமானத்தை யாரும் மறுக்க முடியாது.



# நீங்கள் எந்த விசுவாசத்தை தேர்ந்தெடுப்பீர்?

**அன்சில் ஜென்கின்ஸ்**




சரித்திரத்திலே நம்முடைய காலத்தைவிட வேறெந்த காலத்திலும் இவ்வளவு விஞ்ஞான அறிவால் பயனடைந்திருக்க முடியாது. கடந்த 10 ஆண்டுகளில், பொறியியல், மருத்துவம், மின்னணு பற்றிய மற்றும் சமையல் பொருட்கள் ஆகிய துறையில் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றம் கண்டு, சிலர் விஞ்ஞானம் சர்வ வல்லமையுள்ளது, சர்வ ஞானமுள்ளது என்று எண்ணுகின்றனர்.

விஞ்ஞான கல்வியை சார்ந்து அதன் மீது மதிப்பை வைத்து, அநேகர் தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது தவறானது, தேவையற்றது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இருப்பினும் விஞ்ஞானம் தேவன் இல்லையென்று நிரூபிக்க முடியவில்லை. விஞ்ஞானமும், வேதாகமும் மனிதனுடைய தோற்றத்தைப் பற்றி போதிக்கிறது. இரண்டையும் பரிசோதனைக்குட்படுத்தி, உண்மை உறுதி செய்ய முடியாது. இரண்டும் நம்பத்தகுந்த காரியம், விசுவாசத்தை பாதிக்கக் கூடிய ஒரு அம்சம்.

நேர்மையுடன் தேடுபவனுக்கு, தேவனும் வேதாகமும் நம்பத்தகுந்தவை. அப்படியென்றால் விஞ்ஞானிகள் மோசடிக்காரர்கள், போலிகள் என்று அர்த்தமல்ல. விஞ்ஞானத்தின் படைப்பு, முன்னுக்கு பின் முரணானது, சில கேள்விகளை எழுப்புகிறது.

நம் உலகத்தின் எல்லா கேள்விகளுக்கும், விஞ்ஞானத்தில் விடை உண்டு என்று கூறுவதற்கில்லை. மேகங்கள், மின்சார

தாக்குதலுக்குள்ளாக்கப்படும் போது மின்னல் தோன்றுவதாக விஞ்ஞானிகள், வெகு காலத்திற்கு முன்பு கண்டுபிடித்தனர். அந்த தாக்குதல்கள் (Charges) எவ்வாறு தோற்றுவிக் கப்படுகிறது என்கிற விசயத்தில் இன்னும் விஞ்ஞானிகள் மத்தியில் கருத்து வேற்றுமையுள்ளது. பெரும்பான்மை விஞ்ஞானிகள் பரிணாம வளர்ச்சி (evolution) உண்மையென்று நம்பினாலும், அவைகளில் அநேக இடர்பாடுகள் உண்டு. உதாரணமாக பரிணாம வளர்ச்சியில் பூச்சி இனத்தை எந்த குணத்துடன் ஒன்று சேர்க்கும். வரலாற்றுக்கு முந்தைய காலத்திய அழிந்து போன இணைகளைப் பற்றிய சாட்சியங்கள் ஒன்றுமில்லை.

தெரிந்த, பரிசோதி க்கப்பட்டவைகளை மட்டும், உண்மையென்று, அறிவுக்கு ஏற்புடையதென்றும் நம்புகின்றனர். அப்படி கூறும் கூற்று, தனக்குத் தானே செய்யும் முன்னுக்கு பின் முரணான செயலாகும். இது எப்படிப்பட்ட மனோபாவத்தை காட்டுகிறது என்றால், ஒரு மீனவன் சமுத்திரத்தில் 2 அங்குல நீளத்துக்கு குறைவான ஜீவராசி இல்லை என்றானாம். ஒரு விதமான வலையை பல ஆண்டுகளாக உபயோகித்ததன் விளைவு இந்த முடிவுக்கு

## வாலிபனின் ஜெபம்


பரலோகத்தில் இருக்கும் தேவனே, நான் இளைஞன், பெற்றோர் ஸ்தானம் என்பது என்ன என்று தெரியாது. அது மிகவும் கடினமானது ஏனெனில் இந்த நாட்களில் அநேகர் தோல்வியடைந்துள்ளனர். நான் என் அம்மா அப்பாவுக்காக ஜெபிக்கிறேன் தேவனே, அவர்கள் நல்ல பெற்றோராக இருக்க உதவி செய்யும். நீர் விரும்புகிற வழிகளில் பலமுள்ளவர்களாக இருக்க உதவி செய்யும். நானும் இன்ப உணர்ச்சியுடன் அவர்களைப் பார்த்து, அவர்கள் புத்திமதி சரி என்று உணர்வேன்.

அன்பான கர்த்தாவே, என் பெற்றோரை புரிந்து கொள்ள உதவி செய்யும். என் வழியில் செல்ல அனுமதிக்கப்பட முடியாத போது, அவர்கள் அன்பினால் அதைச் செய்கின்றனரே ஒழிய என்னை அற்பமாக நினைத்து என் நல்ல நேரத்தை கவர்ந்து கொள்ள அல்ல என்று எனக்கு நினைவுபடுத்தும்.

தேவனே, பிடிவாதமாக, அவர்கள் பேச்சை கேட்க மறுக்கும் பொழுது, அவர்களுக்கு ஞானம் உண்டு, அனுபவம் உண்டு. ஏனெனில் அவர்களும் ஒரு காலத்தில் என்னைப்போல வாலிப வயதில் இருந்தவர்கள். ஆனால் நான் இன்னும் பெற்றோராக இருந்ததில்லை என்ற உண்மைகளை ஏற்றுக் கொள்ள உதவி செய்யும்.

அநேக வருடங்களாக கடின உழைப்பு, தியாகம் காரணமாக என் உள்ளத்தில், என் மரியாதைக் குரியவர்கள் அவர்கள் தங்களாலான மட்டும் என்னை சிறந்தவனாக வளர்த்தியவர்கள் அதற்கு ஈடாக அவமானத்தையும், துயரத்தையும் அவர்களுக்கு நான் கொடுக்காதபடி எனக்கு கீழ்ப்படிதலும் (பாவ மன்னிப்பை, அன்பை) மரியாதையையும் கற்றுக் கொடும். எல்லாவற்றுக்கும் மேலாக, இங்கே இன்னமும் என் பெற்றோர்கள் பூமியில் இருக்கும்போது, அவர்களை பாராட்ட உதவி செய்யும், அதை அவர்களும் அறியட்டும்.

வந்திருப்பான். யாரோ ஒருவர், சமுத்திரத்தில் 2 அங்குல நீளத்துக்கு குறைவான உயிரினங்கள் உண்டு. அவைகள் அவன் வலையில் சிக்காமல் போயிருக்கலாம் என்று கூறினார். அதற்கு அந்த மீனவன் கர்வத்துடன் என் வலை பிடிக்காதது அது மீனல்ல என்றானாம் அநேக சத்தியங்கள் விஞ்ஞான ரீதியாக உண்மை என்று உறுதி செய்ய முடியாது. அப்படியானால் அது உண்மையல்ல என்று அர்த்தமாகாது. பூமி உண்டானதை குறித்தோ, மனுகுலம் சிருஷ்டிக்கப்பட்ட காரியத்தை குறித்தோ நம்பத்தகுந்த கோட்பாடுகளை விஞ்ஞானம் உண்டாக்க முடியவில்லை. அதற்கு பதிலாக விசுவாசத்தின் அடிப்படையில் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறோம். அப்படிப்பட்ட கோட்பாடுகள் வழிவழியாக வரும், மத நம்பிக்கையாக மாறிவிடுகிறது. அதிலிருந்து மாறுபடுவதை அனுமதிக்காது. ஊதாரணமாக பாரஸ்டு, 3-ம் மிம்ஸ் விஞ்ஞானி அமெரிக்கன் மாத இதழில் எழுத்தாளராக ஒரு வேலை அவருக்கு மறுக்கப்பட்டது என்று கூறினார். "தேவன் வானத்தையும், பூமியையும் படைத்தார் என்ற கூற்றை அவர் விசுவாசத்தால் இப்படி நேர்ந்தது என்று மிம்ஸ் நம்புகிறார்".



# வேதாகம வகுப்பில் இருக்க வேண்டிய மனோபாவங்கள்

டான் W.வாக்கர்

"மனுபுத்திரனே, இந்த மனுஷர் தங்கள் நரகலான விக்கிரகங்களைத் தங்கள் இருதயத்தின் மேல் நாட்டி, தங்கள் அக்கிரமமாகிய இடறலைத் தங்கள் முகத்துக்கு எதிராக வைத்துக் கொண்டிருக்கிறார்களே, இவர்கள் என்னிடத்தில் விசாரிக்கத்தகுமா? (எசேக்கியேல் 14:3)



புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தில் நோக்கம், வலியுறுத்தல், மனோபாவம் என்ற 3 வார்த்தைகளும் திறவுகோல் வார்த்தைகள். வேத வகுப்பைப் பற்றி நினைக்கும் பொழுது, தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்வதில் நம் மனோபாவம் முக்கிய பாகத்தை வகிக்கிறது. "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள்" (லூக்கா 8:18). வேத வகுப்பிலிருந்து என்ன பெற்றுக் கொள்ளலாம் என்று விரும்புகிறோமோ, அதையே நாம் பெற்றுக் கொள்வோம்.

எசேக்கியேல் காலத்தில், தேவனுடைய ஆலோசனையைக் கேட்க மக்கள் தீர்க்கதரிசியிடம் வந்தனர். இருப்பினும் அவர்கள் மனம் ஏற்கனவே நிரப்பப்பட்டிருந்தது. அவர்கள் மனோபாவங்கள் எல்லாம் தவறாக இருந்தது. தங்களை விடுதலையாக்கும் சத்தியத்தை தேடுவதற்கு பதில் (யோவான் 8:32) ஏற்கனவே தங்கள் மனதில் தீர்மானித்த காரியங்கள் நியாயம் என்று நிரூபிக்க வகை தேடினார்கள்.

இன்று, இவை எப்படி நமக்குப் பொருந்தும்? தேவன் தம் வார்த்தைகளை கொடுத்திருக்கிறார். மனிதன் அதை மதிக்க வேண்டும்

என்று எதிர்பார்க்கிறார். அதாவது, மனிதன் அதை விசுவாசித்து, பின்பற்ற வேண்டும். அதை மாற்றாதபடி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இதைத்தான், "வேத வசனத்தின் மௌனம்" என்று கூறுகிறோம். இன்னமும் மற்ற குறிப்புகளை கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. கவனியுங்கள், ". . . . . . . . . உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:21, 22). நம் மனோபாவம் எல்லாம் திருவசனத்தை மதித்து அதன்படி நடக்க வேண்டும் என்று இருக்க வேண்டும். வெறும் மனதளவில் வேத அறிவுடையவர்களாக இருந்தால் மட்டும் பிரயோஜனமில்லை. தேவன் தம் வார்த்தையில் வெளிப்படுத்தின காரியங்களை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். இதை மனதில் வைத்துத்தான் இயேசுவும், "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" என்றார். (யோவான் 8:31)

## முடிவுரை:

சரியான மனோபாவத்துடன் அதை பின்பற்றுகிறவர்களுக்கு தேவனுடைய வார்த்தை எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. அதை மாற்றுவதும், தள்ளுவதும் அறிவீனம். இதை மனதில் வைத்து, வேதாகமத்தை அதிகதிகமாக ஒவ்வொரு முறை படிக்கும் போதும் சரியான மனோபாவங்களை தொடர்ந்து கடைபிடிப்போம்.



# "தேவன் சொன்னார், நான் அதை நம்புகிறேன், அது முடிவாகிவிட்டது"

**டேவிட் வதே**

தேவனுடைய வார்த்தையில் ஒரு வேளை நீங்கள் விசுவாச உறுதிமொழியை கண்டிருக்கலாம் அல்லது கேட்டிருக்கலாம், எவ்வளவு நன்றாக தெரிந்தாலும், என்ன சொல்லப் பட வேண்டும் என்பதற்கு குறைவாக அது இருக்கிறது. "தேவன் சொன்னார், அது முடிவாகி விட்டது, நான் அதை விசுவாசித்தாலும், விசுவாசிக்காமல் போனாலும்", என்ற சொற்றொடர் தேவனுடைய வார்த்தையின் உண்மையான தன்மையையும் நாம் அதன்மீது வைக்க வேண்டிய விசுவாசத்தையும் சரியாக விளக்குகிறது.


சங்கீதக்காரன்,"கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது. உம்முடைய வசனம் சகலமும் சத்தியம். உம்முடைய நீதி நியாமெல்லாம் நித்தியம். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள். ஆதலால் என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்". (சங் 119:89, 160,172)

ஒவ்வொரு முறையும் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது "பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே" கிறிஸ்துவின் சிந்தையை அறியக்கூடியவர்களாக இருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். (I கொரி 2:13,16) தீர்க்கதரிசனமானது, ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள், (2பேதுரு1:21) தம்முடைய வார்த்தையை பேசினவர்களையும், எழுத்தர்களையும் தேவன் தாமே தேவாவியினால் வழி நடத்தினார் என்பதை கருத்தில் கொண்டு பேதுரு, "அதிக உறுதியான தீர்க்கதரிசன

வசனமும் நமக்கு உண்டு. பொழுது விடிந்து விடி வெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும், இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கின்ற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்". (2 பேதுரு 1:19)

தேவனுடைய வசனத்தில் நமக்கு கருத்து வேறுபாடு தோன்றுமாயின் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியது, "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல, தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல" (எபிரெயர் 10:23) பவுல் தேவனுடைய வார்த்தையை எதிர்த்து சபைக்கு விரோதமாக குரல் எழுப்பிய போது, அவன் தன்னையே காயப்படுத்திக் கொண்டான். (அப் 9:5, I தீமோ 3:8-9) தேவனுடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிய மறுத்தால் நியாயத் தீர்ப்பு நாளில் இயேசு, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்" என்பார் (மத்தேயு 7:21-23)

தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள், அவருடைய வார்த்தையை கேட்டு, விசுவாசித்து, கீழ்ப்படிபவர்களுக்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு7:21) தேவன் சொன்னார் அது முடிவாகிவிட்டது அவ்வளவுதான்.



# எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்

**ரே ஹாக்**

"அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்." (பிலிப்பியர் 4:7).



"இந்த எல்லா புத்திக்கும் மேலான சமாதானம்" என்றால் என்ன? இதை புரிந்துகொள்ள முடியாத காரியம் என்றால், அந்த சமாதானம் நம்மிடம் உள்ளதா, இல்லையா என்று எப்படி அறிய முடியும்? அது என்னவென்று தெரியவில்லை என்றால், நமக்கு தெரியாத ஒன்றை எவ்வாறு காத்துக்கொள்வது?

முதன்முறையாக இது சம்பந்தப்பட்ட இந்த வார்த்தை லூக்கா 2:14ல் வாசிக்கிறோம். இங்கு தேவதூதர்கள், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். தம் குமாரனின் வருகை, எல்லா யுத்தங்களுக்கும் முடிவு கொண்டு வரும் என்று தேவன் அறிவிக்கவில்லை. உண்மையிலே, 33 ஆண்டுகளுக்குப் பிறகு இயேசு, யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்" எனறார் (மத்தேயு 24:6). பவுலும், தேவதூதர்களும் குறிப்பிட்ட சமாதானம் இயேசு கிறிஸ்து மூலமாய் வரக்கூடிய ஒன்று. இயேசு தம் சீஷர்களைப் பார்த்து, என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 16:33). மனிதன் பாவம் செய்த பிறகு தேவனிடத்திலிருந்து தன் ஸ்தானத்தை

இழந்தான். அவன் தேவனோடு ஒப்புரவாக்கப்பட வேண்டும். அந்த ஒப்புரவாகுதல் இன்றி, அவன் இருக்கும் நிலை கிறிஸ்துவை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களு-மாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்." (எபேசியர் 2:12).

பேதுரு, கொர்நேலியு வீட்டாரிடம் பேசும் பொழுது, "எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தேவன் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்கள்" என்றார் (அப் 10:36). ஒருவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது, பவுல் கூறுகிறார், இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக் கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." (ரோமர் 5:1). இயேசு தாமே நம்முடைய சமாதானம் என்று எபே 2:14,15-ல் வாசிக்கிறோம். ஒருவன் கிறிஸ்துவனாக மாறும் பொழுது அவனுக்கு சமாதானம் உண்டு. கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்களுக்கு அது இல்லை. "தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்." (கொலோசெயர் 3:15). 36 வருடங்களுக்கு முன்பு, நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தேன். தேவனோடு சமாதானம் பெற்றேன். அந்த சமாதானத்தை பெற விரும்புவோர், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிய வேண்டும்.

# மனிதனுடைய கொள்கை புத்தகங்கள் கைவிடப்பட வேண்டும்

**ஜி. எப். ரய்னஸ்**

அநேக வருடங்களுக்கு முன்பு என் மனதில் உறுதி செய்து கொண்டேன். மனிதனால் திட்டமிடப்பட்ட எல்லா மார்க்க சம்பந்தப்பட்ட கொள்கை புத்தகங்கள் விசுவாசத்துக்கு அவைகள் போதுமானதல்ல. அவைகள் வேத வசனத்துக்கு புறம்பானவை.

நான் கூறுவது, பரிசுத்த வேத வாக்கியங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவின் எளிமையான சுவிசேஷத்தை பிரசங்க மேடையிலிருந்து (Pulpit) அறிவிக்க வேண்டும்.


மனித சட்டதிட்டங்கள், மனித கோட்பாடுகள் வேதவசனத்திற்கு புறம்பான சபை அமைப்புகள் இவற்றை விட்டு விலகி, கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருக்க" (கலாத்தியர் 5:1) நான் விரும்புகிறேன்.

"வேதாகமம் மட்டுமே, விசுவாசம், கிரியை சம்பந்தப்பட்ட விசயத்தில் நமக்கு போதுமானது" என்ற எளிமையின் அடிப்படையில் எல்லா தேவனுடைய பிள்ளைகள் ஒன்றுபட வேண்டும், என்று வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜான் வெஸ்லி சொன்னார், கிறிஸ்தவ மார்க்கத்தில் பிரிவினை கொண்டுவந்த எல்லா சபை கூட்ட பெயர்களும், வேதவசனத்திற்கு புறம்பான சொற்றொடர்களும், அமைப்புகளும் மறக்கப்பட வேண்டும். தாழ்மையுள்ள அன்பான சீஷர்களாக, கர்த்தருடைய பாதத்தில் உட்கார்ந்து, பரிசுத்த வார்த்தைகளை வாசிப்போம். ஆவருடைய ஆவியை மனதில் வாங்கிக் கொள்வோம். ஆவருடைய வாழ்க்கையை நம் வாழ்வில் பிரதிபலிப்போம்.

# ஞானஸ்நானமும் அதன் தொடர்பும்

ராய் பீஸ்லி. Jr



இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதை அநேக நல்ல மக்கள் விசுவாசிப்பதில்லை என்பது உண்மையே, ஆனால் மத சம்பந்தப்பட்ட எந்த கேள்விக்கும் முடிவான பதில் பரிசுத்த வேதாகமமே. ஞானஸ்நானம் ஒரு புதிய ஏற்பாட்டு கட்டளை, ஞானஸ்நானத்தை புரிந்து கொள்ள, மற்ற காரியங்களுடன் அதனுடைய தொடர்பை நாம் கவனிக்க வேண்டும். ஆங்கில மொழியில் தொடர்பை சுட்டிக்காட்டக் கூடிய, முன்னிடைச் சொல் உண்டு: அது ஒரு பொருளுக்கும், இன்னொரு பொருளுக்கும், அதன் செயலுக்கும் இடையே உள்ள தொடர்பை (உறவை) காட்டும். இந்தக் கட்டுரையில் ஞானஸ்நானம் சம்பந்தப்பட்ட அநேக முன்னிடைச் சொற்களை (Prepositions) பார்ப்போம்.

முதலாவது, "in" என்கிற முன்னிடைச் சொல். யோவான் ஸ்நானகன் "நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்றார் (மத் 3:11). அப் 8-ம் அதிகாரத்தில், எத்தியோப்பிய மந்திரி ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றான், அப் 10:47, 48-ல் பேதுரு

கூறுகிறார், "நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா" என்றார். புதிய ஏற்பாட்டில் பல ஞானஸ்நானங்களைப் பற்றி பார்க்கிறோம். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுதல், அக்கினி ஞானஸ்நானம் முதலியன. ஆனால் இன்று ஒரே ஞானஸ்நானம் உண்டு (எபே 4:5). அந்த ஒரே ஞானஸ்நானமாவது, பிரதான கட்டளையில் சொல்லப்பட்ட ஞானஸ்நானம். இயேசு, "ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய், பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து" (மத் 28:19, 20). இந்த ஞானஸ்நானத்தை, "உலகத்தின் முடிவு பரியந்தம்" கடைபிடிக்க வேண்டும். இது மனிதன் மனிதனுக்கு கொடுக்கும் ஞானஸ்நானம். ஜலத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானம். "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே" என்று பார்க்கிறோம். (அப் 2:38). இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பது என்றால், அவருடைய அதிகாரத்தினால் என்று பொருள். இதை தேவனுடைய கனம், மகிமைக்கென்றே நாம் செய்ய கடமைபட்டிருக்கிறோம். அதுமாத்திரமல்ல இந்த செயல் கிறிஸ்துவுக்கு கீழ்படிவதை குறிக்கிறது. அவரை பெருமைபடுத்தி, பலனுக்காக அவரை சார்ந்திருத்தலை குறிக்கும். நாம் பெருமை பாராட்டத்தக்க கிரியை இது அல்ல.

இரண்டாவது, "By" என்கிற முன்னிடைச் சொல். 1 கொரி 12:13, கூறுகிறது, "ஒரே ஆவியினால் ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு" "ஒரே ஆவியினாலே" என்றால் என்ன? பவுலின் நிருபங்களில் இந்த சொற்றொடர் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால் என்ன அர்த்தத்தில்? இந்த சொற்றொடரின் பொருளை விளங்கிக்கொள்ள அவை உதவும். 1 கொரி 12:3 - ல், "ஆதலால் தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும் பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும் உங்களுக்கு தெரிவிக்கிறேன்." இங்கு அர்த்தம் தெளிவாக உள்ளது. அதன் பொருள், பரிசுத்த ஆவியின் "போதனையின் பிரகாரம்." 13-ம் வசனத்தில், அதே அர்த்தத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆவியினாலே

ஞானஸ்நானம் பண்ணப்படுதல் என்றால் பரிசுத்த ஆவியின் போதனை பிரகாரம் என்ற அர்த்தம்.

தம் மரணத்துக்கு சற்று முன்பு, இயேசு அப்போஸ்தலர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த, பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார். இந்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு, பேசியும், எழுதியும் வந்தனர். இப்பொழுது அப்படி பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டவர்கள் இல்லை. ஆனால் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட புத்தகம், வேதாகமம் (பைபிள்) நம் கையில் உண்டு. எழுதப்பட்ட இந்த வாக்கியங்கள் மூலம் பரிசுத்த ஆவியானவர் இன்று பேசுகிறார். அந்த வார்த்தை ஞானஸ்நானம் பெறும்படி கூறுகிறது. புதிய ஏற்பாட்டு போதனைக்கு நாம் ஞானஸ்நானத்தில் கீழ்படிந்தால், இதை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுகிறோம்.

மூன்றாவது "For" என்று முன்னிடைச் சொல். ஞானத்தைக் குறித்த வேதாகம போதனைக்கு இது தொடர்பு உண்டாக்குகிறது. அப்.2:38-ல், <u>பாவமன்னிப்புக்கென்று</u> நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் என பார்க்கிறோம். மதவட்டாரங்களில் For (என்று ஆக) என்ற வார்த்தையின் அர்த்தத்தைக் குறித்து, மத வட்டாரங்களில் அதிக குழப்பங்கள் நிலவுகின்றன. சிலர், அதற்கு, ஆகையினால், அதனிமித்தம் என்று கூறுவர். ஏற்கனவே பாவ மன்னிப்பை பெற்று விட்டதால், இரட்சிக்கப்பட்டு இருப்பதால், ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று வாதிடுவர். For என்கிற ஆங்கில PREPOSITION முன்னிடைச் சொல்லுக்கு ஆகையினால் என்று சில சமயம் அர்த்தம் கொள்ளுவது உண்மைதான். ஆனால் புதிய ஏற்பாடு மூல கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கிரேக்க மொழியில் முன்னிடைச் சொல் EIS, அதற்கு அப்படிப்பட்ட அர்த்தம் இல்லை.

அமெரிக்கன் ஸ்டாண்டர்டு வேதாகமம் மொழிபெயர்ப்பில் For என்ற முன்னிடைச் சொல்லுக்கு பதில் UNTO என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. பாவ மன்னிப்பைப் பெற, ஞானஸ்நானம் பெறும்படி மக்கள் கட்டளையிட்டனர் என்பதை

மொழிபெயர்ப்பாளர்கள் அறிந்திருந்தனர்.இதே முன்னிடைச் சொல் மத்தேயு 26:28-ல் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இயேசு கர்த்தர் பந்தியை தம் சீஷர்களுக்கு ஆயத்தப்படுத்திய போது, "இது பாவமன்னப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார். பாவமன்னிப்பை பெற்றதால், தம் இரத்தத்தை சிந்தியதாக அவர் நிச்சயமாக சொல்லவில்லை. பாவ மன்னிப்பை பெறுவதற்காக என்றார். இந்த அர்த்தம் தான் அப்.2:38-ல் பார்க்கிறோம். For என்கிற முன்னிடைச் சொல்லுக்கு UNTO அதற்காக என்று பொருள். பாவ மன்னிப்பைப் பெற நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒரு பிரசங்கியார் சவுலுக்கு சொன்னதும், இதற்கு பொருந்துவதாக உள்ளது. "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான். (அப்.22:16)

INTO உள்ளே, உள்ளாக என்ற சொல்லும் ஞானஸ்நானம் என்ற வார்த்தை சம்பந்தமாக பல தடவை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முன்னிடைச் சொல்லை தனியாக ஆராய்வோம். இந்த வார்த்தையும் கிரேக்க மொழி EIS - வார்த்தையும் ஒன்றுதான். 1கொரி 12:13-ல், "ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரே சரீரமாவது சபை. (எபேசி 1:22,23). கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்துக்குள்ளாக பிரவேசிக்க ஞானஸ்நானம் அவசியம். மேலும், ஞானஸ்நானம், பிதாகுமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டும். (மத்தேயு 28:19). இங்கு தேவத்துவத்தில் (God head) 3 நபர்கள் உள்ளனர். நாம் பரிசுத்த மூவர் நாமத்தினாலே இரட்சிப்புக்குரிய உறவு முறையில் நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம்.

ரோமர் 6:3-ல் "கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். பாவத்திற்கு மரித்த நாம், அதில் தொடர்ந்து ஜீவிக்க கூடாது" என்பதை வலியுறுத்துகிறார். பிறகு, கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது, பாவத்துக்கு மரிக்கிறோம் என்று கூறுகிறார்.

மீண்டும், கலாத்தியர் 3:27-ல் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறதை அறிகிறோம்.

கணக்கொப்புவிக்கதக்க பருவம் வந்த ஒவ்வொரு ஆத்துமாவும் இந்த கேள்விகளை தன்னைப் பார்த்து கேட்டுக் கொள்ள வேண்டும். ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறேனா? கிறிஸ்துவின் நாமத்தில்? ஒரே ஆவியினாலே பாவமன்னிப்புக்கென்று (for or unto)? ஒரே சரீரத்துக்குள்ளாக? பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே? (INTO) கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக? கிறிஸ்துவுக்குள்ளாக (INTO) உங்கள் பதில், இல்லை என்றால், அப்படி செய்ய ஏன் தாமதம் செய்கிறீர்?

எந்த மனிதனும் நீங்கள் பார்க்கிற வண்ணமாக சாதாரனமானவனாக இல்லை. நடக்கும் நிலையில், அவனுக்குள் அறிவு, சரித்திரம், அனுபவம், ஆன்மீகம், அழகு, உள்ளுணர்வு, உணர்ச்சிகள் ஒருங்கிணைந்த இப்படி எல்லாம் கலந்தவன்.

நிறைவான ஜீவியத்தை ஜீவித்தவன் முன்பாக நீங்கள் நிற்கும் பொழுது, அளவிட முடியாத செல்வத்தின் முன்பாக நிற்கிறீர்கள்.



# ஞானஸ்நானத்தில் நோக்கத்தை என்னால் காண முடியவில்லை

டிமர் ஈலம்

"ஞானஸ்நானத்தில் நோக்கத்தை பார்க்க முடியவில்லை" என்று கூறும் திரளான மக்கள் நேர்மையுள்ளவர்கள், யதார்த்தமுள்ளவர்கள்தான். சிலர் கூறுவர், "ஞானஸ்நானத்தில் ஒரு உண்மையான நோக்கத்தை நான் பார்க்கக்கூடுமானால் நான் ஞானஸ்நானம் எடுக்க பிரியப்படுகிறேன்" தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக ஞானஸ்நானத்தின் நோக்கத்தை காட்டுவதற்காக இக்கட்டுரையை படைக்கிறோம்.


ஞானஸ்நானத்தைப் பற்றிய எல்லா வசனங்களையும் ஆராய இடம் போதாது. ஆனால் இக்கட்டுரையில் ஞானஸ்நானத்தின் நோக்கத்தை விளக்க போதுமான வசனங்களை கவனிப்போம்.

ரோமர்6:3-ல் ஞானஸ்நானம் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். ஆகவே ஞானஸ்நானத்தின் நோக்கம், கிறிஸ்துவுக்குள்ளாக. நீங்கள் அதைச் செய்தீர்களா?

ஞானஸ்நானம் புதிய ஜீவனைத் தருகிறது. ரோமர்6:4-ல் "நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாகும்படி" ஆகவே, ஞானஸ்நானத்தின் நோக்கம், புதிய ஜீவனை (வாழ்வை) பெறுவது. புதிய வாழ்வு உங்களுக்கு வேண்டுமா? ஞானஸ்நானம் பெறாமல், புதிய வாழ்வை பெறுவது முடியாத காரியம். ஞானஸ்நானம், அவருடைய மரணத்தின் சாயல். அவருடைய மரணத்தின் சாயலில்

ஞானஸ்நானம் பெற்றால், அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்படுவோம் என்ற உறுதிமொழி கொடுக்கப்படுகிறது. முடிவாக, ஞானஸ்நானத்தின் நோக்கம் 1பேதுரு 3:21-ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது. "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனசாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." இந்த வசனத்தில் ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பது இரட்சிப்புக்காக என்பதை தயவு செய்து கவனிக்க மறவாதிருங்கள். ஞானஸ்நானம் இரட்சிக்கிறது. ஞானஸ்நானத்தின் நோக்கம் இரட்சிப்புக்கென்று தேவன் உங்களுக்கு சொல்ல வேண்டுமானால்,"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது" என்று கூறுவதைக் காட்டிலும் வேறு வித்தியாசமாக எப்படி சொல்லுவார்?.

நீங்கள் ஞானஸ்நானம் பெற விரும்பினால்,
உங்களுக்கு உதவ
கடமைப்பட்டிருக்கிறோம்.



# பாத்திரவான்களாய் காணிக்கை கொடுத்தல்

பில் நிக்ஸ்

சர்தை சபையில் உள்ள பரிசுத்தவான்கள், வெண்வஸ்திரந்தரித்து, கிறிஸ்துவோடே கூட நடப்பார்கள். ஏனெனில், "அவர்கள் பாத்திரவான்களானபடியால்" (வெளி 3:4). கர்த்தருக்காக எதைச் செய்தாலும் பாத்திரமாய் செய்ய வேண்டும். அதாவது போற்றத்தக்க, தகுதியான முறையில் (1கொரி 11:27). அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாய் நடக்க வேண்டும். (எபே 4:1). இது காணிக்கை கொடுத்தல் விஷயத்திலும் உண்மை.

சரீரப்பிரகாரமாக தேவன் நமக்கு அளித்த ஆசிர்வாதங்களில் ஒரு பகுதியை உற்சாகமாய் கர்த்தருக்கு திருப்பி காணிக்கையாக கொடுக்க வேண்டும். இதை மிக முக்கியமாக, முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டும். அநீதியுள்ள உக்கிராணக்காரன், ஐசுவரியவான் லாசரு, ஐசுவரியமுள்ள மதிகேடன், இன்னும் அநேக உவமைகளிலும், அநேக போதனைகளிலும் கர்த்தரும், அப்போஸ்தலர்களும் கொடுத்தலில் நம்முடைய பொறுப்பை வலியுறுத்தி வந்திருக்கின்றனர்.

2கொரி 8:1-15-ல் பவுல், நாம் ஏன் பாத்திரவான்களாய் கொடுக்க வேண்டுமென்பதற்கு 5 காரணங்களை கூறுகிறார். முதல் நூற்றாண்டில் இருந்ததை போல இன்றும் 21-ம் நூற்றாண்டின் ஜீவியத்திற்கும் அவை பொருந்துவதாக இருக்கிறது. பொருளாசை என்கிற வார்த்தையை இங்கு விட்டு விடுகிறோம். ஏனெனில், அந்த வார்த்தை கிரேக்க மொழியில் நல்ல நோக்கத்திற்காக புதிய

ஏற்பாட்டில் உபயோக்கப்படுத்தப்பட்டதே இல்லை. இந்த பேராசை ஒருவனுடைய மனோபாவத்தைக் கெடுத்து, உலக ஆதாயத்துக்காக திருடவும், பொய் சொல்லவும், விபச்சாரம் செய்யவும், கொலை பண்ணவும் தூண்டும். கிறிஸ்து மூலமாய் பெற்ற தேவனுடைய கிருபை இல்லாமல், நாம் எல்லாரும் பொருளாசைக்காரராய் இருப்போம். கிறிஸ்தவ மார்க்கம், பெருந்தன்மையுள்ள இருதயத்தை தந்து, ஏழை எளியவர்க்கு தேவைப்பட்டோருக்கு பகிர்ந்தளித்து அதன் மூலம் மகிழ்ச்சி அடைய வைக்கும். நாம் சந்தோஷமில்லாதபடி சுயநலமுள்ளவர்களாக இருக்கிறோம். நம்மிடத்திலுள்ளதை பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது, அது நல்ல மனப்பான்மையுடன் அன்பு, மகிழ்ச்சி, சமாதானத்துடன் திரும்ப வரும். இல்லாவிட்டால், நாம் கருமிகளாக, சுயநலமுள்ளவர்களாக மாறிவிடுவோம்.

(1) பாத்திரவான்களாய் கொடுப்பதற்கு பவுல் கூறும் முதல் காரணம், மற்றவர் முன்பாக ஒரு எடுத்துக்காட்டாக. மக்கதோனியா நாட்டு பரிசுத்தவான்கள், மிகுந்த உபத்திரவத்திலே கொடிய தரித்திரத்தில் உதாரத்துவமாய் கொடுத்ததை ஒரு உதாரணமாய் வைத்து, அகாயா நாட்டு கொரிந்தியர்களை, பவுல் கலக்கினார். "ஏழை, ஏழைக்கு இரங்குவான்" என்று யாரோ கூறி இருக்கிறார்கள். அவர்களுக்கு தரித்திர நிலை நன்கு தெரியும். ஆகவே அதே நிலையிலுள்ளவர்கள் பேரில் இரக்கம் காட்ட முடியும். இந்த சாதாரண ஏழை மக்கள்தான் கர்த்தர் போதனையை சந்தோஷமாய் கேட்டனர். பெரும்பாலான ஐசுவரியவான்கள் அவரை தள்ளுபடி செய்தனர். "மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகர் அழைக்கப்படவில்லை" (1கொரி 1:26). எப்படி அதை உபயோகப்படுத்துகிறார்களோ, அதைப் பொறுத்தே, ஐசுவரியம் ஒரு ஆசீர்வாதமாக அல்லது சாபமாக இருக்கக்கூடும். செல்வங்களையுடையவர்களாக இருப்பது தவறில்லை. லூக்கா

10:25-37-ல் வரும் நல்ல சமாரியனுக்கு கொஞ்சம் செல்வம் இருந்தது. கள்ளர் கையில் அகப்பட்ட மனிதனுக்கு உதவ முன்வந்தான். மற்றவரை கவனித்து பாருங்கள். தேவன் கொடுத்த உபகரணங்களை, சபைக்காக, சக கிறிஸ்தவர்களுக்காக செலவிட முன்வந்தால், அவர்களுடைய நல்ல மாதிரியை நீங்களும் பின்பற்றலாம். நல்ல மாதிரிகள் மற்றவர்களையும் தூண்டும். இதை அறிந்த பவுல், மக்கதோனியர்களை கருவியாக உபயோகித்து கொரிந்தியர்களை உற்சாகமூட்டினார்.

> "கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்குக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்". (லூக்கா 6:38)

(2) "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே. அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2கொரி 8:9). கொடுத்தல் பரலோகத்திலிருந்து ஆரம்பம் ஆனது. பூமியிலிருந்து அல்ல. "தேவன் தம்முடைய . . . . . . . குமாரனை . . . . . . தந்தருளி . . . . . . (யோவான் 3:16) அவர் கொடுத்த பரிசு, "ஒரே பேறான குமாரன்". இயேசு தாமாக முன்வந்து தம் ஜீவனைக் கொடுத்தார். (யோவான் 10:18). இதைத் தடுக்க இயேசு பிதாவினிடம் வேண்டி, 12 லேகியோன் தூதரை பெற்றிருக்கலாம். (மத்தேயு 20:53). ஆனால் கெட்டுப்போன ஆத்துமாக்களிடம் அன்பு கூர்ந்தார். இது மனிதனை இரட்சிக்க தேவனுடைய ஒரே திட்டம் என்று அவருக்குத் தெரியும். (ரோமர் 5:8) நம் கர்த்தருடைய மன உருக்கம், உதாரத்துவம் நமக்கு மாதிரியாக இருந்து, பாத்திரவான்களாய் கொடுக்க நம்மை உந்தி தள்ளுவதாக. சபை தன்னை வருத்திக்கொண்டு எந்த அளவுக்கு

கொடுக்கும்படி விழித்து எழுகிறார்களோ, அந்த அளவுக்குள்ளாக கொண்டு வர முடியும். அதன் பிறகு, வருத்திக்கொள்ளாத அளவுக்கு கொடுத்துக் கொண்டே போகலாம். ஏனெனில், அதற்குள் கொடுப்பதை நேசிக்கும் கிறிஸ்தவ ஆவியில் வளர்ந்திருப்போம். சுவிசேஷ கூட்டங்களை நடத்தவும், உலகத்தில் பல பாகங்களுக்குச் சென்று இயேசுவையும் அவரது அன்பையும் கேள்விப்படாத மக்களுக்கு போதிக்கவும், மிஸினரிமார்களை அனுப்ப பொருளாதாரம் தேவை. தங்கள் காணிக்கை பணத்தை பூராவும், சபை கட்டிடத்தை விரிவுபடுத்துவதிலும், அழகுபடுத்துவதிலுமாக செலவு செய்துவிட்டு, ஆத்தும ஆதாயப் பணிக்காக செலவிடாத சபை, ஒரு செத்துக்கொண்டிருக்கிற சபை. அழகான சபை கட்டிடங்கள் இருப்பது தவறான காரியம் அல்ல. கட்டிடங்களை கட்டி வைத்துக் கொண்டு சபையின் உயர்ந்த நோக்கமாகிய ஆத்தும ஆதாயப் பணியை மறந்துவிட்டால் அது தவறு. இது விலையேறப்பட்ட, தேவையான, தியாகத்தின் அடிப்படையில் கொடுப்பது.

(3) கொரிந்து பட்டணத்து சபையின் கடந்த கால குறிப்பு, பவுல் விசுவாசமாய், பாத்திரவான்களாய் கொடுக்கும்படி, அவர்களை உந்தித்தள்ள உபயோகித்த இன்னொரு யோசனை "அவர்களை இதைச் செய்கிறதற்கு மாத்திரமல்ல, செய்ய வேண்டுமென்று, உற்சாகப்படுகிறதற்கும் ஒரு வருஷமாய் ஆரம்பம் பண்ணினார்கள்" (2கொரி 8:10). எதை ஆரம்பித்தார்களோ அதை முடித்திருக்கிறார்கள். இது முக்கியமான, அவசரமான காரியம். அநேக நல்ல திட்டங்கள் தோல்வியடைகிறது. ஏனெனில், ஆரம்பித்த காரியத்தை முடிக்காமல் விட்டு விடுவதனால். இந்த முதுமொழியை நாம் யாவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். "உங்கள் சிறந்த நிலைக்கு கீழே விழுந்து விடாதே". கடந்த கால வெற்றிகளை நினைத்து சும்மா உட்கார்ந்து விடாதே. தற்கால காரியங்களை

அசட்டை பண்ணுவது, கடந்த கால நல்ல செயல்களை மதிப்பு இல்லாமல் செய்துவிடும்.

(4) நல்ல செயல்களுடன் நல்ல உணர்ச்சிகளை போடுவது அவசியம். "கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்ததை" பவுல் பாராட்டினார். அத்துடன், "உள்ளவைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக" என்று நினைவுபடுத்துகிறார். நமக்கு கொடுக்கப்பட்ட தருணம், திறமைக்கு தக்கவாறு தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார். காரணம், "ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால் அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும்" (வச.12). எட்கர் கஸ்ட், பிரசித்தி பெற்ற தன் பாடல், நாம் காணும் பிரசங்கம் என்பதில் கூறுகிறார்,

எல்லா பிரசங்கிமார்களில் சிறந்தவர்கள்
யாரெனில் அவர்களுடைய கொள்கையின்படி ஜீவிப்பவர்,
நல்லதை காண, செயலில் இறங்கு
ஒவ்வொருவருக்கும் தேவையானது

**(5) காரியங்களை சமன் செய்தல்:**

புறஜாதிகள் இப்பொழுது யூதர்களுக்கு மாம்சத்துக்குரிய காரியங்களில் உதவி செய்கிறார்கள் என்றார் பவுல். யூதர்கள் முதலில் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டவர்கள், அதை புறஜாதிகளுக்கு பகிர்ந்து கொண்டவர்கள். அந்த யூதர்களில் ஒருவன்தான் பவுல். ஐரோப்பிய, கிரேக்க நாட்டில் புறஜாதிகள் வளம் பெருகி இருந்தது. அவர்கள் வளமை அடைந்ததற்கு சாட்சியம். ஆனால் யூதரோ பஞ்சத்தில் அடிபட்டு, அநேகர் துன்பப்படுத்தப்பட்டனர். ஏனெனில், அவர்கள் சொந்த மார்க்கத்தை விட்டு கிறிஸ்தவர்களாக மாறி இருந்தார்கள். இப்பொழுது காரியங்கள் சமன் செய்யப்படுகிறது.

"சமநிலையிருக்கும்படி சொல்லுகிறேன், எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை. கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக". (2கொரி 8:14,15) உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு. அநேக நாட்களுக்குப் பின்பு சாலமோன் கூறும் வழி.

இயேசு, "கொடுங்கள். அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். (லூக்கா 6:38)

கொடுப்பதால் ஒருவன் ஏழ்மை நிலையை அடையப் போவதில்லை. காரணம், அவன் விதைத்ததை அறுவடை செய்வான். தேவனுடைய அருளால் மனிதன் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுகிறான். (சங் 37:25 ; ரோமர் 8:28; கலாத்தியர் 6:7)



# பாவம்

**பேசில் ஓவர்டன்**

எல்லா தீய காரியங்களில், பாவம் மிக மோசமானது. பிரசங்கியாராகிய நான் ஒரு காரியத்தை விரும்பி கேட்பேனாகில், பாவத்தை சரியாக விவரிக்கும் திறமையைத்தான் கேட்பேன். பிசாசு, ஒரு கீழே விழுந்த தேவதூதன் என்று நினைக்கின்றனர். ஒருவேளை அப்படியே இருக்கலாம் (1தீமோ 3:16). அவன் அப்படிப்பட்டவனானால், பாவம் பிசாசைவிட மிகக் கேடுகெட்டது. பாவத்தைப் பற்றிய பாடத்தை வெளிப்படுத்த எழுதப்பட்டதே வேதாகமம். "மனிதனுடைய மீட்பின் திட்டத்தைப் பற்றி எழுதப்பட்டதாகத்தானே நான் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று ஒருவர் கூறலாம். ஆம்! "எதிலிருந்து மீட்பு" என்று நான் கேட்பேன். "பாவத்திலிருந்து மீட்பு" என்று தான் பதில் வரும்.

"பாவம்" உண்மையானது. ஒரு பொய்த் தோற்றம் அல்ல. இதன் மெய்மையைக் குறித்து எந்த வேதாகம எழுத்தரும் சந்தேகத்துடன் இருந்ததில்லை.

தத்துவ ரீதியில் பாவம் நிஜமானது என்று இயேசு நிரூபிக்க முயன்றது கிடையாது. உண்மையிலே, தாம் சொன்ன எந்த காரியத்தையும் நிரூபிக்க முயலவில்லை. அவர் தெய்வீக கொள்கையை வலியுறுத்தினார். அவர் மக்களைப் பார்த்து, நீங்கள் பாவிகள் என்றார். அதைக் குறித்து ஒரு சர்ச்சையும் கிளம்பவில்லை. (யோவான் 8:7, 21, 24, 44) இயேசு குறிப்பிட்ட அந்த பாவிகள் அந்நாளைய மதத்தலைவர்கள். மத சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவர்கள் தவறில் இருந்தனர். இயேசுவினால் கடிந்து கொள்ளப்பட்ட சில மோசமான பாவங்களில், மத சம்பந்தப்பட்ட தவறுகள் இடம் பெறும். மக்கள், தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை, அந்த

அதிகாரத்தை மீறி செயல்பட்டால் அது பாவம். எதார்த்த போக்கு, நேர்மை, மனசாட்சி ஆகிய எதுவும் பாவத்தை சிறப்பாக மாற்ற முடியாது. தேவனுடைய பார்வையில், மிகப் பெரிய பாவம் என்று சொன்னால், அது தேவனுடைய வார்த்தைக்கு பதில் மனித பாரம்பரியங்களையும், மனித கோட்பாடுகளையும் சேர்ப்பதாகும். தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் ஒருவன் நேர்மையுடனும், உண்மையுடனும் இருக்க வேண்டியது அவசியம். ஆனால், ஒருவன் நேர்மையோடும், உண்மையோடும் இருப்பினும் மத விஷயத்தில் தவறில் இருக்கலாம். தேவனுடைய மாற்றப்படாத வார்த்தையிலிருந்து அவனுடைய தவறை சுட்டிக்காட்டியும், மனந்திரும்ப மறுத்தால் அப்படிப்பட்டவன் தேவனுடைய வார்த்தைக்கு பதில் தன் உண்மை தத்துவத்தையும், நேர்மையையும் நம்பி வாழ்ந்தால் தேவனுக்கு பிரியமாக வாழ முடியாது. பரலோகத்துக்கு நம்மை வழி நடத்துவது வேதாகமம்தான்; அதற்கு பதில் எதை சேர்த்தாலும் நாம் தேவனைப் புண்படுத்துகிற பாவத்தைச் செய்கிறோம். பவுல் ஒரு நேர்மையுள்ளவனாக, எதார்த்தமாக இருந்தவன். கிறிஸ்துவின் சபையை பாழ்படுத்திக் கொண்டிருக்கும்போது, நேர்மையோடு அப்படி செய்ததாக எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் செய்தது தவறு.(அப் 22:34;23:1;26:9-11). பவுலுக்கு தான்செய்தது தவறு என்று தெரிந்ததும், தவறை விட்டு வெளிறேினான்.

தேவன் செய்ய வேண்டாம் என்று சொன்னதை மனிதர் மீறிச் செய்தால், அவர்கள் பாவஞ் செய்கின்றனர். "பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1யோவான் 3:4). தேவனுடைய அந்த ஒரு நியாயப் பிரமாணத்தை மீறினாலும் பாவமே. தேவன் எதிர்பார்ப்பதை செய்யாமல் விடுவதும் பாவமே. (யாக்கோபு 4:17). அநேகர் இதை புரிந்து கொள்வதில்லை. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது. தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டும் என்றும்,

விசுவாசத்தை வாயினால் மனுஷர் முன்பாக அறிக்கையிட வேண்டும் என்றும், பாவ மன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் என்றும் போதிக்கிறது. (யோவான் 8:24; அப் 2:38; 8:35-39; 17:30). இவ்வாறு, மக்கள் இயேசுவின் சுவிசேஷத்துக்கு கீழ்படிந்தால் வேதாகமத்தில் காணும் அவருடைய ஒரே சபையில் அங்கமாக்கப்படுகின்றனர். ஒரு மனிதன் எவ்வளவு நல்லவனாக இருந்தாலும் சரி, தேவனுக்கு முன்பாக அவன் ஒன்றுமில்லை. தேவன் உரைத்த காரியங்களுக்கு கீழ்படியவில்லை என்றால், அவன் பாவம் செய்கிறான்.

"பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்". (ரோமர் 6:23)

## மிகவும் சுவாரஸ்யமான வேதாகமம்
### பாபி டாக்கரி

ஒரு தாய், தன் 8 வயது குமாரத்தியைப் பார்த்து, ஞாயிறு வேத பள்ளி பாடத்தை படிக்கும்படி முயற்சி செய்து கொண்டு இருந்தாள். தாய் அலமாரியிலிருந்து வேதாகமத்தை எடுத்து, தூசியைத் துடைத்து, தன் அருகே குமாரத்தியை அழைத்து, "வெளியில் விளையாட செல்லுமுன் வேத பாடத்தை நீ படிக்க வேண்டும்" என்றாள்.

"சரி, அம்மா", என்று அந்த சிறு பெண் கூறிவிட்டு, "நாம் இருவரும் பாட்டி வேதாகமத்திலிருந்து படிக்கலாமே, அது உன்னுடையதைக் காட்டிலும் அதிக சுவாரஸ்யமாய் இருக்கும்" என்றாள்.

"ஏன், அதை ஏன் அப்படி சொன்னாய், கண்ணே?" என் வேதாகமமும், பாட்டி வைத்துள்ள வேதாகமம் மாதிரிதானே! என்றாள் தாய்.

"அப்படி அல்ல அம்மா, பாட்டி வேதாகமம், உன்னுடையதைக் காட்டிலும் சுவாரஸ்யமானதாக இருக்கும். ஏனெனில் அவள் உன்னைக் காட்டிலும் அதிக நேரம் படிக்கிறாள்" என்று சிறு பெண் சொன்னாள்.

நாம் கற்றுக் கொள்ள விரும்பாத, ஆர்வம் காட்டாத ஒன்றை, செய்யும்படி மற்றவருக்கு போதிப்பது சிரமம்.

வார்த்தைகளைக் காட்டிலும் சத்தமாக கிரியைகள் பேசும். நாமே அதைச் செய்யாத போது வேத வாசிப்பைப் பற்றிய நம் ஆலோசனைகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்வது கஷ்டமாக இருக்கும்.

நாம் விசுவாசிக்கிற அந்த சத்தியத்தின்படி நாம் நடக்க தேவன் நமக்கு உதவி செய்வாராக.

# ஓரினச் சேர்க்கை

## டாம் கெல்டன்

இந்தக் காலங்களில் ஓரினச்சேர்க்கை ஒரு பெரிய பிரச்சனையாக மாறிவிட்டிருக்கிறது. பழங்காலத்தில் கூட இது பொதுவான பிரச்சனை என்றும், இந்த பாவத்தை செய்திருக்கின்றனர் என்றும், அடிக்கடி பேசப்பட்டு வந்த காரியம் என்றும், அனேகர் மறந்து விடுகின்றனர். 1கொ 6.9-11ல் பவுல் கூறுகிறார் "அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்பட ாதிருங்கள். வேசி மார்க்கத்தாரும், விக்கிரகாரா தனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர் ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை.

"உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும், கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்'' ஓரினச்சேர்க்கையை பவுல் இங்கு ஒரு பிரத்தியேகமான பாவமாக கருதவில்லை, மற்ற பாவங்களான திருட்டு, பொருளாசை, வெறி, விபச்சாரம் இவற்றுடன் சேர்த்து அதைக் குறிப்பிடுகிறார். அது பாவம் என்கிறார்.

ஆதியாகமம் 1:27ல் ஆணும், பெண்ணும் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறார்கள். "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்''. (ஆதி. 2.24)

ஆண் பெண் வேறுபாடு (செக்ஸ்) இருப்பதற்கு காரணம், ஒருவன் ஒருத்தி விவாகத்தில் இணைக்கப்படுவதற்கு அல்லது விவாகமாகாத நிலையை அனுசரிக்க. விபச்சாரம், வேசித்தனம், தங்கள் சரீரங்களை அவமானப்படுத்திக்கொள்வது, ஓரினச்சேர்க்கை, பல மனைவிகளை வைத்துக்கொள்ளுதல் இவைகளெல்லாவற்றையும் பற்றி வேதாகமம் குறிப்பிடுகிறது. பாலுணர்வை இப்படி எல்லாம் தவறாக பயன்படுத்துவதற்கு தேவன் அதை தரவில்லை. ஆணும் பெண்ணும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்ற ஐக்கியத்தில் காணப்படுவதே தேவசாயல். ஆகவேதான் ஒவ்வொருமுறையும் ஓரினச்சேர்க்கையைப் பற்றி குறிப்பிடும்போது வேதம் அதை கண்டனம் பண்ணுகிறது. (ஆதி.19:1-11 நியா.19:22, லேவி.18:22, 20:13, ரோ.1:24-32, 1தீமோ 1:8-10, 2பேதுரு.2:6-10, யூதா 7:1, 1கொரி.6:9-10)

*ஓரினச்சேர்க்கை ஒரு பாவம்*


இப்படிப்பட்ட பாவத்தைச் செய்கிறவர்களுக்கும் பவுல் ஒரு நற்செய்தி கூறுகின்றார், "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்றார். இந்தப் பாவங்களிலிருந்து அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பியிருக்கிறார்கள். ஞானஸ்நானம் பெற்று, பாவங்கள் போக கழுவப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறது.

ஓரினச்சேர்க்கையை மாற்ற முடியாது என்று கூறுவதெல்லாம் வெறும் விதண்டாவாதம், ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் தேவனுக்குக்கீழ்ப்படிய தேர்வு செய்யும் சுதந்திரம் உண்டு.

# கர்த்தர் பந்தி

## ஹான்ஸ். ஜே. டெடர் ஷெக்

கர்த்தர் பந்தி, நம்முடைய ஆராதனையில் ஒரு முக்கிய அம்சம். கர்த்தருடைய நாளிலே கலந்து கொள்ள வேண்டும். கர்த்தருடைய நாள் என்பது வாரத்தின் முதல் நாள் ஆகும். கிறிஸ்து தாமே இந்த பந்தியை ஆயத்தம் செய்தார். ஆகையினால் இது தெய்வீக அம்சம் கொண்டது. கிறிஸ்தவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ள வேண்டிய முக்கிய பாகம் "அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்கு கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது". (மத் 26:26-28) அப்பமும், பாத்திரமும் கிறிஸ்து உலகத்தார் பாவங்களுக்காக கல்வாரியில் தமது ஜீவனை பலியாக கொடுத்ததற்கு சாட்சி ஆகும். கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் ஒவ்வொரு முறையும் பங்கு கொள்ளும்போது நம்முடைய பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்த செயலை நினைவு கூறச் செய்கிறது.



அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக எழுதுகிறார். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நூம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்". (I கொரி 10:16,17) ஆகவே கர்த்தர் பந்தி ஒரு ஐக்கிய பந்தி ஆகும்.

மேலும் பவுல் எழுதுகிறார்,"இப்படியிருக்க எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் (I கொரி 11:27-29). வேறும் கர்த்தர் பந்தியில் கலந்து கொள்வது மட்டும் ஒரு பெரிய காரியம் அல்ல. உண்மையிலே கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு இருப்பதை அவருக்கு கீழ்ப்படிவதினாலே சாட்சியாக வெளிப்படுத்த வேண்டும். ஆராதனை செய்பவரின் இருதயத்தின் நிலை தேவனுடைய பார்வையில் செம்மையாக இருத்தல் வேண்டும். அதற்காகவே தன்னைத்தானே சோதித்தறிய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. தேவனுக்கு முன்பாக பயபக்தியோடு ஆழ்ந்த தியானத்துடன் கலந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு வாரமும் இந்த பந்தியில் கலந்து கொள்வது சடங்காச்சாரத்தைப் போல ஆகிவிடும். "என் பிதாவின் இராஜ்ஜியத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும்" என்று கிறிஸ்து சொன்னதினாலே (மத் 26:29), இராஜ்ஜியமாகிய

சபையில் அங்கத்தினர்களாக இருப்பவர்கள் மாத்திரமே இந்த கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ளும் சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள். மேலும் இயேசு கூறுவதைக் கேளுங்கள், "ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்". (லூக்கா 22:29) "கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது, நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக"."இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் (கொலோ 1:2,13) "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது". (எபேசியர் 1:7)

அப்பம் இயேசுவின் சரீரமாகவும், திராட்சை பழ ரசம் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகிறது என்ற கூற்றுக்கும், கிறிஸ்துவின் போதனைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. இறையியல் மேதைகள் அப்படிச் சொல்லி இருக்கிறார்களே தவிர வேத வசனத்தில் அப்படி கூறப்படவில்லை. கத்தோலிக்க சபையின் டிரண்ட் மகாநாட்டில் இப்படியாக முடிவெடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட கருத்தை வேத வசனத்தில் எங்கும் காண முடியாது.

கர்த்தர் பந்தி ஆவிக்குரிய சிந்தையுள்ள கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு ஆவிக்குரிய விருந்து. (I கொரி 11:23-24)

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளான கர்த்தருடைய நாளிலே,


கர்த்தருடைய பந்தியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். (அப் 20:7) இன்று நம்முடைய ஆராதனையும், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் பிரகாரமும், ஆதி கிறிஸ்தவர்கள் செய்து வந்த மாதிரியின்படியும் இருக்க வேண்டும்.

முடிவாக கிறிஸ்தவர்கள் கர்த்தர் பந்தியிலே கலந்து கொள்ளும் போது, கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறார்கள். (I கொரி 11:26) உண்மையிலே கர்த்தர் பந்தி ஒரு நேர்மையுள்ள எதார்த்தமான ஆராதனைக் கூட்டத்தில் ஒரு முக்கிய செயலாகும். கிறிஸ்துவுக்குள்ளான வெற்றியை வெளிப்படுத்தும் ஒரு வாரக் கொண்டாட்டம்.



# விசுவாசத்தைப் பற்றிய கண்ணோட்டம்

ஓ. பி. பேர்டு



எவ்வாறு விசுவாசம் தேவனிடத்தில் இருந்து ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறது என்கிற விஷயத்தில் மக்கள் வித்தியா சப்பட்ட கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவனுக்கு விசுவாசம் அவசியம் என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்கி ன்றனர். புதிய ஏற்பாட்டில் ஒரு அதிகாரத்தில் அதாவது, எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் விசுவாசம் என்றால் என்ன? எவ்வாறு விசுவாசம் கிரியை செய்து அநேகருக்கு தேவனிட த்திலிருந்து ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது என்பதற்கான மாதிரிகளும் கூறப்பட்டிருக்கிறது.

விசுவாசம் என்றால் என்ன? "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும். காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது". (எபிரேயர் 11:1) "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்

தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்". (எபிரேயர் 11:6)

இதிலிருந்து, தேவனிடத்தில் விசுவாசம் வைப்பது என்றால், தேவன் உண்மையுள்ளவர், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்று விசுவாசிப்பதேயாகும். தேவனுடைய ஆவிக்குரிய பலன்களை நாம் புறக்கண்களால் காண முடியாது. இந்த ஜீவியத்திற்கு அப்பாற்பட்ட பலன்களோ நம் மனம் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு பிரதானமானது. தேவனிடத்திலும் விசுவாசம் வைத்திருப்பவர்கள் அந்த நித்திய ஆசீர்வாதங்களை பெறுவதற்கான நம்பிக்கையில் ஜீவிப்பார்கள். இந்த விசுவாசம் அவர்களுக்கு அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கான உறுதியையும் அளிக்கிறது.

இந்த அதிகாரத்தில் மீதியுள்ள வசனங்களில் விசுவாசவீரர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வாறு தேவனுடைய பிள்ளைகள் வித்தியாசப்பட்ட ஆசீர்வாதங்களை அடைகிறார்கள் என்பதை இந்த மாதிரிகள் விவரிக்கின்றன. ஒவ்வொரு சம்பவங்களும், விசுவாசத்தினால் இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள். "அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்" (எபிரேயர் 11:2)

அவற்றில் விசேஷமான மாதிரிகளில் ஒன்று எபிரெயர் 11:30-ம் வசனத்தில் காணலாம். "விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது". இந்த மதில்கள் விழுந்த விவரங்கள் எல்லாம் பழைய ஏற்பாட்டிலுள்ள யோசுவா புத்தகம் 6-ம் அதிகாரத்தில் காணலாம். இஸ்ரவேல் புத்திரர்களை யோசுவா, தேசத்துக்குள் வழிநடத்துகின்ற போது தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின முதல் பட்டணமாகிய எரிகோவுக்கு வந்தார்கள். அந்த பட்டணம் பெரிய

மதில்களால் பாதுகாக்கப்பட்டிருந்தது. "கர்த்தர் யோசுவாவை நோக்கி, இதோ எரிகோவையும், அதின் ராஜாவையும், யுத்த வீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன். (யோசுவா 6:2) தேவன் அவர்களுக்கு அந்த பட்டணத்தை அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்தார். ஆகையினால் அதை அவர்கள் தேவனுடைய கிருபையினால் பெற்றார்கள்.

தேவன் யோசுவாவை நோக்கி இஸ்ரவேலர்கள் பட்டணத்தைச் சூழ்ந்து ஒரு நாளைக்கு ஒரு தரம் வீதம் ஆறுநாள் சுற்றிவந்து ஏழாம் நாளில் ஏழுதரம் சுற்றிவர வேண்டும். அதன்பிறகு ஆசாரியர் எக்காளாங்களை ஊதி ஜனங்களெல்லாரும் ஆர்ப்பரிக்க வேண்டும் என்றார். இவைகளைச் செய்தால் மதில் விழும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். அவர்கள் அதற்கு கீழ்படிந்தனர். அதன் பிறகு மதிலும் விழுந்தது, ஜனங்கள் சென்று பட்டணத்தைப் பிடித்தனர். (யோசுவா 6:20) அவர்கள் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டி இருந்தது. இருப்பினும் தேவனுடைய கிருபையால் அதைப் பெற்றனர். மேலும், விசுவாசத்தினாலே மதில்கள் விழுந்தது. இன்றுள்ள மக்களைப் போலவே யோசுவாவும், இஸ்ரவேலர்களும் நினைத்து,"மதில்களைச் சுற்றுவதினால் ஒரு வல்லமையும் இல்லை. விசுவாசத்திற்கு பதில் ஏதேனும் கிரியை செய்தால்தான் அது சாத்தியமாகும்" என்று எண்ணி இருந்தால் அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றியடைந்திருக்க மாட்டார்கள். அப்படி எண்ணுவது எபிரெயர் 11:30 வசனத்தின் பிரகாரம் தவறான கண்ணோட்டம். யோசுவாவும், இஸ்ரவேலர்களும் மதிலை சுற்றி வந்ததன் காரணம் தேவன் அவ்வாறு கட்டளையிட்டு இருந்தார். அதற்கு கீழ்படிந்தால் பட்டணத்தை ஒப்புக் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். நாங்கள் விசுவாசம் மாத்திரம் வைப்போம், மதில்கள் விழட்டும் என்று சும்மா இருந்திருந்தால் அது அவர்களுடைய அவிசுவாசத்தைக் காட்டக் கூடியதாயிருக்கும்.

நாம் இதை பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு ஒப்பிட்டு பார்ப்போம். நாம் தேவனுடைய கிருபையினாலும் விசுவாசத்தைக் கொண்டும் இரட்சிக்கப்படுகிறோம். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்") எபே 2:8-10)

தேவனுடைய கிருபையினாலே (ஒரு பரிசாக) நாம் இரட்சிப்பை பெறுகிறோம். மேலும் இந்த கிருபையினால் வரக்கூடிய அனுகூலங்களை விசுவாசத்தை கொண்டு அடைகிறோம். "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

"அவர் மூலமாய் நாம் இந்த கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம்". (ரோமர் 5:1-2)

பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு முன்னதாக ஒரு பாவி கீழ்படிய ஏதாவது கட்டளைகளை தேவன் கொடுக்கிறாரா? இயேசு உயிர்த்தெழுந்த பிறகு விசுவாசத்தினால் இரட்சிக்கபட்ட மக்களைப் பற்றிய முதல் உதாரணம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் 2ம் அதிகாரத்தில் காண்கிறோம். பெந்தகொஸ்தே நாளிலே அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு உன்னதமான பிரசங்கத்தை செய்தார். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைக் கண்ணாரக் கண்டதாக பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் சாட்சி கொடுத்தார்கள். "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்ட பொழுது

இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி". (அப் 2:36-39)

"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்". (அப் 2:41)

எரிகோ பட்டணத்தில் தேவன் கட்டளைகளையும், வாக்குத்தத்தத்தையும் கொடுத்திருந்தார். கட்டளைகளுக்கு கீழ்படிந்தபோது ஆசீர்வாதம் கிடைக்கப் பெற்றன. அது விசுவாசத்தினால் கிடைத்தது. பெந்தகொஸ்தே நாளில் தேவன் கட்டளைகளையும், ஆசீர்வாதத்திற்கான வாக்குதத்தத்தையும் கொடுத்திருந்தார். அந்த கட்டளைகளுக்கு கீழ்படிந்த பின்னரே ஆசீர்வாதம் கிடைத்தது. அது விசுவாசத்தினால் கிடைத்தது.

யோசுவாவும், இஸ்ரவேலர்களும் பழைய நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள். பேதுரு பெந்தகொஸ்தே நாளிலே புதிய ஏற்பாட்டின் செய்தியை பிரசங்கித்தார். இந்த இரண்டு உடன்படிக்கைகளிலும் கட்டளைகள் வித்தியாசப்பட்டிருந்தது. ஆனால் புதிய உடன்படிக்கைக்கு கீழும், பழைய உடன்படிக்கைக்கு

கீழும் விசுவாசம் ஒன்றாகவே இருந்தது. மேலும் தேவனுடைய ஆசீர்வாதங்களை கொண்டு வர ஒரே மாதிரியாக செயல்பட்டது. விசுவாசம் எப்படிப்பட்டது என்பதை புதிய உடன்படிக்கைக்கு கீழ்வாழும் மக்களுக்கு காண்பிக்க தேவன் விரும்பினார். அதற்கு பழைய உடன்படிக்கையின் கீழ் விசுவாசத்தை படம் பிடித்துக் காட்டுகிறார். ஆகையினால் இரண்டு உடன்படிக்கையின் கீழ் விசுவாசத்தின் தன்மை ஒரே மாதிரியாக இருந்தது. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இரட்சிக்கப்பட்டவர்களின் வேறு சில உதாரணங்களும் உள்ளன. இந்த எல்லா உதாரணங்களிலும் மக்கள் விசுவாசத்தினாலே உந்தப்பட்டு தேவனுக்கு கீழ்படிந்ததினாலே அவர்கள் விசுவாசம் தேவனுடைய ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது.

அன்பார்ந்த வாசக நண்பனே, தேவனிடத்திலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் நீங்கள் விசுவாசமுடையவர்களாயிருந்தும், அந்த விசுவாசத்தினால் உந்தப்பட்டு பாவத்தை விட்டு மனம் திரும்பி பாவ மன்னிப்பிற்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் நீங்களும் இந்த கட்டளைகளுக்கு கீழ்படிந்து தம்மிடத்தில் சேர கிறிஸ்து ஆவலோடு காத்திருக்கின்றார்.

# தேவனை ஜாக்கிரதையாகத் தேடும் சிலர்.

### டான்.எல். நார்வுட்



தேவனுடன் நித்திய வாழ்வைப்பற்றி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியதை ஒருவன் கவனமாக பார்க்கும் போது, மத்தேயு 7.14ல் "ஜீவனுக்கு போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது அதை கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்றார். எபிரேய ஆசிரியர், ''தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என்றார். (எபி 11:6) பேதுருவும் "ஆகையால் சகோதரரே! உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதைய ாயிருங்கள் (2பேதுரு 1.10). அநேகர் செல்லும் பாதையை விட்டு, சிலர் இந்த இடுக்கமான வழியில் செல்வார்கள், அது ஒரு இடுக்கமான வழி. காரணம், ஒருவன் தன்னைத்தானே

வெறுமையாக்கி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுக்க வேண்டியது அவசியம். (2கொரி. 5:15)

அது ஒரு நெருக்கமான வழி ஏனெனில், ஒருவன் தன் வாழ்நாளெல்லாம் கிறிஸ்துவின் போதனைகளடங்கிய அந்த சுவிசேஷத்தின்படி நடக்கவேண்டும்.(ரோமர் 8.1, எபி 3.12-14). தேவனை உண்மையாகத் தேடுகிறவர்களை மட்டுமே அவர் ஆசீர்வதிப்பார். ஒன்றாகிய மெய்த்தேவனையும், அவர்

அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் என்று இயேசு சொன்னார் (யோவான் 17.3). அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்திருக்கிறோம் என்பதை அதினால் அறிவோம் என்கிறார் யோவான் (1யோவான் 2.3).

ஜாக்கிரதை என்று சொல்லும் போது, கவனத்தோடும், முழு ஆர்வத்தோடும் செயல்பட எதிர்பார்க்கப்படுகிறது. எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்பொழுது "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள் (எபே 5.15-17) என்றார் பவுல்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பா னேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றார் இயேசு (மத்தேயு 7.21) என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது, என்றார் (யோவான் 7.16)

# தேவன் என்ன விரும்புகிறார்?

## கென்னத் டேவிஸ்

நம்மில் அநேகரைப் பார்த்துக் கேட்டால், தேவன் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, நாங்கள் அதை செய்வோம் என்று கூறுவோம். தேவன் என்ன விரும்புகிறாரோ, அதையே நாமும் உண்மையிலே விரும்புகிறோமா என்று நம்மைப் பார்த்து கேட்பது நன்றாக இருக்கும். தேவன் நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதைச் செய்ய விரும்புகிறவன்தான் உண்மையிலேயே கிறிஸ்தவன் என்று கூறமுடியும்.

உண்மையிலே தேவன் சபைக்கு என்ன செய்ய விரும்புகிறார்? சபை தமக்கு முழுவதும் ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும், வசனத்தை பிரசங்கிக்க வேண்டும், இரட்சிக்கப்பட்டவர்கள் பக்தி விருத்திக்கேதுவாகச் செய்ய வேண்டும், தேவைப்பட்டோருக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். எல்லா சந்தர்ப்பங்களிலும் சத்தியத்திற்காக நிற்கும் சபைதான், தேவனால் விரும்பப்படம் சபை.

என் வீட்டில் தேவன் என்ன செய்ய விரும்புகிறார்? அவர் நாமம் அங்கு மகிமை பட வேண்டும், எல்லா மனதிலும் அவருக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும். அவரில் அன்புகூர்ந்து, அவருக்கு கீழ்ப்படிய, பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கற்றுத் தர வேண்டும் என்று விரும்புகிறார். உங்கள் ஜீவியத்தில் கர்த்தர் என்ன விரும்புகிறார்? கெட்டுப் போன மக்களிடத்தில் அன்புக்கூர்ந்து அவர்கள் இரட்சிக்கப்பட ஏதேனும் உதவி செய்யக் கூடிய அளவிற்கு முழுவதும் ஒப்புக்

கொடுத்தவனாக நீங்கள் இருக்க விரும்புகிறார். இன்று ஒப்புக்கொ டுத்துவிட்டு நாளை உலக சிநேகிதனாக இராமல், உறுதிப்பட்டவனாக, விசுவாசமுள்ளவனாக இருக்க விரும்புகிறார்.

## *யார் இந்த இயேசு?*

இயேசு ஒரு நல்ல மனிதன் மட்டுமா? ஒரு தீர்க்கதரிசி மட்டுமா? தேவனுடைய அவதாரங்கள் என்று கூறிக் கொள்பவர்களில் இவரும் ஒருவரா? பரலோகத்திலிருந்து தேவன், "இதோ என் நேச குமாரன்" என்றார் (மத் 3:17) "நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்" என்று பிறவிக் குருடனிடத்தில் இயேசு சொன்னார் (யோவான் 9:35,37). இயேசு ஒரு பொய்யரா? அப்படியானால் அவர் ஒரு நல்லவராக இருக்க முடியாது. ஆனால் அவர் சத்தியத்தை பேசுகிறவர் என்பது உண்மையானால், அவர் வெறும் தீர்க்கதரிசியாக மட்டும் இருக்கமாட்டார், தம்முடைய கர்த்தத்துவத்தை யாருடனும் பகிர்ந்து கொடுக்க மாட்டார். மாறாக என் மூலமாக மட்டுமே ஒருவன் பரலோகத்திலிருக்கிற பிதாவை சென்றடைவான், என்று வெளிப்படையாக கூறி உள்ளார். இயேசுவின் காலியான கல்லறை அவரைப்பற்றிக் கூறுவது, "சிலுவையிலறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" (மத் 28:5,6) இதுவரை எந்த மனிதனும் மரணத்தை வென்றது இல்லை.

# சபை மீது கர்த்தருக்கு இருந்த தீவிர ஆர்வம் (வாஞ்சை)

கேரி.சி. ஹாம்டன்.

இயேசு தாம் சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தால் சபையை விலைக்கு வாங்கினார் (அப் 20:28). சபை கிறிஸ்துவின் மணவாட்டி (எபே 5:24) ஆகவே சபை கர்த்தருடைய சித்தத்தை கற்றுக் கொள்ள முன் வரவேண்டும்.

## உலகமெங்கும் சுவிசேஷம் பரம்ப ஆவல்

சுவிசேஷம் உலகம் முழுவதும் எடுத்துச் செல்லப்பட அப்படிப்பட்ட தரிசனம் உடையவர்களாக சபை இருக்க இயேசுவுக்கு, தீவிர ஆர்வம் இருந்தது. "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து அவர்களை நோக்கி, வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." ஆமென் (மத்தேயு 28 : 18-20)



அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே ஆரம்பம் ஆக வேண்டும் என்று அவர்

எதிர்பார்த்தார், அதன் பிறகே மற்ற இடங்களுக்கு செல்லவேண்டும், முடிவாக முழு உலகத்திற்கும் இரட்சிக்கின்ற சுவிசேஷம் சென்றடைய வேண்டும் (லூக்கா 24:46,47. அப் 1:8)

சகோதர அன்பில் சபை பொங்கி வழிய ஆசை

சகோதர அன்பில் பொங்கி வழியத்தக்க ஒரே சரீரமாக சபை இருக்க கர்த்தர் மிகுந்த ஆர்வமுடையவராக இருந்தார். பூமியிலே தம்முடைய அந்திக் காலத்தில் இயேசு கூறியதாவது. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று (யோவான் 13:34,35) அப்படிப்பட்ட அன்பை பேதுருவும் வலியுறுத்தினார். "எல்லாவற்றிற்கும்...மேலாக ஒரிவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிரு அது எவ்வாறு சாத்தியமாகும் என்று யாக்கோபு கூறுகிறார் "சகோதரரே உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு மோசம் போகும் போது மற்றொருவன் அவனைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவான் என்று அறியக்கடவன்" (1பேதுரு 4:8) (யாக் 5:19,20)

சபையாகிய மணவாட்டியை தம்முடன் பரம வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.

எபே:5.ம் அதிகாரத்தில் பவுல், சபைக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவை கணவன் மனைவி உறவுடன் ஒப்பிடுகிறார் (எபே 5:25-27) சிமிர்னா சபையைப் பார்த்து, "மரணமே எதிர்கொண்டாலும் உன் விசவாசத்தில் உறுதியாயிரு" என்றார், அப்பொழுது ஜீவ கிரீடத்தை தருவேன் என்றார் (வெளி 2:10) பவுலும், கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் நீதியின் கிரீடத்தை தந்தருளுவார் என்றார் (2தீமோ 4:6-8) கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாகிய நம்முடைய பெரிய விருப்பம், அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதே, ஆதலால் சுவிசேஷத்தை சகல மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதினிமித்தம் சகோதர அன்பில் அனல்

பற்றி எறிய வேண்டும், முடிவாக பிதாவின் வீட்டில் நாம் சென்றடைய, அதற்கு பாத்திரமுள்ள அவருடைய உண்மையுள்ள அன்பான ஆயத்தப்பட்ட மணவாட்டியாக இருக்க நம்மால் ஆன மட்டும் பிரயாசப்பட வேண்டும்.

கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள உறவு

"பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன் உன்னை பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன் (ஏசாயா 43.1)

"நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன்" (2கொரி 11.2)

"நீங்கள் மரித்தோலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி தேவனுக்கென்று கனி கொடுக்கும் படி" (ரோமர் 7.4)



# ஆதிசபை (கிறிஸ்துவின் சபை) வெற்றியடைந்தது ஏன்?

ஜெரி ஜென்கின்ஸ்

முதல் நூற்றாண்டு சபை அதிசயத்தக்க வண்ணம் வளர்ந்து பரவி வந்ததை கண்டு தப்பெண்ணம் கொண்ட சரித்திர ஆசிரியர்கள் கூட மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். இந்த அபூர்வ வளர்ச்சியைக் குறித்து லூக்கா எழுதும் பொழுது, "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப் 2:41) வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள் அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது (அப் 4:4) திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகதிமாய்ச் சேர்க்கப்பட்டார்கள் (அப் 5:14) அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் (அப் 6:1) தேவ வசனம் விருத்தியடைந்து, சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று, ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசித்துக் கீழ்ப்படிந்தார்கள் (அப் 6:17) கிறிஸ்தவ மார்க்கம் டினாமினேசன் சபைகளாக பிரிந்து போவதற்கு முன்பு சுமார் 25,000 கிறிஸ்தவர்கள் இருந்திருக்கக் கூடும் என்று இந்த கட்டுரை ஆசிரியர் கணக்கிட்டிருக்கிறார். அவர்களுடைய வெற்றியின் இரகசியம் என்ன? 120 பயந்த சீஷர்களைக் கொண்ட சிறு கூட்டம் எவ்வாறு இப்படிப்பட்ட வெற்றியுள்ள ஆத்துமா ஆதாயப்பணிகளை செய்ய முடிந்தது. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம் நிச்சயமாக கீழ்க்கண்ட நான்கையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

**அவர்கள் சிலுவையின் நிழலின் நின்றனர்:**

தங்களுடைய நெருங்கிய நண்பரும் வழிகாட்டியுமாகிய அவர் (கிறிஸ்து) சிலுவையில் அறையப்பட்டதைக் கண்டு இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை தூரத்தில் நின்று அவிசுவாசத்துடன் அவர் காயத்தின் மேல் காயம் அடைவதையும், அவமானத்தின் மேல் அவமானம் அடைவதையும், முடிவில் சிலுவையில் தம் ஆவியை ஒப்புக்கொடுத்ததையும் பாாத்துக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட ஒப்புக்கொடுத்தல், பக்தி மற்றும் பாசம் அவர்கள் இருதயங்களில் நினைவில் நிற்க, வெட்கப்படாமல் கிறிஸ்துவின் ஜீவியத்தைப் பற்றிய கதையைக் கூறினார்கள்.

**அவர்கள் ஆராதனையில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்:**

ஏசாயா தீர்க்கதரிசி உரைத்தது போல (ஏசாயா 6:1-8) அவர் ஏற்படுத்திய வழியில், தேவனை ஆராதிப்பதில் கிடைக்கும் அனுபவத்தை முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் முழுவதும் அறிந்திருந்தார்கள். மிகுந்த ஆர்வத்துடனும், எழுச்சியுடனும் அவர்கள் பாடி, ஜெபித்து காணிக்கை கொடுத்து, வேதத்தைப் படித்து மற்றும் கர்த்தர் பந்தியிலே கலந்து கொண்டார்கள். சபை கூடிவருதலை விட்டு விட்டு, ஒழுங்கற்றுத் திரிந்தவர்கள் 21-ம் நூற்றாண்டைப் போலவே துன்பங்கள் வந்த போது நிலைத்து நிற்கவில்லை. வேதவாக்கியம் கூறுகிறது, அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அன்னியோன்யத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப் 2:42)

**அவர்கள் தங்கள் ஜீவியத்தில் பரிசுத்தமாக இருந்தனர்:**

அனனியா, சப்பீராள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை, சீஷர்கள் மத்தியில் ஒரு பயபக்தியை உண்டாக்கிற்று (அப் 5:11) கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு வெளியில் இருந்த திரளான புருஷர்களும்,

ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி கர்த்தரிடமாக சேர்க்கப்பட்டார்கள். சிலர் இன்று தேவ பயத்தோடு கூடிய ஜீவியத்தின் வல்லமையைக் குறைத்து உபதேச விஷயத்தில் சரியாக இருக்க வலியுறுத்தும் நேரத்தில், இந்த ஆதி கிறிஸ்தவர்கள் அவை இரண்டு பண்புகளிலும் சேர்ந்து செயல்பட வேண்டுமென்று விசுவாசித்தனர். ஆதி சபையில் பரிசுத்தமான ஜீவியம் ஒரு மேன்மையான பண்பாக எண்ணப்பட்டது.

**அவர்கள் வார்த்தையின் வல்லமையை மதித்தனர்:**

இந்த வளர்ச்சிக்கு தங்கள் முயற்சியே காரணம் என்று யாரும் நம்பவில்லை. தங்களுடைய தனிப்பட்ட தியாகத்தினால் அல்ல. அந்தத் துன்பத்தினிமித்தம் இந்த மகிழ்ச்சி வந்தது என்று தேவ வசனத்தை தைரியமாகச் சொன்னார்கள் (அப் 4:31, 5:41) எதிர்ப்பு அதிகதிகமாக வளர வளர மன உறுதி என்கிற நெருப்பு பிரகாசமாக ஜொலித்தது. (புருஷரும், ஸ்திரீகளும் கனவு கண்டனர்)

# புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தை புதுப்பித்தல்

பிரான்க் செஸ்ஸர்

இயேசு கிறிஸ்து முதன்முறைாக இப்பூலோகத்திற்கு வந்த பொழுது, மனுக்குலம் (அநேக கூட்டங்கள்) தேவனுடைய கட்டளைகளைப் பார்க்கிலும் தங்கள் பாரம் பரியங்களைக் குறித்தும் (மனிதனால் இயற்றப்பட்ட கோட்பாடுகளைக் குறித்தும்) அக்கறை காட்டுகிறவர்களாக இருந்தனர். தம்மை பின்பற்றுகிறவர்கள் இவ்வாறு தன்னலக் கட்சிகளாகவும், மதப்பிளவு கூட்டங்களாகவும் பிரிந்து இருந்தால், ஆரம்பத்திலே அழிந்து போவார்கள் என்று இயேசுவுக்கு நன்கு தெரிந்து இருந்தது.

ஆகையால், புதிய ஏற்பாடு முழுவதும் அநேக எச்சரிக்கைகளை ஒருவன் காணலாம். "தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த இராஜ்யமும் பாழாய்ப்போம். தனக்குத் தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது" (மத்தேயு 12:25) இந்த வசனங்களின் பிரகாரம் தேவனால் ஸ்தாபிக்கப்படாமல் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒவ்வொரு மத பிரிவு கூட்டத்தின் முடிவு நிச்சயம் "அழிவு" தான். என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத்தேயு 15:13)

இத்தகைய எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டிருந்தும், இன்றைய நாட்களில் மதப்பிரிவு கூட்டங்கள் (டினாமினேசன்) ஓர் பெரிய பிரச்சனையாகவுள்ளது. கிறிஸ்தவ மார்க்கத்தின் கொள்கைகளுக்கு நேர் விரோதமாகவும் இருக்கிறது. இது தேவனுடைய எளிமையான வழியையும், வேதாகமத்தில் கூறப்பட்ட

அந்த ஒரே சபையை பற்றியும் மனிதர் அறிந்து கொள்ளாமல் இருக்கும்படிக்கு அவர்களுடைய மனதை குருடாக்கும் முயற்சியில் பிசாசு உபயோகிக்கும் சக்தியுள்ள ஆயுதம்.

வேதாகமத்தில் சபையை குறிக்க பயன்படுத்தப்பட்ட அநேக வார்த்தைகளில் "இராஜ்யம் என்கின்ற வார்த்தைகளை ஒன்றின் இடத்தில் ஒன்றை உபயோகிக்கிறார். சுவிசேஷத்திற்கு கீழ்படிந்த கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்கள் "இராஜ்யத்திற்குள் (சபைக்குள்) உட்படுத்தப்பட்டவர்கள் என்று கூறப்பட்டுள்ளது" (கொலோசெயர் 1:13)

இராஜ்யத்தின் விதை தேவனுடைய வசனம். (லூக்கா 8:10,11) ஒவ்வொரு விதையும் தங்கள் தங்கள் ஜாதியின் படியே கனிகளை கொடுக்க வேண்டும் என்று, இனவிருத்திக்கு தேவன் கொடுத்திருக்கும் பிரமாணம் கேட்கிறது, ஆப்பிள் விதை, அண்ணாசிப் பழங்களையும் அல்லது மனித விதை குரங்கை உருவாக்கும் என்று யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். இனவிருத்திக்கான அதே பிரமாணம் ஆவிக்குரிய இராஜ்யத்திற்கும் பொருந்தும். தேவனுடைய வார்த்தையாகிய சுத்தமான விதை உண்மையான இருதயமாகிய வளமுள்ள மண்ணில் விதைக்கப்படும் போது அதன் விளைவு கிறிஸ்தவர்களாக மாத்திரமே கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு ஒரே சபையின் அங்கத்தினர்களாக மாத்திரமே இருப்பார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ மார்க்கத்தின் இந்த தெய்வீக சத்தியம் பொருத்தமாக விளக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தொடர்ந்து அந்த முதல் பெந்தகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் பேதுருவின் முதல் சுவிசேஷ பிரசங்கத்தை கேட்க ஒரு திரளான கூட்டம் கூடி வந்திருந்தார்கள். அங்கு கூடி வந்த மக்கள் மனதில் அப்போஸ்தலர்கள் சுவிசேஷமாகிய சுத்த விதையை விதைக்க

முன்வந்தார்கள். சுமார் மூவாயிரம் இருதயங்களாகிய வளமான மண்ணில் அவை கிரியை செய்து அதன் விளைவாக ஒரு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கம் உதயமானது. அவர்கள் எல்லோரும் விசுவாசத்திலும், கிரியையிலும் ஐக்கியப்பட்டிருந்தபடியால் மத சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஒரே மாதிரி பொதுவான காரியங்களை பின்பற்ற வேண்டும் என்கின்ற கிறிஸ்துவின் ஜெபத்திற்கு உண்மையிலே பதில் கிடைத்தது. (யோவான் 17, அப்: 2:41-47)

அதற்கடுத்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பேதுருவினுடைய மற்றொரு பிரதான பிரசங்கம் உள்ளது. அதைக் கேட்டு திரளான கூட்டத்தினர் கீழ்ப்படிந்தனர் (அப் 4:4) அதே சுவிசேஷத்தின் விதை விதைக்கப்பட்டது. அதே கீழ்ப்படிதல் தேவைப்பட்டது. மேலும் அதே பிரதிபலனும் கிடைத்தது. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதிய ஆசிரியர், விசுவாசிகளுக்கு இடையே இருந்த ஐக்கியத்தை இவ்வாறாக வர்ணிக்கிறார். "விசுவாசிகள் ஒரே இதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள்". (அப் 4:32) முதல் முறையாக எருசலேமுக்கு வெளியே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதாக அப்போஸ்தலர் நடபடிகள் 8ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இடம் மாறினாலும் அதே சுவிசேஷத்தின் விதை விதைக்கப்பட்டு அதன் விளைவுகளில் எந்த மாற்றமும் இல்லாதிருந்தது.

அநேகர் நினைப்பதற்கு மாறாக ஒருவன் எந்த மதத்தை பின்பற்றுகிறான் என்பதிலே வித்தியாசம் உண்டு. சவுலின் குணப்படுதலில் இந்த உண்மையை நிரூபித்துக் காட்டலாம். ஒரு பக்தியுள்ள யூதனாக இருந்தும் பரிசேயர் மார்க்கத்தில் ஒரு விசுவாசமுள்ள அங்கத்தினனாகயிருந்தும் கிறிஸ்தவர்களாக மாற விரும்புவோர் அதே சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை உணர்ந்தான் (அப் 9:17, 18) அப்போஸ்தலனாகிய பவுலும், (முந்தைய பெயர் சவுல்) தான் குணப்பட்ட பிறகு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கம் ஸ்தாபிக்கப்படுவதற்கு மத்திய

நபர்களில் ஒருவராக விளங்கினார். அவர் ஊழியத்தின் பிரதிபலனாக கர்த்தருடைய சபை (பிராந்திய சபைகள்) அந்தியோகியா, இக்கோனியம், லிஸ்திரா, தெர்பை, பிலிப்பி, எபேசு, தெசலோனிக்கேயா, கொரிந்து இன்னும் அநேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்விதமான பிராந்திய சபைகள், மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட பாரம்பரிய டினாமினேசன் கூட்டங்களை போல பெயர், உபதேசம் இவைகளால் பிரிந்து கிடைக்கின்றதா? கூடாதே.

பவுல் இடத்தை மாற்றும் போதெல்லாம் சுவிசேஷத்தையும் மாற்றினார் என்று கூறுவோர் உண்டு. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரே சுவிசேஷ விதை விதைக்கப்பட்டு ஒவ்வொரு விதையும் தங்கள் ஜாதியின் படியே விதையைப் பிறப்பித்தது. இந்த பிராந்திய சபைகள் விசுவாசத்திலும், கிரியையிலும் ஐக்கியப்பட்டு இருந்ததாக வேத வசனம் கூறுகிறது "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோமர் 16:16)

உலகத்தின் இன்றைய தேவை புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தை புதுப்பித்தலாகும். இயேசு கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணின, கட்டி முடித்த சபை அந்த தெய்வீக ஒப்புக் கொடுத்த சபை திட்ட வரைபடத்திற்கு நாம் திரும்புவோமாக (மத் 16:18)

(எபேசியர் 5:25) வேதம் எங்கு பேசுகிறதோ அங்கு நாம் பேசி, வேதம் எங்கு மௌனமாயிருக்கிறதோ அங்கு நாம் மௌனமாயிருப்போமாக. நாம் வேதாகம வழியில் செய்து வேதாகம காரியங்களை வேதாகம பெயரிலேயே அழைப்போமாக. இது தான் டினாமினேசன் அல்லாத புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கம்.

# சபையில் அங்கத்தினராயிருப்பதைக் குறித்த சில கருத்து விளக்கம்.

மேக் லியான்

எங்கள் டி.வி நேயர் ஒருவர் நாம் தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்பில் நிற்கும் போது, நாம் எந்த பிரிவு கூட்டத்தை சேர்ந்தவர்கள் (டினாமினேஷன்) என்று கேட்க மாட்டார். தம்முடைய அன்பின் குமாரனுடைய சாயல் நம்மில் ஆவிக்குரிய மறுபிறப்பின் மூலமாக வாசஞ் செய்கிறதா என்று பார்ப்பார் என்று மாத்திரம் அறிவேன் என்றார். அவர் கூறுவது உண்மையாக இருக்கலாம், ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் அவருடைய சபையில் இருப்பதினால், தேவனுக்கு அதைப் பற்றிய அக்கரை இருக்காது என்று அர்த்தம் ஆகாது (அப் 2.47) நம்முடைய சந்ததியில் நமக்கு இருக்கும் பிரச்சனைகயில் ஒன்று பிரிவு கூட்ட சபைகள் (டினாமினேஷன்) என்ற இந்த இரண்டு வார்த்தைகளைப் பற்றிய குழப்பம். “சபை” என்ற வார்த்தை (ஜேம்ஸ் மன்னர் மொழி பெயர்ப்பில் கே.ஜே.வி) புதிய ஏற்பாட்டில் 112 தடவை வருகிறது. ஆகையால் அது ஒரு தவறான வார்த்தை அல்ல, ஆனால் அது வேதாகம வார்த்தை 76 தடவை ஒருமையிலும் (சபை) உதாரணமாக மத் 16:18, அப் 20:28. கிறிஸ்து ஒரே ஒரு சபையைக் கட்டினார், விலைக்கு வாங்கினார். 26 தடவை பன்மையில் (சபைகள்) உதாரணமாக கலா 1.2:22 வருகிறது. இங்கு கலாத்தியா, யூதேயா மாவட்டங்களிலிருந்த பிராந்திய சபைகளிலிருந்த மக்களைக் குறிக்கும், ஒருமையாகவோ, பன்மையாகவோ வேத வாக்கியங்களில் எங்கும் சபை ஒரு பிரிவு கூட்டம் (டினாமினேஷன்) என்று குறிப்பிடப்படவில்லை. மாறாக, கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள், மீட்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் கூட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அப் 2.47, 20.28).

எந்த பிரிவு கூட்டங்களையும் சேராதவர்களாக நாம் இருக்க வேண்டுமானால் பிரிவு கூட்ட சபையினர் எண்ணங்களை நம் மனதிலிருந்து அகற்ற வேண்டும் உலகம் பூராவும் பிரிவு கூட்ட சபைகள் நிறைந்திருக்கின்ற இந்நிலையில் அது அவ்வளவு சுலபமல்ல நாம் ஒரு பிரிவு கூட்ட சபையை சேராமல் கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருப்பதற்கு பாடுபட அதுவே ஒரு நல்ல நோக்கமாக அமையும்.

புதிய ஏற்பாட்டில் பிரிவுக் கூட்டம் (டினாமினேஷன்) என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை, ஒருமுறைக் கூட இல்லை. பிரிவுக் கூட்டம் (டினாமினேஷன்) என்றால் "பிரிந்து" பெயர் வைத்தல் என்று பொருள். நாம் இப்படி பல பலக் கூட்டங்களாகப் பிரிந்து, ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்தை அடையாளம் கண்டுகொள்ள வித்தியாசப்பட்ட நாமங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்று நம் கர்த்தர் விரும்ப மாட்டார். அவருடைய மக்கள் யாவரும் ஒன்றாயிருக்க ஜெபித்தார் (யோவான் 17:20-23) தேவனுக்குள் ஒரே சரீமாக ஒப்புரவாக்கப்பட, நமக்காக மரித்தார். யூதனென்றும், கிரேக்கரென்றும், அமெரிக்கனென்றும், ஆசியக்கண்டத் தினனென்றும், அல்லது ஆப்பிரிக்க கண்டத்தினனென்றும், அடிமையென்றும், சுயாதீனனென்றும் இல்லை. என்ன அருமையானக் கருத்து, இயேசுவுக்குள்ளான எல்லா விசுவாசிகளும் சரீரமான சபையில் ஒன்றாக இருப்பது (எபே 1.22,23, 4.1-4).

இயேசு ஒரே சபையை மட்டும் கட்டினார் (மத் 16.18) என்று கூறும் பொழுது, எந்த ஒரு பிரிவு கூட்ட சபையையும் நாம் குறிப்பிடுவதில்லை. வேதாகமம், "சபை" என்ற வார்த்தையை எவ்வாறு உபயோகிக்கிறதோ அவ்வாறே நாமும் உபயோகிக்கிறோம். நாம் அவ்வாறு உபயோகிக்கும் போது

சிலர் நாம் பிரிவு கூட்ட சபையைத் (டினாமினேஷன்) தான் குறிப்பிடுகிறோம் என்று நினைக்கிறார்கள், அடிக்கடி கோபப்படுகிறார்கள்.

உலகத்தில் தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்வதிலே நாம் பெருமையடைகிறோம். நாம் சரீர பிரகாரமான குடும்பங்களில் நம் ஒவ்வொருவருடைய நாமமும் தனிப் பட்ட ரீதியில் சிறப்புடையது. "திரளான ஐசுவரியத்தைப் பார்க்கிலும், நல்ல நாமமே சிறந்தது" தேவனுடைய நாமத்தைப் பாருங்கள். நித்தியமாக முழுமைக்கும், பரிசுத்தத்திற்கும் நன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருந்து வருகிறது, அவர் செயலில் அவருடைய நாமத்திற்கு ஒரு களங்கமும் இருந்ததில்லை. அந்த கறையில்லா ஒப்பற்ற நாமத்தை பாவிகளாயிருந்த மனிதர்கள் அதை தரித்துக் கொள்ள அனுமதித்தார்.

அவருக்குள் புதிய சிருஷ்டிகளாக அவருடைய பிள்ளைகளாகும்படி இந்த சிலாக்கியத்தைத் தந்தார். இந்த பெருமைக்கு நாம் எவ்வளவு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் "கிறிஸ்தவன்" என்ற நாமத்தின் பரிசுத்தத்தை நாம் காப்பாற்ற வேண்டும் அந்த நாமத்திற்கு களங்கம் ஏற்படாமல் நாம் செயல்பட வேண்டும். - பெட்டி பர்டன்-சோட்.



# தேவனுடைய பிள்ளைகள் என்று அடையாளம் காணுதல்

பில் மெக்பேர்லேண்ட்



"அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும், நன்மை உண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்கு பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே ஒரு இருதயத்தையும், ஒரே வழியையும் கட்டளையிட்டு" (எரேமியா 32:39)

தேவன் நம்மீது மேலான அன்பைச் செலுத்தி, அவருடைய பிள்ளைகள் என்று அழைக்கும்படியாகச் செய்தார் என்று யோவான் அறிந்திருந்தான். (1 யோவான் 3:1) நாம் "தேவனுடைய புத்திரர்" என்பதற்கு நம்முடைய ஜீவியமே சாட்சி கூறுகிறது என்பதையும் யோவான் அறிந்திருந்தான். தேவனுடைய பிள்ளைகள் என்பதை எவ்வாறு நிரூபிக்க முடியும்?

1. **"அவர்கள் நீதியை செய்கிறவர்களாயிருக்கிறார்கள்"**
   "அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறார்கள்". (1 யோவான் 2:29)

2. **அவர்கள் பாவத்தில் ஜீவிப்பதில்லை:**
   "தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்ய மாட்டான்". (1

யோவான் 3:9) ஒரு தேவனுடைய பிள்ளை பாவ வாழ்க்கையை நோக்கிச் செல்ல மாட்டான்.

3. **அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பு கூறுகிறார்கள்:**
"பிரியமானவர்களே, ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கக் கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். (1 யோவான் 4:7) தேவன் அன்பானவரானபடியால் அவருடைய பிள்ளைகள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்".

4. **அவர்கள் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தவர்கள்:**
"இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூறுகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூறுகிறான். (1 யோவான் 5:1) இயேசு கிறிஸ்துவே நம்பப்படுவதற்கும், கீழ்ப்படிவதற்கும் தகுதியானவர் என்பதை அவர்கள் நம்புகிறார்கள்.

5. **அவர்கள் தீமையை வெல்லக் கூடியவர்கள்:**
"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (1 யோவான் 5:4)

6. **அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக தங்களைக் காத்துக் கொள்வார்கள்:**
"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான். பொல்லாங்கன் அவனைத் தொடான். (1

யோவான் 5:18) நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவது எப்படி என்று யோவான் நமக்கு எழுதவில்லை. நாம் தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்குக் கீழ்ப்படியும் போது, தேவனுடைய புத்திரராகிறோம் (1 பேதுரு 1:22,23). நாம் தேவனால் பிறந்தவர்கள் என்பதை நம் (வாழ்க்கையின்) ஜீவியத்தின் மூலம் காண்பிக்க வேண்டும் என்பதை யோவான் நமக்கு ஞாபகப்படுத்தும்படி எழுதியுள்ளார்.



# சபையும் இரட்சிப்பும்

ரான் பிரயண்ட்

வேத வாக்கியங்களில் ஒரு முக்கிய பாடமாக இருப்பது மனுஷனுடைய ஆத்தும இரட்சிப்பு. சிந்திக்கும் திறனுடைய ஒரு மனிதன் கேட்கும் கேள்வியை தாவீது கேட்கிறார்.

"மனுஷனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன்மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை எம்மாத்திரம்?"(சங் 8:4) இக்கேள்வியை நேர்மையோடும், விசுவாசத்தோடும் அனுகுவது தொடர்ந்து வரக்கூடிய சவாலாகும். பரலோகத்தின் தேவன் இரட்சிப்பை பொருத்த விஷயத்தில் மனிதன் மீது அக்கரை செலுத்துகிறார். அதினால் ஒரு இரட்சகரையும், ஒரு சுவிசேஷத்தையும் ஒரு சபையையும் கொடுத்திருக்கிறார். இந்த இரட்சகர் பிதாவினுடைய ஒரே பேரான குமாரனே ஆவார். மனுஷருடைய ஆத்தும இரட்சிப்பு தேவனுடைய நித்திய நோக்கமாகும். தேவனுடைய திட்டத்தில் சபையினுடைய முக்கிய பங்கு, எபேசியருக்கு எழுதிய, நிருபத்தில் அருமையாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சபையின் மூலமாக தேவனுடைய அனந்த ஞானமானது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த சபையில் மீட்கப்பட்டவர்கள் அனைவரும் உள்ளனர். அதற்கு கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். தேவனும் அவருடைய நோக்கமும் மகிமைபடுகிறது.(எபே 3:10,11,21) கிறிஸ்துவின் அன்பும், கிறிஸ்துவின் மரணமும் சபைக்காக வெளிப்படுத்த ப்பட்டிருக்கிறது (எபே 5:27)

இந்த சபையாகிய சரீரத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள், ஒப்புரவாக்கப்பட்டவர்கள், சேர்க்கப்படுகின்றனர்

(எபே:2.15 முதல்) சபையைப் பற்றி தெளிவான அறிவு இல்லாமல் இயேசுவின் கடந்த கால மற்றும் நிகழ்கால கிரியைகளை புரிந்து கொள்ளமுடியாது. ஏனெனில் சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம், அதற்கு கிறிஸ்துவே எல்லாவற்றிகும் மேலான தலையாக இருக்கிறார். சபையின் இந்த நோக்கத்திலிருந்து கிறிஸ்துவை பிரிக்க முயற்சிப்பது தலையிலிருந்து(கிறிஸ்து) சரீரத்தை(சபையை) பிரிப்பதற்கு ஒப்பாகும்.

வேதாகம கண்ணோட்டத்தில் சபையின் அழகையும் எளிமையையும் பார்க்கும்பொழுது நமக்கு அது ஒரு சவால். அதில் விசுவாசிகள் தேவனோடு ஐக்கியம் கொண்டுள்ளனர். விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் பகிர்ந்து கொள்கின்றனர். சுவிசேஷத்தை

பிரசங்கிப்பதில் தேவனுடைய திட்டம் அருமையாக அதில் மீட்கப்பட்ட யாவரும் சேர்க்கப்படுகின்றனர். மேலும் அதன் மூலம் பரலோகத்க்கு செல்ல ஒப்புரவாக வேண்டுமென்று எல்லா மக்களையும் அவர் அழைக்கிறார் (1கொரி 10:16:17, அப் 2:47, 2கொரி 5:17-21) இரட்சிப்பும் சபையும் பிரிக்க முடியாதது.

கிறிஸ்துவ மார்க்கம் பல விதமாக பார்க்கப்பருகிறது மதசம்பந்தமாக மற்றும் தத்துவ நீதியில் வேதாகம் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தப்படுவது கிறிஸ்தவ மார்க்கம் அல்ல. அனால் சபை கிறிஸ்துவின் வழியாக கர்த்தரால் சேர்க்கப்படும் விசுவாசிகளின் மொத்த தொருப்பு சபை முதல் நூற்றாண்டு சீடர்கள் சபையில் சேர்க்கப்பட்டனர். அவர்களே அந்த சபை. அவர்கள் சபையாகிய சரீரத்தில் அங்கத்தினர்கள். எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் சரீதத்க்கு சொந்த

மானவர்கள். அவர்கள் தேவனுடைய கிருபையாலும் கிறிஸ்துவின் இரத்தத்தாலும், பிழைக்கிறார்கள், அசைகிறார்கள், இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் தேவனுடைய ஒரே சித்தத்தின் படி நடக்கிறார்கள். தேவனுடைய குடும்பத்தில் ஜீவனுள்ள தேவனுடைய சபையில் சகோதர சகோதரிகளாக வாழகிறார்கள் (1 தீமோ 3:15) கிறிஸ்துவ மார்க்கம் என்னப்படுவது கிறிஸ்து முலமாய் தேவனுக்கு சொந்தமான மக்களைக்குறுக்கும் அவர்ளே சபை என்று அழைக்க ப்படுகின்றனர்.



# கடிகாரம்

வாழ்க்கை என்கிற கடிகாரம்
ஒருமுறை சுற்றும்
அது எப்பொழுது என்று
யாராலும் கூற முடியாது
கடிகார முட்கள் நிற்கும்
நடுநிசியில் அல்லது
அதிகாலையில்
ஒருவர் சொத்தை இழப்பது
மிகவும் விசனத்துக்குரியது
ஒருவர் ஆரோக்கியத்தை
இழப்பது அதிகம் விசனத்துக்குரியது
ஒருவர் ஆத்துமாவை
இழப்பது பெரிய இழப்பு
யாராலும் மீட்க முடியாது



# நீங்கள் எந்த மிஷனை சேர்ந்தவர்கள்?

கார்டன் ஹோகன்

"என்பரம் புதா நடாத நாள்ளெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்"

*மத்தேயு 15:13*

1960ம் ஆண்டின் இறுதியில் நானும், என்னுடன் மற்றொரு மிஷனரி குடும்பமும் தரை மார்க்கமாக ஜெர்மனியில் இருந்து பாகிஸ்தானுக்கு பிராயணப்பட்டு போய்க் கொண்டிருந்தோம். எல்லையைக் கடந்து லெபனானுக்கு செல்லும் போது ஒரு சுவாரஸ்யமான அனுபவம் கிடைத்தது. வழக்கமான பாஸ்போர்ட் பரிசோதனை முடிந்ததும் எங்கள் வேலையைப் பற்றிக் கேட்டனர். நாங்கள் எந்த மிஷனைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் கேட்டனர். நாங்கள் சுவிசேஷ பிரசங்கிமார்கள் என்று பதிலுரைத்தோம் அதற்கு கத்லோலிக்கரா? புராடஸ்ட்ண்ட்டா? என்று கேட்டனர்

இரண்டும் இல்லை, நாங்கள் வெறும் கிறிஸ்தவர்கள் என்று பதிலுரைத்தோம். அதன்பிறகு ஒரு நீண்ட விவாதம் நடந்தது இவர்கள் மொழிப்பயிற்சி பெற்றவர்கள். உலகத்திலுள்ள மதங்களைப் பற்றி தெரிந்தவர்கள். கத்தோலிக்கருமல்லாமல், புரோட்டஸ்டண்டும் அல்லாமல் ஒருவர் வெறும் கிறிஸ்தவர்கள் ஆக ஒருவன் இருக்கமுடியாது என்று எண்ணினர்.

ஆசியா கண்டத்தில் எங்கள் 32வருட ஊழியத்தில் நீங்கள் எந்த மிஷனைச் சேர்ந்தவர்கள் என்ற கேள்வி திரும்பத் திரும்ப கேட்கப்படடது. இந்த கேள்வியிலுள்ள சில முக்கிய அம்சங் களைப் பார்ப்போம்.

இப்படிப்பட்ட எண்ணங்கள் எங்கிருந்து ஆரம்பம் ஆனது? வித்தியாசப்பட்ட மிஷன்கள் என்கிற இந்த எண்ணம் தேவனிடத்தில் இருந்து தோன்றவில்லை. எபேசு பட்டணத்தில்லுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறபோது "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" என்றார். (எபே 4:4) எபேசு பட்டணத்து சபை மூப்பர்களைப் பார்த்து "ஆகையால் உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாய்யிருங்கள் நான் போன பின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் (அப் 20:28) பவுலின் இந்த எச்சரிக்கை சுமார் கி.பி. 300ல் பலித்தது தேவனுடைய வார்த்தையை விட்டுவிட்டு மனுஷருடைய எண்ணங்களுக்கம் பாரம்பரியங்களுக்கும் சென்றதன் பிரதிபலனாக இந்தவழிவிலகுதல் ஏற்பட்டது.

இயேசு கூறினார் - "நான் என் சபையைக் கட்டுவேன்". 16ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க ஸ்தாபனத்தின் கொடுமைகளை அக்கிரமங்களை எதிர்த்து சில மதப்பற்றுள்ள தலைவர்கள் புரட்சி செய்தனர், இதிலிருந்து வெளிவந்ததுதான் புராட்டஸ்டண்டு பிரிவு கூட்டசபை அல்லது மிஷன்கள் என்று இன்று நாம் அழைக்கிறோமே. அந்தக் கூட்டங்கள் பொதுவாக, கிறிஸ்தவ மார்க்கத்தில் ஒன்று கத்தோலிக்க சபை அல்லது புரோட்டஸ்டண்ட் சபை என்பார்கள். வேதாகமத்தில் இப்படி கூறப்படவில்லை.

பரிவு கூட்ட போதனைகளை மனிதர்தான் விதைத்தனர். நேர்மையுள்ள ஆணும், பெண்ணும் தாங்கள் எந்த மிஷனைச் சேர்ந்தவர்களோ அதன் கொள்கைகளை ஜாக்கிரதையாக பரிசோதனை செய்ய வேண்டும். உங்கள் மிஷன் பின்பற்றும்

கோட்பாடுகளை கொண்டு வந்தவர் தேவனா அல்லது மனிதனா? அநேக மதசம்பந்தப்பட்ட கூட்டங்கள், குழந்தைகள் ஆதாம் செய்த பாவத்தை பரம்பரையாக பெற்று வந்திருப்பதாகப் போதிக்கிறன்றனர், ஆகவே சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறனர்.

இந்த போதனை தேவனிடத்தில் இருந்து வந்ததா? அப்படியானால் வேதாகமத்தில் இருக்க வேண்டும். தேடிப்பாருங்கள். அப்படிப் பட்ட போதனை தேவனுடைய வார்த்தையில் இல்லை. மாடுகளா இப்படிப்பட்ட போதனை வேதத்தில் கண்டிக்கப்பட்டிருக்கிறது. பாவம் பரம்பரையாக வருவதில்லை என்று வேதத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. (எசே 18:20)

ஒருபாவி இரட்சிக்கப்பட்ட தனிப்பட்ட ரீதியில் சுவிசேஷத்தை கேட்க வேண்டும் அதைவிசுவாசித்து, பாவங்களை விட்டு மனந்திரும்ப வேண்டும். இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும். அதன்பிறகு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (மாற்கு 16:15-16, லூக்கா 13:3, மத்தேயு 10:32, அப் 2:38) இந்தக் கட்டளைக்களுக்கு ஒரு சிறு குழந்தை எப்படி கீழ்ப்படிய முடியும்.?

அநேகர் ஞானஸ்நானம் ரட்சிப்புக்கு அவசியம் இல்லை என்று போதிக்கின்றனர். தேவனும் அவருடைய குமாரனும் தேவை என்கிறார்கள் (மாற்கு 16:15,16 அப் 2:38)

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் பேதுரு "ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது" என்கிறார். (1பேதுரு 3:21)


நீங்கள் சேர்ந்து இருக்கும் மிஷனில் கர்த்தர் பந்தியை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் (ஞாயிற்றுக்கிழமை)

சபை ஆராதனையின் போது அனுசரிக்கிறார்களா? அல்லது மாதம் ஒரு முறையோ, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது வருடத்தில் ஒன்று இரண்டு முறை அனுசரிக்கிறார்களா? கிறிஸ்துவின் சீடர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தோறும் இந்த மேலான நினைவுகூறும் பந்தியை ஆசரித்து வந்ததாக வேதாகமம் தெளிவாக போதிக்கிறது. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் இதை அனுசரிக்க வேண்டியது அவசியம் (அப் 20:7)

# முடிவுரை

நீங்கள் எந்த மிஷனைச் சேர்ந்தவர்கள்?

நான் எந்த மிஷனைச் சேர்ந்தவனுமல்ல. ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன், அந்தசபைக்கு ஒரு மிஷன் உண்டு. அதுதான் ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவருதல். "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி நீங்கள் என் உபசேதத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் யோவன் 8:31,32.



# நீங்கள் ஏன் தீர விசாரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்கள்

கென் டெய்லர்

## கிறிஸ்துவின் சபை

1. இது இயேசு கிறிஸ்துவினால் கட்டப்பட்டது. "மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று இயேசு கூறினார். (மத்தேயு 16:18)

2. இது வேத வசனத்தின்படியான பெயரைக் கொண்டுள்ளது "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று பவுல் கூறுகிறார் (ரோமர் 16:16)

3. கிறிஸ்துவே இதற்குத் தலையாயிருக்கிறாா. "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என்று பவுல் கூறுகிறார் (எபேசியர் 1:22,23)

4. இது வேதவசனத்தின்படி அமைக்கப்பட்டது. பிலிப்பியர் நி□பத்தின் துவக்கத்தில் கவனித்துப் பார்த்தால், "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலும், தீமோத்தேயும், பிலிப்பு பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது" என்று பவுல் கூறுகிறார் (பிலிப்பியர் 1:1)

5. இது வேதவசனத்தின்படியான ஆராதனையுடையது. கர்த்தர் பந்தி (அப்போஸ்தலர் 20:7) பாடுதல் (எபேசியர் 5:19) ஜெபித்தல் (1 தெசலோனிக் கேயர் 5:17) பிரசங்கத்தில் (அப்போஸ்தலர் 20:7) காணிக்கை கொடுத்தல் (1 கொரி 16:1-2).

6. இதன் இரட்சிப்பின் திட்டம், கிறிஸ்துவினாலும், ஆதி சபையாராலும் போதிக்கப்பட்ட ஒரே மாதிரியையுடையதாயிருக்கிறது. கேள்விப்படுதல் (ரோமர் 10:17) விசுவாசம் (மாற்கு 16:16) மனந்திரும்புதல் (அப்போஸ்தலர் 17:30) கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுதல், (அப்போஸ்தலர் 8:37) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுத்தல் (அப்போஸ்தலர் 2:38)

7. இது அநேக நாமகரண கூட்டங்களில் ஒன்றல்ல, ஏனென்றால் நாமகரணக் கூட்டங்களைப் பற்றி புதிய ஏற்பாட்டில் நாம் படிப்பதில்லை. "ஒரே சரீரம் (சபை) (எபேசியர் 4:4) எபேசியரில், சரீரமும், சபையும் ஒன்றே என்று காண்கிறோம். (எபேசியர் 1:22-23)

மேலே கூறப்பட்ட விஷயங்கள் கிறிஸ்துவின் சபையின் மிகவும் முக்கியமான காரியங்களாகும். சபையைப் பற்றி வேத வசனம் என்ன போதிக்கிறதோ, அதன்படி நாம் ஜீவித்து, பரலோகம் செல்ல காத்திருப்போம். தயவுகூர்ந்து கிறிஸ்துவின் சபையை ஆராய்ந்து பாருங்கள். இயேசு கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையை நீங்கள் விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

# தேவனுக்கு ஊழியம் செய்ய நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்

*சீசல்* **மே. Jr.**

### பயமின்றி நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய விடுதலையாக் கப்பட்டிருக்கிறோம்

"உங்கள் சத்துருக்களின் கைகளின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாக பரிசுத்தத்தோடும், நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன்" என்று (லூக்கா 1:71)

சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணின விடுதலையைக் குறித்து பேசும்பொழுது அவனுடைய குமாரனாகிய யோவான் கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று வாக்குத்தத்தம் சொல்லப்பட்டது. அருவருப்புகளையெல்லாம் செய்யாமல் இருக்க தேவன் நமக்கு விடுதலையைத் தந்தார். (எரே 7:10) எந்த பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டோமோ அதே பாவங்களைத் தொடர்ந்து செய்வதற்காக அல்ல, ஆனால் அவருக்கு ஊழியம் செய்ய.

"பயமின்றி நாம் தேவனுக்கு ஊழியம் செய்ய விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். நம் தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே", நாம் அவருக்கு பயத்தோடும், பக்தியோடும் ஊழியம் செய்ய வேண்டும். (எபி 12:27-28) ஆனால்

அவரைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை. கிறிஸ்து மூலமாக நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி 4:16) நாம் அவருடைய அன்பிற்கு பாத்திரர்களாக இல்லாமலிருந்தும் அவர் நம்மில் அன்பு கூர்ந்து நமக்கு அவருடைய குமாரனைத் தந்தார். இப்பொழுது நாம் அவருடைய குமாரன் மூலமாக அவருடைய பிள்ளைகளாகுகிறோம். அப்படியானால் எந்த நன்மையை அவர் நமக்கு வழங்காதிருப்பார். (ரோமர் 5:8-11) நாம் கிறிஸ்துவினால் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் என்று அறிந்திருக்கிறபடியால் பயமின்றி அவருக்கு ஊழியம் செய்வோம்.

**நாம் தேவனுக்கு பரிசுத்தத்தோடு ஊழியம் செய்ய விடுதலையாக்கபட்டிருக்கிறோம்**

தேவன் பரிசுத்தர் ஆகவே நாமும் பரிசுத்தத்தோடு அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். (1 பேதுரு 1:15-16) பரிசுத்தத்தில் இரண்டு அம்சங்கள் உண்டு. 1. தேவனுக்காக பிரித்து எடுக்கப்படுதல் 2. பாவத்திலிருந்து பிரிக்கப்படுதல்.

தேவனுக்கென்று பலியாக தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டி பரிசுத்தமாக்கப்படுகிறது. அது குற்றம் குறையில்லாத அல்லது அங்கவீனம் இல்லாத ஒன்றாக இருக்க வேண்டும். "ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவனென்பதும் அதற்கு முத்திரையாயிருக்கிறது" (II தீமோ 2:19)

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்திற்கு விலகியிருந்து" ( I தெச 4:3)

"அது இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே பழக்கும் தேவ நீதியே" (ரோமர் 3:22) அது பாவமன்னிப்பைக் குறிக்கும். நாம் நீதியுள்ள தேவனுக்கு முன்பாக அவர் பார்வையில் நீதியுள்ளவராக நின்றார். நாம் பாவம் செய்யாததின் நிமித்தமாக அல்ல ஆனால் நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டதினால். இன்னொரு முறையில் நீதியென்பது சரியானதைச் செய்தல் என்று வேதம் வலியுறுத்துகிறது. தேவனுடைய ஊழியக்காரன் பாவத்திலே தொடர்ந்து நிலை நிற்கமாட்டான்.

"அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்" (1 யோவா 2:29)

"பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிரு ங்கள். நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவரா யிரக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவன ாயிருக்கிறான்". (1 யோவா 3:7) தேவனுடைய ஊழியக்காரர்கள் தங்களுக்கு என்று சொந்த வழியை தேர்ந்தெடுக்கக் கூடாது. தேவன் தாமே நீதியான வழியைக் காட்டுகிறார். "உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்" (சங் 119:172)

**உயிரோடிருக்கும் நாளெல்லாம் தேவனுக்கென்று ஊழியம் செய்ய விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்**

நாம் நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டுதலையும் முடிவு பரியந்தம் வரை பற்றிக்கொண்டு விடா முயற்சியுடன் ஊழியம் செய்ய வேண்டும். (எபி 3:6)

"உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்". (மத்24:42) முடிவு பரியந்தம் நிலைநின்று நாம் இரட்சிக்கப்படுவோமாக (மத் 24:13)



# யார் கவனித்துக் கொண்டிருக்கிறார்?

பிரான்சிஸ் பெர்

சில வருடங்களுக்கு முன்பு எங்கள் குடும்பம் ஒரு கிராமத்திற்கு அருகில் ஒரு வீட்டைக் கட்டினோம். அநேக வேலை ஆட்கள் தங்கள் வேலைகளை சுறுசுறுப்பாக செய்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு அருகில் அதாவது ¼ மைல் தூரத்தில் இருந்த ஒரு அயலகத்தார் வேலை செய்யும் இடத்திற்கு வந்தார். இங்கே என்ன நடக்கிறது என்று பார்க்க வந்தேன் என்றார். பிறகு என்னுடைய தொலைநோக்கு கருவியின் மூலம் சரியாக பார்க்க முடியவில்லை என்று சிரித்துக் கொண்டே கூறினார். நீ யாராயிருந்தாலும் என்ன செய்துகொண்டிருந்தாலும் பரவாயில்லை யாரோ ஒருவர் உன்னை கவனித்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் தேவனுக்காக நல்ல ஜீவியம் ஜீவிக்க நாம் எந்த விதமான செல்வாக்கை அவர்களிடம் காட்ட வேண்டுமென்ற அறிவுரைகளை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்.

முதல் சம்பவம், ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் இருக்கும் பொழுது, சாத்தான் அவர்களை சோதிக்கும் படியான தருணத்தை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டும், கவனித்துக் கொண்டும் இருந்தான். அந்த நேரத்திலிருந்து சாத்தான் விழித்திலிருந்து தேவனுடைய பிள்ளைகள் விசேஷமாக அவருடைய கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடக்க முயற்சியெடுக்கும் பிள்ளைகள் மீது நோக்கமாயிருப்பதை நிறுத்தவில்லை.

சாத்தான் அப்போஸ்தலர்கள் மீது கவனமாக இருந்தான். இயேசு கிறிஸ்து பேதுருவை எச்சரித்தார். லூக்கா 22:31-ல் அதாவது

கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போல சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான் என்றார். யூதாஸ் 30 வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுப்பான் என்று சாத்தானுக்கு நன்றாக தெரியும். இன்றைக்கு கிறிஸ்துவை பின்பற்றுகிற மக்களிடம் சாத்தான் தன் கவனத்தைச் செலுத்தாமல் இருக்க ஏதேனும் காரணம் உண்டா?

தேவனுடைய பிள்ளைகள் நானாவிதமான முடிவுகளை எப்படி அறிந்தார்கள் என்பதைப் பற்றி வேதாகமம் முழுவதும் உதாரணங்கள் உள்ளன என்பதை கவனித்துப் பார்க்க வேண்டும்.

எஸ்தர் சரித்திரத்தில் ஆமான், மொர்தகாயை கவனித்துப் பார்த்து அவனை விரோதித்தான். ஏனென்றால் அவன் ஒரு யூதனாய் இருந்தான். மொர்தகாய் ஆமானுக்கு தலைவணங்க மறுத்துவிட்டான். ஆகவே அவனை கொலை செய்ய முன்கூட்டியே தீர்மானித்தான். அவனுடைய திட்டங்கள் தோல்வியடைந்ததால், மொர்தகாய்க்குப் பதிலாக ஆமானே மரித்தான். தானியேலும், அவனுடைய சிநேகிதர்களும் ராஜாவுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல், விக்கிரகங்களை வணங்காமல் இருந்ததைப் பார்த்தார்கள். சிங்கக் குகையிலே சிங்கமோ, எரிகின்ற நெருப்போ அவர்களை ஒன்றும் செய்யவில்லை. ஒவ்வொரு சம்பவத்திலும், எபிரேய ஜனங்கள் தேவனிடத்தில் வைத்திருந்த நம்பிக்கையின் மாதிரியை பார்த்த ராஜாக்கள் விசுவாசமுள்ளவர்களாக மாறினார்கள்.

எங்கெல்லாம் இயேசு கிறிஸ்து செல்கின்றாரோ, ஜனங்கள் அவரை கவனித்துக் கொண்டிருந்தார்கள். சில பரிசேயர்கள், அவருடைய ஒவ்வொரு அசைவையும் பின்பற்ற முயற்சி செய்தார்கள். அநேகம் பேர் அவரைப்பற்றி அதிகமாக அறிந்து கொள்ள

விரும்பினார்கள். அவருடைய பிதாவின் செய்திகளை அவர் கொண்டு வந்தார். ஆகவேதான் இயேசு, என்னைக் கண்டவன் பிதாவை கண்டான் என்று கூறினார். (யோவான் 14:9) இயேசு எல்லாரிடமும் சாந்தம், தயை, அன்பு, ஆழமான அக்கரை கொண்டிருந்தார். அவரை பின்பற்றுகிறவர்களுக்கு, இவ்வுலகத்தில் மேலான ஜீவியத்தையும். பரலோகத்தில் நித்திய ஜீவனையும் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்துள்ளார். இயேசு கிறிஸ்து மரித்து, நித்தியத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நித்தியமாக வாழ்கிறார். அவருடைய அப்போஸ்தலர்கள், மனுகுலத்திற்கு அவர் செய்த அற்புதமான காரியங்களைக் குறித்து தொடர்ந்து போதித்து வந்தார்கள். அப்போஸ்தலருடைய செல்வாக்குள்ள மாதிரியான ஜீவியத்தினாலேயும், போதனைகளினாலேயும் அநேகரை இரட்சிப்புக்குள்ளாக கொண்டு வந்தார்கள். கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஜாக்கிரதையாக விழித்திருக்கும்படி இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கிறார். அவருடைய மலைப்பிரசங்கத்தில், மத்தேயு 5ம் அதிகாரத்தில் "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றார். கிறிஸ்தவர்களுடைய வெளிச்சத்தின் நோக்கம் பார்ப்பதற்கு மட்டுமல்ல, நம்மை பரீட்சை பார்ப்பதற்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது. "உங்களுடைய வெளிச்சம் மனுஷர் முன்பாக பிரகாசிக்கப்பட்டு, உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அதினிமித்தம் பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தக்கடவர்கள்" என்றார்.

அவிசுவாசமுள்ள கணவனையுடைய ஒரு மனைவிக்கு பேதுரு அறிவுரை கூறும்பொழுது (1 பேதுரு 3:1)ல் "பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்" என்றார்.

***இன்றைக்கு அநேக முன்மாதிரிகளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்***

கடந்த அநேக வருடங்களாக பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டித்து வளர்ப்பதற்கு பதிலாக விசுவாசத்தோடு சிநேகிதர்களாக (அன்புள்ளவர்களாய்) நடந்து கொண்டு போதித்து வந்துள்ளனர். "சிறந்த கூட்டாளி" என்ற பெற்றோர்களின் வழி இப்பொழுது கேள்விக்குறியாக உள்ளன. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக நல்ல மாதிரியைக் காட்ட வேண்டும் என்று உணர வேண்டும்.

பவுல், தீமோத்தேயுவின் தாயார் மற்றும் பாட்டி ஆகியோரின் மாதிரியை புகழ்ந்து கூறினார். அவர் 2 தீமோத்தேயு 1:5ல் "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறது என்று நிச்சயத்திருக்கிறேன்" என்று கூறினார். பிள்ளைகளை வளர்க்கக் கூடிய காரியத்தில் பெற்றோர்கள் தவறுகள் செய்யக் கூடியவர்களாகயிருந்தாலும், இன்னமும் பிள்ளைகளின் மீது வல்லமையான செல்வாக்குடையவர்களாக இருக்கிறார்கள். தாவீது ராஜாவுடைய பாவங்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளதை பார்க்கிறோம். இருந்த போதிலும், அவன் எப்பொழுதும் உண்மையான தேவனை பின்பற்றி வந்தான் என்பதை நினைவு கூற முடிகிறது. அவனுடைய குமாரன் சாலமோனும் அவனுடைய சந்ததி யோசபாத்தும் அவனுடைய மாதிரியை பின்பற்றி நடந்தார்கள் என்று பாராட்டப்பட்டார்கள். (1 ராஜாக்கள் 9:4, 2 நாளாகமம் 17:3) ஆகிய வசனங்களில் இந்த உண்மையை காணலாம். இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு பூரணமான மாதிரியாகயிருந்தபோதிலும், நாம் மற்றவர்களால் இழுக்கப்படுகிறோம். அதே மாதிரியில், நாமே நமக்கு மாதிரியாக இருக்கிறோம். இந்த மாதிரிகள் உற்சாகப்படுத்துவதாகவோ அல்லது தைரியப்படுத்துவதாகவோ அல்லது அதைரியப்படுத்துவதாகவோ இருந்தாலும், ஆத்தும ஆதாயத்தை செய்ய ஜாக்கிரதையுள்ளவர்களாக ஆக்குகிறது. சமீபத்தில் நான் என் சிநேகிதிக்கு ஒரு

கடிதம் எழுதும்பொழுது, அவள் எவ்வளவாக கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து கர்த்தருக்காக கடுமையாக உழைத்தாள் என்பதை அறிந்து நான் எவ்வளவாக உற்சாகப்படுத்தப்பட்டேன் என்று கூறி எழுதியிருந்தேன். அவள் அந்த கடிதத்தை படித்து நான் பார்க்காமலேயே நான் எப்படி உற்சாகப்படுத்தினேன் என்று ஆச்சரியப்பட்டு பதில் கடிதம் எழுதினாள். எல்லா நேரங்களிலும் அவள் என்னை கவனித்துக் கொண்டேயிருந்தாள்!

"புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்கு குறைவில்லாதிருக்கும்படிக்கு, நாங்கள் உங்களுக்கு கட்டளையிட்டபடியே அமைதல் உள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும். உங்கள் சொந்த கைகளினாலே, வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்" (1 தெசலோனிக்கேயர் 4:11,12)



# ஆத்தும ஆதாய ஊழியம் சுவிசேஷமா? அல்லது தந்திரமா?

**கிளாரன்ஸ் டிபாக். Jr.**

புதிய ஏற்பாட்டிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கும் சபை சுவிசேஷப்பணியில் அக்கரை செலுத்தியதை சாதாரண வாசகர் புரிந்து கொள்ளலாம். ஆதிகிறஸ்தவர்களுடைய ஜீவியமும், பணியும், பட்டணங்களையும். நாடுகளையும், உலகத்தையும் மாற்றியிருக்கிறது. சபை ஸ்தாபிக்கப்பட்ட சொற்ப காலத்தில் அவர்கள் எருசலேமை அவர்கள் போதகத்தால் நிரப்பினார்கள் என்று லூக்கா எழுதுகிறார். சில ஆண்டுகளுக்குப் பிறகு "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்ற பெயரை வாங்கினார்கள்.(அப்போஸ்தலர் 17:6) அவர்களுடைய ஆத்தும ஆதாயப்பணி செய்யும் ஆர்வம் அவர்களுடைய கூட்டு முயற்சியில் அவ்வளவாயிராமல் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட செயலில் இருந்தது. இந்தப் பாடத்தில் நம்முடைய நோக்கம் சுவிசேஷப்பணியை செய்யும் திட்டத்தை விவரிப்பது அல்ல. மாறாக அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் ஆத்தும ஆதாயப்பணி சிறக்க அவர்கள் பின்பற்றிய கொள்கைகளை வெளிப்படுத்துதல்தான்.

## 1. சுவிசேஷ (ஆத்தும ஆதாய) பணி கொள்கைகள்

முதலாவது, அவர்கள் ஆத்தும ஆதாயப் பணியை தங்கள் தேர்வுக்கு விட்டுவிட்ட காரியமாகப் பார்க்காமல் தாங்கள் இவ்வுலகில் இருக்கும் நோக்கமாகக் கருதினர். அது அவர்களுடைய வெறும் கடமையாயிராமல் அன்னியோன்யமாக இருந்தது. அதற்காக அவர்கள் தங்களை ஒப்புக்கொடுத்தனர். துன்பம் வந்தபோதும் கூட,


சிதறப்பட்டுப்போன போதும் கூட எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப் 8:4) அவர்கள் பயமுறுத்தப்பட்டபோது அவர்களுடைய ஜெபம், "உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடு சொல்லும்படி அநுகிரகஞ் செய்தருளும்" என்றனர். (அப் 4:29-31) சபையாகிய சரீரம் ஒன்று, அவர்கள் தன் தன் அளவிற்கு தக்கதாக கிரியை செய்ய ஒப்புக்கொடுத்தனர். (எபே 4:16) அவர்கள் எதைக் கண்டார்களோ, எப்படிப்பட்டவர்களாக இருந்தார்களோ என்பதைக் காணாமல் சுவிசேஷப் பணியை புதுப்பிப்பது நம்மால் கூடாத காரியம்.

இரண்டாவது, ஒரு தெளிவான செய்திக்காகவும், செய்தியின் நிமித்தமாகவும் சபை வாழ்ந்தது. அது ஒரு இணையற்ற செய்தி. ஆதாவது "தேவன் அவரை ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார்". (அப் 2:36) அவர்கள் அந்த உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள். (அப் 2:42) இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள். (அப் 5:42) கிறிஸ்துவை பிரசங்கிப்பது என்றால் அவருடைய ராஜ்யத்தையும், நாமத்தையும், கட்டளைகளையும் பிரசங்கிப்பது என்பதை பிலிப்பு அறிந்திருந்தான். அதன் பிறகு பிலிப்பு "சுவிசேஷகன்" என்று அழைக்கப்பட்டான். (அப் 21:8) அவர் ஒரு பயனுள்ள சுவிசேஷ பணியை செய்வதற்கான திறவுகோலை தெளிவாகக் காண்பிக்கிறார் (அப் 8:26-39) வாயைத் திறந்து (பிலிப்பினுடைய) புத்தகத்தை திறந்து (வேதாகமம்) மற்றும் இருதயத்தை திறந்து (எத்தியோப்பிய மந்திரியுடைய) மூன்றாவது விசுவாசத்தை பகிர்ந்து கொள்வதில் சந்தோஷ ஆவியும், உற்சாகமும் இருந்தது.

# அவன் முதலாவது தன் சகோதரனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தான்

ஹார்வி போர்ட்டர்

யோவான் எழுதிய சுவிசேஷ புத்தகத்தில், இயேசு நடந்து போகிறதை யோவான் ஸ்நானகன் கண்டு சீஷர்களைப் பார்த்து, "இதோ, தேவ ஆட்டுக்குட்டி" என்றான். உடனே அவ்விரண்டு சீஷரும் கேட்டு இயேசுவிற்குப் பின் சென்றார்கள். உண்மையிலேயே அந்த நாளை அவரோடு கழித்தார்கள்" பிறகு யோவான் எழுதுகிறான், யோவான் சொன்னதைக் கேட்டு அவருக்கு பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன், பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். "மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம்" (யோவான் 1:35-41)



நீ போய் உன் சகோதரனை என்னிடத்தில் கொண்டு வா என்று இயேசு கூறவில்லை. தொடக்கம் அந்திரேயாவினுடையது. மேசியாவைக் கண்டேன் என்ற நம்பிக்கையோடிருந்தான். தன் சகோதரனாகிய சீமோன் பேதுருவை நேசித்தான். இயேசுவோடு கூட இருக்க விரும்பினான். மனுமக்களுக்காக இயேசு என்ன செய்யக்கூடும் என்பதை

உணர்ந்திருந்த காரணத்தால் ஆத்துமாக்களை அவரிடத்தில் கொண்டுவர தயாரானான். உலகம் முழுவதுக்கும் இயேசு ஒருவரே இரட்சகர் என்பதை விசுவாசிக்கக் கூடியவர்களாக நாம் இருப்போமேயானால், அவரில்லாமல் ஒவ்வொரு ஆத்துமாவும் கெட்டுப்போன நிலையில் இருப்பதை அறிந்தோமானால் ஆத்துமாக்களை அவரிடத்தில் கொண்டு வருவோம். உண்மையிலே இன்னொரு பகுதியை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, அந்திரேயா தன் சகோதரனை நேசித்தான், ஆகவேதான் இரட்சகரை கண்டமாத்திரத்தில் உடனே தன் சொந்த சகோதரனை நினைவு கூர்ந்தான். அன்பு எல்லா எல்லைகளையும் தாண்டும். அது கூச்சமுள்ளதோ, நாணமுள்ளதோ அல்ல. முடியாததைக்கூட செய்யவல்லது. மற்றவர்களிடம் அவர்கள் ஆத்தும இரட்சிப்பைக் குறித்து தைரியமாய்ப் பேச வேண்டும். இரட்சகரில்லாமல் எல்லாரும் கெட்டுப் போன நிலையில் இருக்கிறோம் என்ற உணர்வு சாதாரண சந்தர்ப்பங்களில் செயல்பட அஞ்சும் காரியங்களைக் கூட செய்யத் தூண்டும்.

அந்திரேயா இயேசுவைப் பார்த்து நீங்கள் போய் என் சகோதரனிடம் பேசும் என்று சொல்லாமல் இருந்தது சிந்திக்க வேண்டிய காரியம். பேதுரு அவரை நன்றாக அறிந்திருக்கக் கூடும். தான் சொல்வதை அவர்கள் நம்பக்கூடும் என்று அந்திரேயா நினைத்தாரா என்று ஆச்சரியப்படுகின்றனர். ஒரு முற்றிலும் புதிய அந்நியருக்கு அந்த அந்நியர் இயேசுவாயிருந்தாலும் பேதுரு ஒரு வேளை கேட்கக்கூடும் என்று அவர் நினைத்தாரா என்று ஆச்சரியப்படுகிறேன். பேதுரு இயேசுவினிடம் வரமறுப்பதற்கு எந்த வாய்ப்பும் கொடுக்கவில்லை. தானே அந்த வேலையைச் செய்தான். அன்பு இப்படித்தான் இயங்கும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகம் பேர் இன்று யாரையும் கொண்டு வருவதில்லை. இந்த வேலைக்கெல்லாம் நான் தகுதியானவன் அல்ல என்று சொல்லி தம்மையே சமாதானப்படுத்திக் கொள்கின்றனர். நம்மை தள்ளிவிடுவார்களோ அல்லது நாம் இந்த ஒரு நண்பனை புண்படுத்தி விடுவோமோ போன்ற பயம் நமக்குண்டு. எது ஆபத்திலிருக்கிறது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இயேசு உலக இரட்சகர், அவரில்லாமல் ஒருவன் கெட்டுப் போன நிலையில் இருக்கிறான் என்பது உண்மையானால் இயேசுவினிடத்தில் கொண்டு வராதவர்கள் அனைவரும் நித்தியமாகக் கெட்டுப்போவார்கள்.

இப்பொழுது சொல்லுங்கள் மனிதனுக்கு நாம் செய்யத்தக்க உன்னதமான காரியத்தைச் செய்து அதுநிமித்தம் ஒரு நண்பனை இழந்து போனால் என்ன? நித்திய கண்ணோட்டத்தில் ஒரு நண்பனை இழந்து போவது பரவாயில்லை. கர்த்தருடைய கட்டளை, "நீங்கள் போய் சகல நாட்டினரையும் சீஷராக்கி . . . . " எனக்கு தெரிந்து சிறப்பாக ஆத்தும ஆதாயப்பணியை செய்தவர்களில் சிலருக்கு அதிகப்படிப்பு ஒன்றும் கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளில் வேதாகம வகுப்பை எடுக்க முடியாது, நல்ல இணக்கத்தோடு பேசவும் தெரியாது, யாரேனும் வேதாகம கேள்வியைக் கேட்டால் அதற்கு பதில் சொல்லவும் தெரியாது.

ஆனால் இயேசுவையும், கெட்டுப்போன நிலையிலுள்ள அவர்களுடைய நண்பர்களையும் நேசித்தார்கள். தங்களால் ஆனமட்டும் முயற்சியெடுத்து ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்தார்கள். ஒரு சில மணி நேரமாத்திரம் இயேசுவோடிருந்த அந்திரேயாவுக்கு எவ்வளவு தெரியும்? அவனோ யோவானுடைய சீஷனாயிருந்தவன். இப்பொழுது திடீரென்று அதே நாளில் மாறி ஒரு முற்றிலும் தெரியாதவரை பின்பற்ற முன்

வந்திருக்கிறான். அந்திரேயாவினால் பதில் சொல்ல முடியாத அளவிற்கு அநேக கடினமான கேள்விகளை பேதுரு கேட்டிருப்பார். ஆனால் ஒன்று மட்டும் நமக்குத் தெரியும் அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு உடனே போய் இயேசுவினிடத்தில் அவனைக் கூட்டி கொண்டு வந்தான். அவன் பேதுருவை எவ்வளவு நேசித்தான் என்பது நமக்குத் தெரியும். ஒரு சில மணி நேரம்தான் இயேசுவினிடத்தில் இருந்தான். நம்மில் அநேகம் பேர் சபையில் நம்முடைய வாழ்க்கை முழுவதும் இருந்தும் ஒரு ஆத்துமாவையும் இயேசுவினிடத்தில் கொண்டுவர முயற்சிக்காமல் இருந்திருப்போம்.

ஆதித்திருச்சபை ஆத்தும ஆதாயத்தைக் குறித்து நன்கு அறிந்திருந்தார்கள். எருசலேம் முழுவதும் இயேசுவையும் அவருடைய சபையைப் பற்றியும் அறிந்திருந்தார்கள். அவர்கள் அதிகாரிகளினால் துன்பப்படுத்தப்பட்டும் ஆத்தும ஆதாயப்பணியை தொடர்ந்து செய்து வந்தார்கள். லூக்கா எழுதுகிறார், "அவர்கள் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்" (அப்போஸ்தலர் 5:42) என்னே இரட்சகர்! என்னே சுவிசேஷம்! என்னே சவால்!

> ஒரு முறை ஒருவர் இப்படிச் சொல்வதைக் கேட்டேன், ஒரு பெற்றோர் வெற்றியடைந்தார்களா? அல்லது தோல்வியடைந்தார்களா? என்று அவர்களுடைய பேரக் குழந்தைகளுக்கு என்ன சம்பவித்தது என்று தெரியும்வரை கூற இயலாது.

# தரிசனங்களைப் பார்த்தலும் கனவுகளைக் காணுதலும்

## டேவிட் செட்வெல்

அப்போஸ்தலர் நடபடிகள்2-ம் அதிகாரத்தில் குறிப்பிட்ட சம்பவங்கள் பிரமிக்கத்தக்கவை. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை புதுப்பிக்க முனைவோர் அப்போஸ்தலர் நடபடிகள் 2-ம் அதிகாரத்தின் முக்கியத்துவத்தை நன்றாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்த சம்பவங்கள் கிறிஸ்தவ யுகத்தின் ஆரம்பத்திற்கு உண்மையான அறிகுறி அந்த மக்கள்தான். இயேசு கிறிஸ்துவுக்குள் பாவமன்னிப்பை முதன்முதலாக பெற்றவர்கள். முதல் கிறிஸ்துவின் சபை ஆரம்பமே அவர்கள்தான். கிறிஸ்தவ ஆராதனைக்கும், கிறிஸ்தவ அன்னியோன்னியத்திற்கும் ஆரம்பமே அவர்கள்தான். அப்போஸ்தலர் நடபடிகள் 2-ம் அதிகாரத்தில் கிறிஸ்தவ யுகத்தின் புதிய நாள் உதயமானது. அந்த நாளில் முதலில் குணப்பட்டவர்கள் ஒரு புதிய ஆவிக்குரிய யுகத்தை ஆரம்பிக்கிறார்கள் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள். இயேசுதான் மேசியா என்றும் தேவனால் அனுப்பப்பட்ட கிறிஸ்து என்றும் அவர்கள் அறிந்துகொண் டிருந்தார்கள். தேவனுடைய சொந்த குமாரனையே சிலுவையில் அறைந்து விட்டார்கள் என்பதையும் அறிந்திருந்தார்கள். நேரடியாக அவர்களுக்குப் பாவமன்னிப்பு தேவை என்பதையும் அறிந்திருந்தார்கள். இருப்பினும் அவர்களுடைய குணப்படுதல் ஒரு புதிய ஆவிக்குரிய இயக்கத்திற்கு ஆரம்பம் என்பதை அறியாதிருந்தார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் 10-ம் அதிகாரம் வரை யாரும் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க முன்வராததால் அவர்கள் தான் ஒரு புதிய உலகளவிலான இயக்கத்திற்கு ஆரம்பம் என்பதை

அறியாதிருந்தார்கள். அவர்கள் -தங்களை பக்தியுள்ள ஆவிக்குரிய மனமுள்ள யூதமார்க்கத்தை சீர்திருத்துவசூரார்கள் என்பதற்கான பலமான சாட்சியங்கள் இருக்கிறது. யூதமார்க்கத்திற்கு அவர்கள் ஒரு புதிய ஜீவனை கொண்டுவந்தார்கள், மனுக்குலத்திற்கு இரட்சிப்பை கொண்டுவரவில்லை. அந்த நாளின் முக்கியத்துவத்தை விளக்க பேதுரு யோவேலின் தீர்க்கதரிசனத்தை உபயோகித்தார். வாலிபர் தரிசனங்களையும், மூப்பர் சொப்பணங்களையும் காண்பதற்கு அதுவே காலமாயிருந்தது.

தேவனுடைய பிள்ளையாகிய நமக்கு முன்பாக மிகப்பெரிய நல்ல வாய்ப்புகள் இருக்கிறது. அநேக மக்கள் இன்றுள்ள தேவனற்ற, ஒழுக்கமற்ற சண்டையும், பூசலும் நிறைந்த சபைகளை கண்டு வெறுப்படைந்துள்ளனர். ஆனால் வேறு எங்கே செல்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் நாம் போதிக்கப்படவில்லை. பெரும்பான்மையான மக்கள் ஒரு வேத வகுப்பில் மாணவராக இருந்ததில்லை. அவர்கள் வேதத்தை படித்ததும் கிடையாது. எத்தனையோ சபைகளில் இன்று வேதவகுப்புகள் கிடையாது. வேதவாசிப்பை உற்சாகப்படுத்துவதும் கிடையாது. நம்முடைய உலகம் இங்குள்ளதைப் போல எக்காலத்திலும் வேத அறிவு இல்லாமல் இருந்ததில்லை.

சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவைப்பற்றி நற்செய்தி வல்லமையுள்ளது. இப்படிப்பட்ட மக்களுக்கு பொருத்தமான செய்தி, இந்த நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பதே நம்முடைய கிறிஸ்து கொடுத்த ஊழியம். மாறுகின்ற இந்த உலகத்தில் புதிய ஏற்பாட்டுச் செய்தி மாற்றப்பட கூடாதது. ஆனால் நம்முடைய போதனை முறைகள் மாற்றப்பட வேண்டியவைகள். மீண்டும் சொல்லுகிறேன் தரிசனமுள்ள வாலிபரும், சொப்பனங்களையுடைய மூப்பரும் நமக்கு மிக அதிகமாக தேவை.

# ஸ்டெபி (நாய்) செத்துவிட்டது

டி. பியர்ஸ் பிரவுன்

ஸ்டெபி என்பது எங்களுடைய சிறிய நாய். 16 வருடங்கள் அவள் எங்களுடைய குடும்பத்தில் ஒன்றாக இருந்தாள். எங்கள் வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஓக்கு மரத்திற்கு பக்கத்தில் அவளை புதைக்க குழி தோண்டிய போது நான் அழ ஆரம்பித்தேன். உண்மையிலேயே அது என்னை உலுக்கிவிட்டது. இப்படிப்பட்ட உணர்ச்சிவயப்பட்ட நேரங்களில் என்னை கட்டுப்படுத்தும் திறமையைக்கண்டு நான் பெருமிதமடைந்தேன். ஒரு முதிர்ச்சியடைந்த புத்திக்கூர்மையடைந்த ஒரு மனிதன் ஒரு நாயை இழந்ததற்காக அழுவதை உங்களால் கற்பனை செய்யக்கூடுமா? ஏன் மக்கள் அழுகிறார்கள் என்பதற்கான எல்லா காரணங்களும் எனக்கு நிச்சயமாக தெரியாது. ஆனாலும் இந்த எண்ணங்கள் எனக்கு வந்தன. அவை உங்களுக்கு உதவியாக இருக்கலாம்.

முதலாவது, தேவனுடைய விலையேறப் பெற்ற ஒரு சிறிய சிருஷ்டிப்பு, மரிக்கும்முன் கஷ்டப்பட்டதைக் கண்டு அவளுக்காக நான் மிகவும் வியாகுலமடைந்தேன். ஆனால் இலட்சக்கணக்கான தேவனுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் நித்தியமாக கஷ்டப்படப் போவதை எண்ணி எவ்வளவு பெரிய மனவேதனையை நான் அடையக்கூடும். யாரேனும் ஒருவர் அப்படிப்பட்டவர்களை அந்த உன்னதமான மருத்துவரிடத்தில் குணப்படக் கொண்டு செல்லாவிட்டால் அவர்கள் கதி என்ன? உலகத்தில் கெட்டுப்போன மக்களுக்காக எவ்வளவு கண்ணீரைவிட்டேன்?

இரண்டாவது, என்னை நேசித்து என்னை நம்பி வாழ்ந்த ஒன்றை இழந்தது ஒரு தனிப்பட்ட இழப்பாக எண்ணினேன். ஆகவே

அது ஒரு சுயநலமுள்ள வருத்தம். ஏனெனில் இனிமேலும் இந்த சிறிய நண்பனை நான் மகிழ்ச்சியோடு வரவேற்க முடியாது. சற்றுமுன்தான் என்னோடு நடக்கும்போதோ அல்லது இளைப்பாறும் போதோ சந்தோஷத்தை அதனுடன் அனுபவித்தேன். ஆனால் எனக்குள் ஒரு ஆச்சரியம். எனக்குத் தெரிந்தவர்களில் எத்தனை பேர் என்னோடு இருந்து அந்த மகிழ்ச்சியை அனுபவித்திருக்க முடியும்? ஒருவருடைய ஜீவியத்தில் என்னுடைய அன்பினாலும், அரவணைப்பினாலும் எத்தனை பேருடைய ஜீவியத்தில் எவ்வளவு மாற்றங்களை கொண்டு வந்திருக்கிறேன். எத்தனை ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ஒரு ஆத்துமாவை இரட்சிப்பதைக்காட்டிலும் கேவலம் அவர்களுடைய நாய்களுக்காக தங்களுடைய பணத்தை, நேரத்தை, சக்தியை செலவிடுகின்றனர் என்று எண்ணி, என்னால் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியவில்லை. எத்தனை பேர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக செலவிடுவதைக் காட்டிலும் அதிகமாக ஒரு வருடத்தில் நாய் உணவுக்காகச் செலவிடுகின்றனர். ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் அழிந்து போவதை குறித்து கவலைப்படாதவர்கள் தங்கள் நாய் செத்துப் போவதைக் குறித்து எத்தனை பேர் அதிகமாக இருதயம் உடைந்து போகின்றனர்?

ஞானியுடன் நடந்து செல். நீ அறிந்து கொள்வாய்.

அழகையும், உ ண்மையையும் தேடு!


உன் இருதயத்தின் ஆழத்தில் நீ உணர்வாய்! உன்னிடத்தில்

இருந்து எழும்பும் சிறந்தவை அவை!

*சார்லஸ் R. புருயர்*

# ஆறுதல்படுத்துவதே ஆறுதல்


டாம் ஹாலண்ட்



வார்த்தைகள் புண்படுத்தவும், குணப்படுத்தவும் வல்லமையுள்ளது. வேதாகமத்தில் சொல்லப்பட்ட குணப்படுத்தும் வார்த்தைகளில் ஒன்று தேறுதல் அல்லது ஆறுதல். புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மொழிபெயர்க்கப்பட்ட ஆறுதல் என்ற வார்த்தைக்கு நேரடி அர்த்தம் "பக்கமாக அழைத்தல்" என்பதாகும். (2 கொரிந்தியர் 1:3,4; 7:13) ஆறுதலுக்கு இணையான சில வார்த்தைகள் தேற்றுதல், உதவி, மன அமைதி, களைப்பாற்றுதல் முதலியன. அநேக மக்கள் ஜீவியத்தில் சில சமயம் ஆறுதல் தேவைப்படுகிறது. அநேகருடைய ஜீவியத்தில் பாடுகளும், துன்பங்களும் வருகிறது. உண்மையான தோல்வி, அனுபவத்தில் கிடைக்கும் ஓர் ஆசீர்வாதம். புண்படுத்தப்பட்ட நாம் புண்பட்டவர்களை ஆறுதல் செய்வது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிக் கூறுகிறார், "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறதலினாலே எந்த திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல

உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரிந்தியர் 1:3,4) தேவன் தம்முடைய வார்த்தைமூலம் நம்மை தேற்றுகிறார். (1 தெசலோனிக்கேயர் 4:18) நாம் அவருக்கு செவிகொடுத்தால் தேவன் தம்முடைய அன்பை கிடைக்கப்பண்ணுகிறார். (ரோமர் 8:38,39) நம் திராணிக்கு மீறி நாம் சோதிக்கப்பட மாட்டோம் என்ற வாக்குத்தத்தத்தை கொடுத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 10:13) தேவன் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (எபிரேயர் 13:5,6)

தேவன் தம்முடைய பிள்ளைகள் மூலமாகவும் நம்மை தேற்றுகிறார் (2 கொரிந்தியர் 1:4) தேவனுடைய பிள்ளைகளுக்கு உண்மையான அக்கரையும் அன்பான கரிசனையும் உண்டு. அதனால் தான் வாழ்க்கையில் தங்களை மீறிய சக்தியால் பாதிக்கப்பட்டவர்களிடம் இந்த அக்கரையைக் காட்டுகின்றனர். அவர்களுக்கு தேறுதல்களும் உதவியுமளிக்க முன் வருகின்றனர்.



# சபையின் ஊழியம்

லியோன் கோல்

புதிய ஏற்பாட்டில் சபையின் ஊழியம் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை பல வழிகளில் எடுத்துரைக்கிறோம். ஊழியம் மூன்று அம்சங்களை உடையது. மேல்நோக்கி, உள்நோக்கி, வெளிநோக்கி செயல்படும் ஊழியம். அவை இப்படியும் கூறலாம், சபை ஊழியம் தேவனுக்கும், தெய்வ நம்பிக்கையுள்ளவர்களுக்கும், தெய்வ நம்பிக்கையில்லாதவர்களுக்கும். தேவனுக்கு ஏறெடுக்கும் ஊழியம் ஆராதனை எனப்படும். ஆராதனை என்னப்படுவது தேவனுக்கு பயபக்தியோடு ஏறெடுக்கும் கிரியைகள். ஆராதனை செய்பவர்களுக்கு ஏறெடுக்கும் போது விளையாட்டுக்காக செய்யப்படும் சாதாரண கிரியைகள் அல்ல. பயபக்தியோடும், நேர்மையோடும் தேவனால் அங்கீகரிக்கப்படும் அளவில் இருக்க வேண்டியது. நமக்காக ஏறெடுக்கும் காரியங்கள் அல்ல, தேவனுக்கு ஏறெடுக்கும் செயல். புதிய ஏற்பாட்டு ஆராதனை எப்போதும் எளிமையாக இருக்கக்கூடியது. ஆடம்பரமாகவும், சடங்குகளாகவும் இருக்க வேண்டியது இல்லை. சபை உலகில் இருப்பதற்கான முக்கிய காரணமே "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாய் இருப்பதே" (எபேசியர் 1:11)


சபையின் உள்நோக்கிய ஊழியம் பக்தி விருத்தியடையச் செய்வது. அது "பரிசுத்தவான்களை சீர்பொருந்தப்பண்ணுவபது" (எபேசியர் 4:12) நாம் ஆடுகளை பட்டியில் அடைத்துப் பாதுகாக்கிறோம். கிறிஸ்துவுக்குள் குணப்பட்டவர்கள் தங்கள் சொந்தப்பிரச்சனைகளை சந்திக்க அவர்களுக்கு உதவி செய்யும் பொறுப்பில் நாமிருக்கிறோம். அநேகருடைய வாழ்க்கை உடைந்து

கிடைக்கிறது. நம்பிக்கைகள் அற்றுப் போய் நடைபிணமாக திரிகின்றனர். பரிசுத்தவான்களை பக்திவிருத்தியடையச் செய்யும் முயற்சிகளில் அவர்களுக்கு வசனத்தை போதிக்கும் அக்கரையில்லாத நிலையை எங்கும் காண முடிகிறது. நம் கர்த்தர் கடைசியாக கொடுத்த பிரதாண கட்டளையில் உள்ள இரண்டு அம்சங்களை நாம் மறக்கக் கூடாது. அவையாவன "சகல நாட்டினரையும் சீஷராக்கி", "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்".

அடுத்தபடியாக வெளிநோக்கிய ஊழியம் "தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும், இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்". (அப்போஸ்தலர் 5:42) வெறும் ஆராதிப்பதிலும் அல்லது உள்நோக்கிய ஊழியத்தில் மட்டும் நாம் நிறுத்திக் கொண்டால் நாம் தோற்றுப்போனவர்களாவோம். இயேசு சபையை ஸ்தாபித்து உலகத்தில் வாழும் சூழ்நிலையை விட்டுச் சென்றார். ஏனெனில் சபை உலகத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை உணர்த்தவே அப்படிச் செய்தார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதன்மூலம் பொது மக்களை சந்திக்கிறோம். அவ்வாறே தனிப்பட்ட மக்களையும் சந்திக்கிறோம். சுவிசேஷத்தைக் கேட்கும் ஒவ்வொருவரும் அதை அறிவிக்க வேண்டியவராக இருக்கின்றனர். ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இடத்திலும் ஏதோ ஒரு வழியில் சுவிசேஷத்தைச் சொல்ல வகை தேட வேண்டும் இதுதான் சபையின் ஊழியம்.

# காலம் கடந்து போகிறது

டேல் கிறிசோம்



***நாம் வெற்றியுள்ள ஆத்தும ஆதாயம் செய்ய நான்கு காரியங்கள் அவசியம்.***

1. முதலாவது, கிறிஸ்துவுக்காக காணாமற்போன நிலையிலுள்ள ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை வேண்டும். ஆத்துமாக்களை தேடி ஆதாயம் செய்யும் இந்த ஆர்வம் பெறுவதற்கு அந்த வாஞ்சை நமக்குள்ளே உருவாக்கப்பட வேண்டும். நாள் பூராவும் வேலை செய்த பிறகும் கூட கொஞ்ச நேரத்தை ஒதுக்கி சிலருக்கு கிறிஸ்துவைப் பற்றி போதிக்க ஆர்வமிருக்க வேண்டும்.

2. ஆத்தும ஆதாயம் செய்பவர்கள் அன்போடும், பரிவோடும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டும். காணாமற்போன நிலையில் உள்ளவர்களை பயமுறுத்தாமல் தவறை எதிர்க்கும் பாவனையை வைத்துத்தான் வெற்றி தோல்வி அமையும். அன்போடு அணுகுதல் மிக முக்கியம். அப்பொழுது தான் மக்கள் கேட்க முன்வருவார்கள். நாம் எப்படி எதிர்க்கப்பட விரும்புவோமோ, அதே போல மற்றவர்களை நாமும் அன்போடு எதிர்க்க முன்வர வேண்டும். நாம் போதிக்க முயற்சி செய்யும் நபர்கள் ரோஷமுள்ளவர்கள், பரிவுகாட்டப்படவேண்டியவர்கள். ஆகவே அவர்களை அன்போடும் பட்சமாகவும் அணுக வேண்டும்.

3. மக்கள் கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படவும், அறிந்து கொள்ளவும், கிறிஸ்தவனாக இருப்பது என்றால் என்ன? என்று அதிகமாக கற்றுக்கொள்ளவும் விரும்புவார்கள் என்ற நம்பிக்கையோடு விசுவாசத்தோடு அவர்களை அணுக வேண்டும். நாம் யாருக்கு போதிக்கிறோமோ அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கையும் நமக்கு தேவை. அவர்களுடைய கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் கொடுக்கும்வரை போதிக்க வேண்டும். இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் சரியாக புரிந்துகொள்ளும் வரை போதிக்க வேண்டும். இப்படி நடந்தால் அவர்களும் கீழ்படிய முன்வருவார்கள். தேவனும் விளையச் செய்வார்.

4. நமக்கு இருக்கும் எல்லா நேரத்தையும் விசுவாசத்தையும் உபயோகிக்க வேண்டும். இந்த மக்கள் சுவிசேஷத்தைக் கேட்க தருணம் தேவை. சகோதரரே, இன்னமும் தருணம் இருக்கும்வரை, நீங்களும் நானும் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தையை காணாமற்போன (கெட்டுப்போன) நிலையிலுள்ள மக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பு அவருடைய ஊழியக்காரர்களாகிய நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அறுவடை மிகுதி ஆளோ கொஞ்சம். ஒரு ஆத்தும ஆதாயம் செய்பவராக இருக்க நீங்கள் தீர்மானிக்கவில்லையா? காலம் கடந்து போகிறது பகற்காலம் இருக்குமட்டும் நாம் உழைப்போம்.

# அதிகமான பேர் கீழ்படியும் கட்டளை

பாப் பிளங்கட்

அதிகமான பேர் கீழ்ப்படியும் கட்டளை லூக்கா 9:21-ல் உள்ளது. "அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு உறுதியாய்க் கட்டளையிட்டார்". ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு இயேசு கட்டளையிட்ட காரியம் தான் என்ன? அவர் கிறிஸ்து, தேவனுடைய குமாரன் என்று பேதுரு, அந்த பெரிய அறிக்கையை செய்தவுடனே இயேசு ஏன் இப்படிச் சொன்னார்? சில வேத வல்லுநர்கள் இப்படி நினைக்கின்றனர், பேதுருவும், மற்றவர்களும் இயேசுவின் செய்தியை முழுமையாக புரிந்துகொள்ளாததினால் தான் இயேசு அப்படிச் சொன்னார் என்று. இதற்கான சான்று மத்தேயு 16:22ல் உள்ளது. சிலுவையைப் பற்றி பேதுரு தவறாக புரிந்து கொண்டதால் இயேசு அவனைக் கண்டித்தார். எல்லாக் காரியங்களுக்கும் ஒரு கால அட்டவணையை கிறிஸ்து வைத்திருந்தார். ஆகவே இவையெல்லாம் வெளிப்படுத்த சரியான சமயம் வரவில்லை. இன்று சபையில் பயமுறுத்தக்கூடிய மௌனம் இருக்கிறது. அநேகர் சபை கட்டிடத்தை விட்டு வெளியே சென்றதும் இயேசுவைப்பற்றி ஒன்றுமே பேசுவதில்லை. ஆராதனை நேரத்தில் அவர்களுக்கு கிடைத்த அனுபவத்தை அன்றாட வாழ்வில் பிரதிபலிப்பதில்லை, பிறரிடம் இயேசுவின் காரியங்களை பகிர்ந்து கொள்வதில்லை. அவர்கள் தங்கள் அயலகத்தாருடனும், அவர்களுடைய குழந்தைகளுடனும் அல்லது அவர்களோடு பணிபுரியும் மக்களோடும் தேவனைப்பற்றி ஒன்றுமே கூறுவதில்லை.

"ஒருவருக்கும் சொல்லாதே" என்பது அதிகமான பேர் கீழ்ப்படியும் கட்டளை. ஏனெனில் யாரிடமும் எதைப்பற்றியும்

கூறவேண்டியதில்லை, எந்த கேள்விக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை. யாரிடமும் வேதத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. அதைக் குறித்துப் போராட வேண்டியதில்லை. யார் கூற்றையும் மறுக்க வேண்டியதில்லை. அநேகர் இதையெல்லாம் சொல்லி நான் ஏன் நட்பை பாழாக்கிக் கொள்ள வேண்டுமென்று வாளா இருந்து விடுகின்றனர். இந்தக் கட்டளை அப்போஸ்தலர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை கொடுக்கப்பட்ட கட்டளை என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இப்பொழுது நாம் இயேசுவைப் பற்றிச் சொல்ல வேண்டும். உலகம் முழுவதும் அவருடைய சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டும். ஆதித்திருச்சபையின் வளர்ச்சிக்குக் காரணம் பெரிய பிரசங்கிமார்கள் இருந்தார்கள் என்பது மாத்திரமல்ல. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தங்கள் அயலகத்தாருடன் கிறிஸ்துவைப் பகிர்ந்து கொண்டார்கள். அவர்கள் மௌனமாயிருக்கவில்லை. "நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்கக்கூடாதே என்றார்கள்". (அப்போஸ்தலர் 4:20) நாமும் அவ்வாறே கூற வேண்டும்.



# பூரண சற்குணராய் இருத்தல்

ஜான். எம். டேவிஸ்

உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக்கிறது போல
நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.
(மத்தேயு 5:48)

இயேசு ஒரு அதிர்ச்சியான காரியத்தைச் சொன்னார். "உங்கள் பிதா பூரண சற்குணராய் இருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." (மத்தேயு 5:48). இந்த வாக்கியத்தை உற்றுப்பார்க்கையில் ஒரு உயர்ந்த மாதிரியை கொடுப்பதாக உள்ளது. இது நீங்கள் நினைத்துப்பார்த்தால் மீட்கப்பட்ட மக்களுக்காக தேவன் ஒரு உயர்ந்த மாதிரியை எதிர்பார்க்கிறார். அவர் எப்பொழுதும் தம்முடைய பிள்ளைகள் பூரணராக வேண்டுமென்றே விரும்புகிறார். சபையாகிய சரீரம் பக்தி விருத்தி அடைய வேண்டுமென்பது ஆரம்பத்திலிருந்தே அவருடைய திட்டமாக இருந்தது. இந்த திட்டத்தை தேவன் காலம் பூராவும் செயலாற்றி வந்திருக்கிறார்.

### *சபை பக்திவிருத்தி அடைவது என்றால் என்ன?*

கிறிஸ்தவ ஜீவியத்தின் முக்கிய குறிக்கோள் இந்த பக்தி விருத்தியடைவதே. கிறிஸ்தவர்கள் வளரவேண்டும், முதிர்சியடையவேண்டும், மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சியை அடையவேண்டும். கீழ்க்கண்ட வேத வசனங்களை கவனியுங்கள். "கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தியடைவதற்காகவும்." (எபே 4:12). "சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்க தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும்,

ஏற்படுத்தினார்." (எபே 4:13). "இனி குழந்தைகளாயிராமல்" (எபே 4:14). "கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக" (எபே 4:15). கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு தக்க பூரண புருஷராக வேண்டும். (எபே 4:11). கிறிஸ்தவர்கள் பாவமற்ற நிலையை அடைய முடியாது (ரோமர் 3:23). ஒரு கிறிஸ்தவன் பண்புள்ள கிறிஸ்தவனாக இருக்கக்கூடும். எல்லா கிறிஸ்தவர்களும் இதில் அக்கரை காட்டவேண்டும். கிறிஸ்துவுக்குள் குழந்தைகளா யிருப்பவர்கள் வளரவேண்டும் முதிர்ச்சியடைய வேண்டும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுடையவர்களாயிருக்க வேண்டும்.

பூரண என்றால், தனக்கு தானே முழுமையான, நன்றாய் வளர்ந்த, தகுதிக்கேற்ப நிரப்பப்படுதலைக்குறிக்கும். எந்த கிறிஸ்தவனும் முழவதும் தகுதியுடைய, வளர்ந்த நிலைக்கு குறைவாயிருக்க விரும்பக்கூடாது. இங்கு ஒரு சவால், கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் இந்த முழு வளர்ச்சிக்கு கொண்டுவரப்ப டவேண்டும். (2கொரி 7:1). எவ்வாறு இதை செயலாற்ற முடியும்? "அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்க தரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்." (எபே 4:13). அவர்களுடைய ஊழியத்தின் பலனாக, கிறிஸ்துவின் சரீரம், அன்பினாலே கட்டப்படுகிறது. (எபே 4:16).

சரீரத்தின் சிலஅங்கத்தினர், தங்கள் வாழ் நாள் முழுவதும் ஆவிக்குரிய குழந்தைகளாகவே இருப்பது விசனத்திற்குரிய காரியம்.

# கிறிஸ்துவின் சபை

**ஜான் டாப்ஸ்**

கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்
(ரோமர் 16:16)

கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:16). அநேக வருடங்களாக எந்த டினாமினேஷனையும் சேராத கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றி பிரசங்கிமார்கள் அறைகூவல் கொடுத்துவந்திருக்கிறார்கள். இந்த சொற்றொடரின் அர்த்தமென்னவென்றால் வேதாகமத்தில் சொல்லப்பட்ட சபை பல வித்தியாசப்பட்ட கொள்கையினால் பிரிந்திருக்கும் கூட்டத்தினரல்ல. மாறாக சபை ஒரு பொதுவான கிறிஸ்துவின் சரீரமான சபையைச் சேர்ந்த கூட்டமாகும். "கிறிஸ்துவின்" என்றால் ஒரு தலைப்பு அல்ல. அதற்கு சொந்தக்காரர் யார் என்பதை விளக்கும் சொல். என்னுடைய வாகனம் (கார்) யோவானின் கார் என்று கூறுவதைப் போல் இருக்கும்.

சபை இயேசுவிற்குச் சொந்தமானது, மனுஷனுக்கு அல்ல. அதனால் தான் சபையில் நமக்கு பிரியமானவைகளை நாம் செய்வதில்லை. அவருக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும். "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று பவுல் எழுதுகிற போது கிறிஸ்துவுக்குச் சொந்தமான கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயமாக இருக்கும் ஒவ்வொருவரும் வாழ்த்துகிறார்கள் என்று அர்த்தம். வேதாகமத்தில் சபையைக் குறிக்கும் பெயர் வேத வசனத்தின்படியானது. ஆகவே கிறிஸ்துவின் சபையென்று இந்த சொற்றொடரை உபயோகிக்கும் போது தேவனுடைய ஜனத்தையே குறிப்பிடுகிறேன்.

வேதாகமத்தில் அடிப்படையில் நான் பேசுகிறேன். இருப்பினும் கிறிஸ்துவின் சபை பிரசங்கியார் என்று நான் கூறுவதில்லை. எளிமையாக நான் ஒரு கிறிஸ்தவன் என்றும் கர்த்தருடைய சபையில் பிரசங்கியார் என்றும் கூறுவேன். நான் ஒரு கிறிஸ்தவன் என்று மட்டும் கூறுவேனே தவிர கிறிஸ்துவின் சபை கிறிஸ்தவன் என்று கூறுவதில்லை. கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபையில் ஒப்புக்கொடுத்து ஊழியம் செய்கிறேன். இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமான உபதேசங்களுக்கு நான் ஒப்புக்கொடுத்திருக்கிறேன். அவருக்கு என்னுடைய பக்தியே சொந்தமானது. அவருடைய குடும்பத்தில் அங்கமாவதற்கும் அதில் நிலைத்திருப்பதற்கும் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்தவர்கள் எனக்கு கர்த்தருக்குள் சகோதரர்களும், சகோதரிகளுமாய் இருக்கிறார்கள்.

எந்த டினாமினேஷனையும் சாராத கிறிஸ்தவ மார்க்கம் எப்பொழுதும் பலரும் அறிந்த மார்க்கமாக இருக்காது. ஆனால் நம்முடைய விசுவாசம் (பக்தி) மனிதர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதல்ல அல்லது கிறிஸ்துவின் சபையினுடைய விருப்பத்தை பூர்த்தி செய்வதல்ல, பதிலாக இயேசுவுக்குச் சொந்தமான சபைக்கு பிரியமாக நடப்பதாகும். நாம் இவ்வாறாக வேதாகமத்தில் சொல்லிய பிரகாரம் அந்த அருமையான பரிசுத்தவான்களுடைய கூட்டத்தில் இருக்கிறோமா என்பதை உறுதிசெய்ய நாம் வேதாகமத்தை அணுகி சத்தியத்தை நன்றாக கற்றுக் கொள்வோம்.

# கிறிஸ்து உயிர்த்தெழுந்தால், உயிர்த்தெழுந்திராவிட்டால் அதன் விளைவு என்ன?

**கிறிஸ்து உயிர்த்தெழுந்திராவிட்டால்**

**நம் பிரசங்கம் விருதா**
அப் 17:23; 23:6; 4:2

**உங்கள் விசுவாசம் விருதா**
1கொரி. 15:2; கொலோ. 2:12;
1தெச. 4:14

**நாம் பொய்ச்சாட்சிகளாயிருப்போம்**
அப் 1:8,22; 4:33; 13:30,31

**நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்**
அப்13:37,38; 1பேதுரு 3:21; அப்8:1

**நித்திரை அடைந்தவர்கள் கெட்டிருப்பார்கள்.**
2கொரி. 4:14; யோவான் 11:25; 6:39-40

**பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்**
1தெச. 4:14 முதல்; 1 பேதுரு 1:3;
பிரசங்கி 3:19

**1 கொரி 15:11-12**



**அவர் உயிர்த்தெழுந்தார்**

நம் சொந்த உயிர்த்தெழுதல்
ரோமர் 6:16-18, 6:3-6

**கிறிஸ்துவோ உயிர்த்தெழுந்தார்.**

**மரித்தவர்களின் முதற்பலனானார்.**
அப் 26:23; 1கொரி 6:14; 1தெச. 4:14

**நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டார்.**
ரோமர் 4:24,25; 6:5; 1பேதுரு 3:18-21

**அவர் உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கப்பட்டோம்**
ரோமர் 5:8-10; 6:5; 1பேதுரு 3:18-21


**தேவனுடைய சுதன் (குமாரன்) என்று ரூபிக்கப்பட்டார்.**
ரோமர் 1:5; 14:9; அப் 13:32,33

**ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி ஜெநிப்பித்தார்.**
1பேதுரு 1:4; 1:21; கொலோ 2:12

**நம் ஜீவியத்தை மாற்றத்தக்க வல்லமை**
பிலி. 3:10; 2கொரி 5:14,15; கொலோ 3:1-4

டில்லர்டு தூர்மன்

# பசியாயிரு!



லூக்கா 6:21

**தேவன் மேல் ⇦**
**சங். 42:1,2**

**⇨ சத்தியத்தின் மேல் யோவான் 8:32**

பசியாயிருக்கிற

நீங்கள்

பாக்கியவான்கள்

**நீதியின் மேல்⇦**
**மத். 5:6**

**⇨ பரம தேசத்தின் மேல்**
**எபி. 11:8-16**

**பப்பி ஜி.டாக்கரி**

முகவுரை:

I. இயேசு சொன்னார்,"பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்"

1) பசி, பாக்கியமாயிருக்கும் என்றார். இன்றைய மக்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

2) தினமும், பசியோடு வாழ்கிற மக்கள் விஷயத்தில் இது உண்மை.

3) பாக்கியம் (அ) ஆசீர்வாதம் என்பது அநேகருக்கு இன்று உண்ண உணவு இருந்து, நாளையும் வேண்டிய உணவு இருக்கிறது என்ற திருப்தி.

II. ஆனால், நம் பசி, ஒன்று நம்மை உயர்த்தும் அல்லது தாழ்த்தும் என்று இயேசு சொன்னார்.

1) இந்த ஜீவியத்தில் எதைக் குறித்து பசியாயிருக்கிறோமோ அது அடுத்த ஜீவியத்தில் அதினால் நிறைந்திருப்போம் என்பதை நிர்ணயிக்கும்.

2) மனுக்குலத்தின் பிரச்சனையே, தவறான காரியங்களுக்காக பசியாயிருப்பதுதான். ஏவாள் விலக்கப்பட்ட கனியின் மீது பசியாயிருந்தாள். அது அவளுக்கு சாபமானது. ஏசா, ஒரு வேளை பயற்றங்கூழுக்காக பசியாயிருந்தான். அது அவனுடைய பிறப்புரிமையை இழக்கும்படி செய்தது. தாவீது மற்றவன் மனைவி மீது பசியாயிருந்தான். அதனால் அவமானம், வருத்தம், குற்ற உணர்வு என்னும் மேஜையில் புசிக்க வேண்டியதாயிற்று.

## செய்தி:

I. தேவன் மேல் பசியாயிரு.

1. நம்மில் ஒவ்வொருவருக்கும் பசியை தேவன் கொடுத்திருக்கிறார். அதை அவரால் தான் திருப்தி செய்யக்கூடும். (சங்கீதம் 42:1,2; 34:8,9)

2. நம் சிருஷ்டி கர்த்தாவோடு ஐக்கியமாயிருக்க நமக்கு அவசர தேவை இருக்கிறது.

1) அநேகர் குழப்பத்தில் இந்த பிரச்சனையை அனுபவிக்கின்றனர். ஆனால் அது என்ன என்று அவர்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை.

2) ஆகவே ஒன்றன்பின் ஒன்றாக வீணான முயற்சியில் இறங்கி, தேவனுக்கான பசியில் திருப்தி காண நம்பிக்கையோடு இருக்கின்றனர்.

3) அகஸ்டின் தேவனைப் பற்றி எழுதும்போது, "நீர் எங்களை உமக்காக படைத்தீர். உம்மில் நாங்கள் இளைப்பாறுதல் காணும் வரை எங்கள் இருதயம் திருப்தியடையாது" என்றார்.

II. சத்தியத்தின் மேல் பசி:

1. சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் இயேசு. (யோவான் 8:32)

2. இந்நாளைய பெரிய ஆவிக்குரிய பிரச்சனை என்னவெனில், வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தின்மீது பசி இல்லாத நிலை. ஆகையால், வேத வாசிப்புக்கு கொஞ்சம் பிரயாசம் மற்றும் தேவனுடைய வார்த்தை மீது கொஞ்சம் பசி. (1பேதுரு 2:2-3)

3. சத்தியத்தை கற்றுக் கொள்ள கிறிஸ்தவர்கள் தவறாமல் வேத வகுப்புகளுக்கு செல்லாமல் இருப்பது, வீட்டில் வேதத்தை படிக்காமல் இருப்பது எவ்வளவு விசனத்துக்குரிய காரியம். (எபி 10:24,25; 2தீமோ 2:1:5)

III. நீதியின் மேல் பசி

1. "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்" என்றார் இயேசு. (மத்தேயு 5:6)

2. மனிதன் அப்பத்தினாலே மாத்திரம் பிழைக்க மாட்டான். (லூக்கா 4:4) நீதியின் மேல், மேலான, பரிசுத்தமான பசி இருக்க வேண்டும்.

1) நீதி என்றால் சரியான காரியத்தைச் செய்வது ___ சரியான செயல் (1யோவான் 3:7)

2) நீதி என்றால் சரியாக இருப்பது ___ தேவனுடன் சரியான

உறவில் இருத்தல் (எபேசியர் 2:11-16)

3. சரியான (நல்ல) காரியங்களை செய்யவும், நல்லவராக வாழவும் ஏக்கம் இருக்க வேண்டும்.

IV. பரலோகத்தின் மீது பசி:

1. எபிரெயர் 11:8-16-ஐ வாசிக்கவும்.

1) இங்கு, விசுவாச வீரர்களின் (ஆண்,பெண்) பட்டியல்.

இவர்கள் தேவனுடைய நகரத்தின் மீது பசியாயிருந்தவர்கள்.

2) நாம் பாடும் பழைய பாடல் ஒன்றின் கருத்தும் சரியே. "இந்த உலகம் என் வீடல்ல, நான் இதை கடந்து போய்க்கொண்டிருக்கிறேன்"

2. வருத்தப்படத்தக்க காரியம், அநேகர் இப்பூமியே சதம் என்று எண்ணி, இங்கே என்றென்றும் தங்க விருப்பப்படுகின்றனர். அவர்கள் ஜீவியமும் இந்த உலகத்தை சுற்றியே உள்ளது. உலக ஆசாபாசங்களில் மூழ்கி, பரலோக சிந்தையே இல்லாமல் வாழ்கின்றனர்.

1) தேவனுடைய பிள்ளைகள் இங்கு திருப்தியடைய முடியாது.

2) தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலுள்ளது. அதைத் தரித்துக் கொள்ள தினமும் பசியோடு இருக்க வேண்டும். (2கொரி 5:1-4)

முடிவு:

1. நாம் ஆவிக்குரிய பசியோடு இருக்கும்வரை தான் ஆவிக்குரிய வளர்ச்சி இருக்கும்.
2. எதன் மீது பசி, அதுவே முடிவு.
   1) நம் பசியை வைத்து, ஜீவியத்தின் அர்த்தம் கூறலாம்.
   2) எதற்கு பசியாயிருக்கிறோமோ, அது நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை காட்டுகிறது.
   "பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்".

# உயர்ந்த காரியங்கள்

## ஜே. சி. சோட்

| | | |
|---|---|---|
| 1. தேவன் | - | சிருஷ்டி கர்த்தர் (ஆதியாகமம் 1:1) |
| 2. கிறிஸ்து | - | இரட்சகர் (ரோமர் 5:8) |
| 3. சபை | - | சரீரம் (எபே 1:22, 23) |
| 4. சுவிசேஷம் | - | தேவ பெலன் (ரோமர் 1:16) |
| 5. இரத்தம் | - | கழுவக்கூடியது (எபே 1:7) |
| 6. கிறிஸ்தவன் | - | நாமம் (1பேதுரு 4:16) |
| 7. ஆத்துமா | - | மனிதன் (ஆதியாகமம் 2:7) |
| 8. வேதாகமம் | - | வழிகாட்டி (2தீமோ 3:16,17) |
| 9. பாவம் | - | அழிக்கக்கூடியது (ரோமர் 6:23) |
| 10. சாத்தான் | - | விரோதி (1பேதுரு 5:8) |
| 11. மரணம் | - | சத்துரு (1கொரி 15:26) |
| 12. பரலோகம் | - | நித்தியவீடு (யோவான் 14:1-3) |

# தரித்திரத்தில் பிறந்தேன்

பெட்டி பர்டன் சோட்

ஒரு குழந்தை தரித்திரத்தில் பிறக்கும் போது, கல்வி அறிவு இல்லாத நிலையில் பட்டினியில் அவைகளிலிருந்து தப்புவதே அதனுடைய வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாக இருக்கும். அவன் அதில் வெற்றி பெற்றால் அவன் நேசிக்கும் நபர்களுக்கு உதவ, கிடைக்கும் தருணங்களை உபயோகிப்பான்.

ஒரு குழந்தை, மார்க்க சம்பந்தப்பட்ட தரித்திரத்தில் பிறக்கும்பொழுது கல்வி அறிவுஇல்லாத நிலை பட்டினியில் அறிய தன் கண்களை ஏறெடுக்க மறுக்கிறான். திறக்கப்பட்ட, நீட்டப்பட்ட கரங்களில் தான் என்ன கொடுக்கக்கூடும் தேவன் என்ன கொடுப்பார். ஆனால், கடமை தவறாதவன், மரணம் வரை தன் முழு ஜீவியத்தை அணைத்துக் கொள்கிறான். பார்க்கவே மாட்டான்.

# சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

**ஜிம்மி ஜிவிடன்**

சிறு குழந்தைகளை ஞானஸ்நானப்படுத்துவது ஒரு மிகப்பெரிய உணர்ச்சி-பூர்வமான மனத்தை உருக்கும் செயல். குடும்பமாக ஒன்று கூடி பாரம்பரியங்களை நினைவு கூறுவார்கள். குழந்தையின் ஆவிக்குரிய பிறப்பை கொண்டாட ஞானஸ்நானம் உதவுகிறது. இந்த சந்தர்ப்பத்தை தகப்பனும் தாயும் எவ்வாறு நிராகரிக்கக்கூடும். இந்த சந்தர்ப்பத்தை ஏன் மத சம்பந்தப்பட்ட சடங்காக பின்பற்றக்கூடாது?

குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்தும் மேற்கூறிய அநேக உணர்ச்சி மிக்க காரணங்கள் எதுவும் தேவனிடத்திலிருந்து வரவில்லை. அதற்கு வேத வசனத்திலிருந்து எந்த அதிகாரமும் இல்லை. யூதர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விருத்த சேதனம் செய்ததைக்குறித்து வேதாகமம் கூறுகிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக எங்கும் கட்டளையாக சொல்லப்படவில்லை. அதற்கு உதாரணமும் இல்லை. விசுவாசிகள் மட்டும் ஞானஸ்நானம் பெற்றதாக புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு பின்பு வந்தது தான் குழந்தை ஞானஸ்நானம் என்னப்படுவது. அதுவும் கள்ளபோதனையின் அடிப்படையில் ஒரு மனிதனால் புகுத்தப்பட்ட வழக்கம். அப்படி புகுத்தப்பட்ட மனித கற்பனைகளை இயேசு கண்டித்துள்ளார். அவர் சொன்னார்! "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான் என்றார் (மத்தேயு 15:9). குழந்தை

ஞானஸ்நானத்திற்கு கொடுக்கப்படும் சரித்திர சம்பந்தப்பட்ட, மத சம்பந்தப்பட்ட விளக்கம். "குழந்தைகள் பாவத்திலே பிறக்கிறார்கள்" என்பதே. ஆதாமின் பாவம் மனுகுலம் முழுவதையும் (சிறு குழந்தைகள் உட்பட) கறை படுத்தியதாகவும், அந்த ஆதாமின் பாவக்கறை நீங்க சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதாக மனிதர் தவறாக போதிக்கின்றனர். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லையெனில் சிறு குழந்தைகள் கெட்டுப்போவார்கள் என்று அவர்கள் நினைத்தனர். இன்றைய நாட்களில் ஆரம்ப (ஆதாம்) பாவத்தை பற்றிய இந்த உபதேசம் சிலரால் மாற்றப்பட்டிருக்கிறது, பலரால் மறுக்கப்பட்டிருக்கிறது.

இந்நாட்களில், மற்றும் ஒரு மத சம்பந்தப்பட்ட தவறான உபதேசம் வெளிப்படையாக சொல்லப்படுகிறது. அது என்னவென்றால், குழந்தை ஞானஸ்நானம் ஒரு சாக்கிரமந்து, அதில் தேவனுடைய கிருபை சுதந்திரமாக பதில் கூறமுடியாத இடத்தில் செயல்படுகிறது என்று கூறுவர். எந்த மனிதனுடைய மறுரமொழி குறித்தும் அக்கறைகொள்ளாமல் இது முழுவதும் தேவனுடைய முயற்சி என்று கூறுவர். அப்படிப்பட்ட உபதேசம் வேதவசனத்திற்கு ஒத்திருக்காது. புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் கட்டளையிடப்பட்டுள்ளது. அதில் தனிமனிதனின் (முயற்சி) பதில் தேவைப்படுகிறது. (அப்2:38; 10:48; 22:16). ஞானஸ்நானம் விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே என்பதை இவை உறுதிபடுத்துகின்றன. (மாற்கு 16:16; அப் 16:31-33).

இந்த காரணங்களினிமித்தம் ஒரு புதிதாய் பிறந்த குழந்தை ஒரு கெட்டுப்போன பாவி அல்ல. அது பாவம் செய்யமுடியாது. ஏனெனில் அதற்கு எது சரி எது தவறு என்று தெரியாது. "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்;

அவர்களை தடை பண்ணாதிருங்கள்; பரலோக இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மத்தேயு 19:14). குழந்தை ஞானஸ்நானத்திற்கு வேதம் அனுமதி கொடுப்பதில்லை. பொது அறிவை வைத்துப்பார்த்தாலே இது தவறு என்பதை காட்டுகிறது.

"வயது வந்தவர்களுக்கு கொடுக்கும் ஞானஸ்நானம் ஒரு சட்டம் என்றும், குழந்தை ஞானஸ்நானம் ஒரு விதிவிலக்கு என்றும் அப்போஸ்தலர் காலத்திலே இருந்தது. ஐந்து நூற்றாண்டுகள் கழித்து ரோமர் வாழ் உலகத்தில் சபை பரவலாக ஸ்தாபிக்கப்பட்டபோது தான் குழந்தை ஞானஸ்நானம் பொதுவாக அமுலுக்கு வந்தது.

"ஷேப் - ஹெர் ஜோக் சொற்களஞ்சியம்."

குழந்தை ஞானஸ்நானம் தவறென்னப்பட்டாலும், குழந்தைகள் கெட்டுப்போன நிலையில் பிறக்கிறார்கள் என்ற தவறான நம்பிக்கையின் அடிப்படையில் வந்திருந்தாலும். ஆதி விசுவாசிகள் ஞானஸ்நா னத்தின் அவசியத்தைக் குறித்து கேள்வி கேட்கவுமில்லை இரட்சிப்பின் திட்டத்தில் ஞானஸ்நானத்தின் பங்கை கேள்வி கேட்கவுமில்லை.

# ஏன் ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும்?

(மத்தேயு 7:21-24; சங்கீதம் 107:43)

## தாமஸ் W. ஹார்டில்

முகவுரை:

1. ஒரு தனி மனிதன் கிறிஸ்தவனாக ஏன் இருக்கவேண்டும் என்பதற்கு அநேக காரணங்கள் உண்டு.
2. ஒவ்வொருவரும் கிறிஸ்தவனாக இருக்க வாஞ்சிக்க வேண்டும்.
3. ஒருவன் கிறிஸ்தவனாக ஏன் இருக்கவேண்டும் என்பதற்கு சில நல்ல காரணங்கள் இதோ.

பொருளடக்கம்:

I. ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டுமெனில், ஒரு பாவி (தன் பாவத்துடன்) தேவனை சந்திக்க தகுதியற்றவன். ஏன்?

1. பாவத்தினிமித்தம் மனிதன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறான். (ஏசாயா 59:1,2)
2. எல்லோரும் பாவம் செய்திருக்கின்றனர். (ரோமர் 3:23)
3. ஒரு பாவி காணாமற்போன (கெட்டுப்போன) நிலையில் இருக்கின்றான். (எபே 2:11,12).
4. தேவனை சந்திக்க அவன் ஆயத்தமாய் இருக்கவேண்டும். (எபி 9:27).
5. எந்தப்பாவமும் பரலோகத்திலே பிரவேசிக்க முடியாது. (வெளி 21:8).
6. பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23).

II. ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும் ஏனெனில் தேவன் இரட்சிப்பை கொடுத்திருக்கிறார்.

1. நாம் காணாமற்போன நிலையிலிருந்தாலும் இன்னமும் தேவன் நம்மை நேசிக்கிறார். (எபே 2:4).
2. பாவம் நிறைந்த இந்த உலகத்திற்கு தேவன் தம் குமாரனை அனுப்பினார். (யோவான் 3:16).
3. கிறிஸ்துவின் இரத்தம் இரட்சிப்பிற்கு (பாவமன்னிப்புக்கு) தேவைப்பட்டது. (எபிரேயர் 9:22).
4. கிறிஸ்துவின் இரத்தம் பாவத்தை மன்னிக்கிறது. (மத் 26:28).
5. பாவத்திலிருந்து கழுவப்பட கிறிஸ்துவின் இரத்தம் அளிக்கப்பட்டது. (1யோவான் 1:7).
6. கர்த்தர் தம்முடைய இரத்தத்தினாலே சபையை விலைக்கு வாங்கினார். (அப்போஸ்தலர் 20:28).

III. ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும் ஏனெனில் தேவன் இப்பொழுது இரட்சிப்பை தருகிறார்.

1. கிறிஸ்துவின் சுவிசேஷம் யாவரையும் இரட்சிக்க வல்லது. (மத் 28:19,20).
2. இந்த பெரிதான அழைப்பு எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. (மத் 11:28-30; அப் 10:34,35; யோவான் 1:11,12).
3. அருமையான வாக்குதத்தங்களுடன். (ஏசாயா 1:18; மாற்கு 16:15,16)
4. தேவனுக்கு கீழ்படிய இந்த நாள் இனியநாள். (2கொரி 6:2).

IV. ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும் ஏனெனில் வாழ்க்கை நிச்சயமில்லாதது

1. இந்த வாழ்வு நிச்சயமில்லாதது. ஆனால் மறுவாழ்வு நிச்சமானது. வாழ்வு ஒரு புகைக்கு ஒப்பானது (யாக்கோபு 4:13, 15)
2. நம்முடைய வாழ்வு நிழலுக்கு ஒப்பாக இருக்கிறது. (யோபு 14:1,2).
3. மாமிசமெல்லாம் புல்லைப்போலவும், புல்லின்

பூவைப்போலவும் இருக்கிறது. (1பேதுரு 1:24).

4. வாழ்வுக்கும், சாவுக்கும் ஒரு அடி தூரம் மாத்திரம் இருக்கிறது என்கிறார் தாவீது. (1சாமு 20:3).

5. நாம் நம்முடைய வருஷங்களை ஒரு கதையைப் போல கழித்துப்போடுகிறோம். (சங்கீதம் 90:9).

V. ஒருவன் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும் ஏனெனில் கிறிஸ்துவை தள்ளிவிடுவோருக்கு தண்டனை காத்திருக்கிறது.

1. ஆம், தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமாக வரும். (எபி 9:27).
2. நியாயத்தீர்ப்பின் காட்சி. (மத் 25:31-46).
3. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிது. (1பேதுரு 4:18).
4. கீழ்ப்படியாதவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள். (2தெச 1:7-9).
5. ஆம், பயத்தோடே எதிர்ப்பார்க்குதல் இருக்கும். (எபி 10:26,27).
6. நீங்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியம் தானா? நீங்கள் பயத்தோடே எதிர்ப்பார்க்குதலுக்கு காத்திருக்க வேண்டுமா? (யோவான் 10:10; 14:6; 6:37; வெளி 3:20; 22:14).

முடிவுரை:

1. நீங்கள் கிறிஸ்தவனாக இல்லையென்றால் இப்போழுது ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புகிறீர்களா?

2. ஒரு கிறிஸ்தவனாக மாற, செய்ய வேண்டுவதெல்லாம் நீங்கள் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து, பழைய பாவங்களை விட்டு முற்றிலுமாக தேவனிடத்தில் மனந்திரும்பி. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று வாயினாலே அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும் (நீரில் முழுக்கப்பட வேண்டும்). (யோவான் 8:24; லூக்கா 13:3; மத் 10:32; ரோம 10:9,10; அப் 2:38; 22:16). அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் (மாற்கு 16:16). இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் தாமே அவருடைய சபையிலே சேர்க்கிறார். (அப் 2:47; மத் 16:18).